



திருவள்ளுவராண்டு 2031 – சித்திரை, வைகாசி, ஆனி 2000



# தேடலுள்ள இலக்கிய ஆர்வலர்களே!!

## உங்களுக்கோர் புதிய களம் கலையோசை

மனச்சிறையில் தவமிருக்கும் சிந்தனைகள்......
கற்பனைச் சிறகடித்துப் பறக்கட்டும்

❖ கவிதையாய்

❖ கட்டுரையாய்

❖ சிறுகதையாய்

**எண்ணங்களை எழுத்தாக்குங்கள்**

**கரம் நீட்டி வரவேற்கிறது கலையோசை**

தொடர்புகளுக்கு:

பிறேமன்

**தமிழ்க்கலை மன்றம்**

Tamilischer Kultur Verein Bremen.e.V

Kalaiosai

**Postfach 660448**

**28244 Bremen**

**Tel.& Fax:0421-579 6195**

**E-Mail: kalaiosai@tamil.com**



*அச்சுப் பதிப்பு: கலையோசை கணனிப் பதிப்பகம் . 0421—5796195*

நாமும் நமக்கென்று நெறியாக் கலையுடையோம்
- மகாகவி



# கலையோசை

கலை 5 ஓசை 7

கலை இலக்கிய காலாண்டு இதழ்

# Kalaiosai

*Kulturliteratur Viertel jahrliches Magazin*

**பிறேமன் தமிழ்க்கலை மன்றம்**

**TAMILSCHER KULTUR VEREIN BREMEN e.V.**

Postfach 660448-
28244 Bremen.
Germany,
Tel&Fax:
0421_5796195
e-mail
kalaiosai@tamil.com

*வடிவமைப்பு*
**கலையோசை கணனிப் பதிப்பகம்**

*இணையாசிரியர்*
**இராஜன் முருகவேல்**
Rahjan Murugavel
0421\553727

*ஆசிரியர்*
**தமிழ்மணி**
**நாச்சிமார்கோயிலடி இராஜன்**
Nachchimarkoilady Rajan

## பரிசீலிப்போமா ?

*அரங்கேற்றத்தை முடித்துவிட்டால் ஆசிரியை என்ற பொய்முகம் நடனக் கலை பயில்வோருக்கு அணிவிக் கப்படுவது மரபாகிப்போய்விட்டது.*

*தமிழகத்தில் இருந்து வரவழைக்கப்படும் இசைப் பேழைகள்- ஆசிரியைகளுக்கு தொடர்ந்து நடனமாடவும். நடனம் பயிற்றவும் வரப்பிரசாத மாகிவிட்டதனால் மேற்கொண்டு கற்கவேண்டும். தாமாக புதிய பரிணாமங்களைத் தோற்றுவிக்க வேண்டுமென்ற ஆர்வமோ தேடலோ இல்லாமல் காலத்தை ஓட்டிவிடலாம். இதனால் பரிதாபத்திற்குரிய நிலைக் குத் தள்ளப்படப் போவது நடனக்கலையே.*

*பரதக்கலையைத் தொடர்ந்து பரிதாபத்திற்குரியது நாடகக்கலை. தமிழ் நாடகங்களைப் பொறுத்த வரையிலும். தென்னிந்திய திரைப்பட உற்பத்திச் சாலைகளின் தாக்கம் எம்மவர்களிடையே வேர்விட்ட தால் எப்படியும் நாடகம் எழுதலாம். நடிக்கலாம் என்ற நிலை உருப்பெற்றுள்ளது கவலைதரும் விடயமே. போதிய பயிற்சியின்மையும். சமூகத்திற்கு செய்தியேதுமற்ற உரையாடல்களும் நாடகங்களாக மேடை யேறுகின்றன. இசைக்கலை,. நடனக் கலை*

கலையோசையில் வெளிவரும் ஆக்கங்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பு.
ஆக்கங்களைச் சுருக்கவோ,அவசியம் ஏற்படின் திருத்தவோ ஆசிரியருக்கு உரிமையுண்டு:

போன்றே நாடகக் கலையும் சீரிய பயிற்சியினூடாக செழுமைப் படுத்தப் பட வேண்டிய கலையாகும்.

இவ்வாண்டு ஆனிமாதம் ஒன்பதாம் திகதி யேர்மனி பீலெவெல்ட் நுண்கலைக்கழகம் நடாத்திய சிறுவர் நாடக விழா புலம்பெயர் நாடகக். கலை வளர்ச்சிக்கு ஒரு முன்னோடியாக அமைந்திருந்தது..தமிழகத்தின் தஞ்சை, புதுவை பல்கலைக் கழகங்களில் நாடகத்துறையில் பட்டம்பெற்ற சிறுவர் நாடக வல்லுனர் வேலு சரவணன் அவர்களின் இருமாதப் பயிற்சிப் பட்டறையில் ஏறத்தாழ நாற்பது சிறார்கள் பங்கேற்று ஐந்து நாடகங்களை மேடையேற்றினர். சிறுவரோடு சிறுவனாக நெறியாளர் திரு வேலு சரவணன் அவர்களும் நாடகங்களில் இணைந்து நடித்தமை பங்கேற்ற சிறார்களுக்கு மிகுந்த உற்சாகத்தினை ஊட்டியதென்பதை மேடையிற் காணக்கூடியதாக இருந் தது.

புலத்தில் எம் கலைகள் வளர்த் தெடுக்கப்படவேண்டிய அவசியத்தினை யும் நாடகக்கலைப் பயிற்சியினூடாக சிறார்களிடம் தமிழுணர்வும், தன்ன ம்பிக்கையும், ஆளு மையும் வளரும் என்ற நம்பிக்கையினையும் பிரதம விருந் தினராக் கலந்து கொண்ட நாடகப் பேராசான், ஈழக்கூத்தர் ஏ.சீ. தாசீசியஸ் அவர்கள் தெரிவித் தார்.. சிறார்களுக்கு மட்டுமா தன்னம் பிக்கை, ஆளுமை, தமிழுணர்வு தேவை? எங்களுக்கு? ............

## உள்ளே..............


◆பரதக்கலையின் வளர்ச்சியும் இன்றைய தேவையும்
-சூ.யோ.பற்றிமாகரன் ...... 3

◆சுயச் சுரண்டல்
-இராஜன் முருகவேல் ...... 9

◆ஆனானப்பட்ட வெளிநாடு
-அனுபவக் குறிப்புகள்-
-சோழியான் ...... 18

◆பாவரங்கு
எரிந்த பக்கங்கள் மீண்டும் உயிர்பெறும்
-காண்டீபன் ...... 34
பிறேமன் செ.யோகநாதனின் கவிதைகள் ........ 36

◆ஓயாத அலைகள் மூன்று
-சில பதிவுகள்- ...... 38

◆கி.பி. அரவிந்தனின் கவிதை
-உறைதலாய்- ...... 39

◆கவிதையின் சமுதாயச் செயல்பாடு –டி.எஸ்.எலியட்
-தமிழில்:முரளி அரூபன் ... 40

◆ஆடைகள் வாங்குவதற்காக!
-பிரபாமணாளன் ...... 53

◆மார்க்ஸீயமும் இலக்கிய விமர்சனச் சமகாலச் செல்நெறியும்
-பேராசிரியர் கா.சிவத்தம்பி.. 59

◆நாயன்மார் பதில்கள் ....... 73

# பரதக்கலையின் வளர்ச்சியும் இன்றைய தேவையும்

-சூ.யோ.பற்றிமாகரன்
*Special Diploma (University of Oxford), B.A., B.Sc.*

பரதக்கலை தமிழர் தொல் கலைகளில் முக்கியமான ஒன்று. தமிழரின் இறையியல் சிந்தனைகளுடனும் இலக்கியச் சிந்தனைகளுடனும் பின்னிப்பிணைந்த வளர்ச்சியாக பரதக் கலையின் வளர்ச்சி விளங்குகிறது.

கனித்த புருவமும் கொவ்வைச்
  செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
  மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்
  பாதமும் காணப்பெற்றால்
மனிதப்பிறவியும் வேண்டுவதோ
  இம்மாநிலத்தே.

என இறைவனின் ஆடல் அழகை அற்புதத் தமிழ்க் கவிதையாக்குகிறார் திருநாவுக்கரசர். ஆம், இறைவனையே ஆடற் கலையின் தலைவனாகக் கொள்ளும் பாரம்பரியம் பரதக்கலையின் பண்பாடாக உள்ளது. இந்த ஆடற் தலைவனாக நடராஜ மூர்த்தியாக சிவனைச் சித்தரிக்கும் செப்புச் சிலைகள் சோழப் பேரரசின் காலத்திலும் அதற்குப் பிறகும் (10 முதல் 14 நூற்றாண்டு வரை) தமிழ்நாடு எங்கும் பெருமளவில் இருந்தமையை புதைபொருள், தொல்பொருள் ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. 13ம் நூற்றாண்டின் முற்கூறிலிருந்து 17ம் நூற்றாண்டின் 1621ல் போர்த்துக்கேய காலணித்துவத்திடம் வீழ்ச்சி அடையும்வரை வீறுகொண்டு திகழ்ந்த யாழ்ப்பாண அரசு எனும் தமிழ் அரசிலும் பரதக்கலை எழுச்சியுடன் காண முற்பட்டமைக்குச் சான்றுகள் உண்டு.

பாதமலர் கன்றச்
சிலம்பு கொஞ்சக்
கங்கை உடலம் பதற
மன்று நடமாடும் வரதபரன் (282_284)

என தமிழீழ இலக்கியங்களுள் பழமைமிகு இலக்கியமான கைலாய மாலை ஈசனின் பரதக் கோலத்தைப் பாடுகின்றது. அத்துடன் தென் தமிழீ

முத்து கண்ணகி வழிபாட்டுக்குச் சான்றாக எழுந்த தமிழீழப் பழைய இலக்கியமான கண்ணகி வழக்குரை காவியம், மாதவி எண், எழுத்து இசை முதலிய கலைகளுடன் 11 கூத்துகளையும் பயின்றாள் எனக் கூறுவதுடன் 'பரத நெறியாளன்' என்ற சொற்றொடரையும் தமிழிலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

ஆடகச் சிலம்பொலி பரவக் கிண்கிணி
பாடகச் சீறடி பரதப்பண்ணுறச்
சூடகக் கரங்களிற் கண்கடோய் தர
நாடகத்தியல் பெற நாறு நாட்டினள்

எனப் பரதம் பயின்ற பண்டைத் தமிழீழத்தைப் பாடுகிறது. 17ம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டதாகக் கொள்ளப்படும் திருச்செல்வர் காவியம் 'நச்சுவிழி நாட்டியம் செய்வார்', 'ஆடும் மாதர் வலம்வர' எனப் பரத நாட்டியம் குறித்து வையா பாடல் கூறுகிறது. 'நடன விதந்தரு நளினத் தார்க்கு' என தட்ஷண கைலாய புராணம் நடராஜர் திருநடனத்தைக் குறிப்பிடுகின்றது. இவை எல்லாம் தமிழீழ மக்களிடை பரதக்கலை மக்கள் கலையாகத் திகழ்ந்தமைக்கான வரலாற்றுச் சான்றுகளாக உள்ளன.

## தொல்காப்பியமும் பரதமும்

இனித் தமிழர்களின் முதல் எழுத்துருவ ஆவணமாக உள்ள தொல்காப்பியம் உணர்ச்சித் தாண்டல்களால் (Stimulus) உருவாகும் உள்ளக் கிளர்ச்சித் துலங்கல்களை (Response) இனங்கண்டு தூண்டவே துலங்கலுக்குக் காரணமாகின்றது. எனவே இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய மனித உணர்வு என முடிவுசெய்து அந்த மனித உணர்வை மெய்ப்பாடு எனக் கூறிச் செல்கின்றது.

நகையே அழுகை இழிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பாலெட்டாம் மெய்ப்பாடென்ப

எனக்கூறும் தொல்காப்பியம். அவ் எண்வகை மெய்ப்பாடுகளையும் அவை வெளிப்படுவதற்கான மனிதச் செயற்பாடுகளையும் சுட்டிக்காட்டுகிறது.

| செயற்பாடு | தோன்றும் மெய்ப்பாடு |
|---|---|
| இகழ்தல், இளமை, அறிவின்மை, மடமை | நகை |
| இழிவு, இழப்பு, தளர்ச்சி, வறுமை | அழுகை |
| மூப்பு, பிணி, வருத்தம், மென்மை | இழிவரல் |
| புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் | வியப்பு |
| அணங்கு, விலங்கு, கள்வர், இறைவன் | அச்சம் |
| கல்வி, தறுகண்மை, புகழ்மை, கொடை | பெருமிதம் |
| உறுப்புகளைக் குறைத்தல், குடிப்பிறப்பிற்கு கேடுசூழ்தல் கோல் கொண்டலைதல், கொலைக்கு ஒருப்படுதல் | வெகுளி |
| செல்வநுகர்ச்சி, ஐம்புலநுகர்ச்சி, காமநுகர்ச்சி, விளையாட்டு | உவகை |

இம் மெய்ப்பாடுகளை வெளிப்ப

டுத்தும் அற்புதக் கலைதான் பரதக் கலை. மெய்ப்பாடுகள் மொழி, இன, கலாச்சார தன்மைகளைக் கடந்த மனிதப் பொதுமைகளாக இருப்பத னால் பரதக்கலையும் இவ் எல்லைக் கோடுகளைக் கடந்து மனிதக் கலை யாக எந்நாட்டவர்க்கும் எம்மொழிய வர்க்கும் விளங்கக்கூடிய ஆற்றல் பெற்றுத் திகழ்கிறது. இதனால் தொல்காப்பியரது மெய்ப்பாட்டியல், வாழ்க்கைக்கும் இலக்கியத்திற்கும் இலக்கணமாகத் திகழ்வதுபோல் பர தக் கலையும் கலைகளுக்கு எல்லாம் இலக்கணமாகத் திகழ்கிறது. அத னால்தான் பரதக் கலையில் தேறிய ஒருவர் அரங்கேறியவராக சமுதாயத் தில் போற்றிப் புகழப்படுகின்றார். அத னால் அரங்கேற்றம் என்பதும் ஒரு பட்டம் பெறும் சடங்காக தமிழர் சமுதாயத்தால் போற்றப்பட்டு பெருவி ழாவாகக் கொண்டாடப்படுகிறது.

## கலைகளும் பொருளாதார அமைப்புகளும்

கலைகள் ஒவ்வொன்றும் மனித வளர்ச்சியுடன் தொடர்புடையன. மனி த வளர்ச்சியின் செய்நெறிகள் பொரு ளியல் காரணிகளால் நிர்ணயிக் கப்படுபவை. இவ்வகையில் ஆண் டான்– அடிமை, நிலக்கிழார்– விவ சாயி, முதலாளி– தொழிலாளி என்கி ற அமைப்புகளினூடாக மனித வர லாறு நகரும்பொழுது கலைகளும் அதற்கு ஏற்ப வளர்ச்சி கண்டன என்பதே வரலாறு. இதனால் மெய்யு ணர்வை அடையும் கலையாக தமி ழரிடை நிலவிய பரத நாட்டியமும் இந்த சமூக ஏற்றத் தாழ்வுகளின் சாயல்களை தன்னகத்தே தாங்கி வளர்ந்தது. இதனால் இறைபணி யாளர்களாக ஆலய நடன மாதர்க ளைப் போற்றி அவர்களுக்கு இறை வனைத் தவிர வேறு தலைவன்



இல்லையென கலைத்துறவறம் வழங் கிய தமிழர் சமுதாயம் காலப்போக் கில் அவர்கள் காசுப் பொருளாக மாற்றப்பட்ட அவல வரலாற்றையும் தரிசித்தது. இந்த நிலை கல்வி வளர்ச்சியுடன் சரியத் தொடங்கி மீளவும் 21ம் நூற்றாண்டில் நடனக் கலை புனிதக்கலையாக வளரத் தொடங்கியது.

## கலையும் தமிழர் அரசியலும்

மனிதனுடைய ஒவ்வொரு நிலை யும் அவனது அரசியல் நிலையினா லும் நிர்ணயிக்கப்படுகின்றது. இதற்

கேற்ப தமிழர் முடிகொண்டு கொடி யேந்தி அரசாண்ட காலங்களில் தமிழரின் பரதக் கலையும் திசையெட்டும் புகழ் பரப்பி வளர்ச்சி கண்டது. அதேபோன்று தமிழர் மேல் அந்நியர் ஆட்சிகள் ஆக்கிரமிப்பு செய்த போதெல்லாம் பரதக்கலையும் கூனிக் குறுகி நோக்கிழந்து போக்கிழந்து பிழைத்து வந்தமையை வரலாற்றில் காணலாம். எழுச்சிக் காலங்களில் பரதக் கலை, கலையும் மக்கள் வாழ்வில் ஒரு நிலை என்பதை வெளிக் காட்டியது. வீழ்ச்சிக் காலங்களில் பரதக்கலை பொலிவிழந்து அழகியற் கலையாக ஆடலழகிகளின் மேனியசைவுகளில் ஒளிந்து கொண்டது.

## திரையும் பரதமும்

இந்தக் கலை கலைக்காக என்ற உண்மையுடனேயே திரையுலகினில் நுழைந்தது. ஆனாலும் தமிழகத்தில் பெரியார் இராமசாமி அவர்கள் எழுப்பிய பகுத்தறிவு அலைகளும் அதற்கு ஈடுகொடுக்க எடுத்த மொழி, மத, கலாச்சார மறுசீரமைப்புகளும் திரையில் பரதக் கலையை அரசியல் சூழ்ச்சிகளை முறிவடைய வைக்கும் ஊடகங்களாக மக்கள் முன் காட்டுகின்றன.

## மக்கள் எழுச்சியும் இலக்கிய மலர்ச்சியும்

அச்சு வாகனங்களில் தமிழ் எழுத்தின் பவனி பள்ளிக்கூடங்களின் பெருக்கம் நிலமானிய முறைகளின் தளர்வு பத்திரிகைத்துறையின் வளர்ச்சி சமூகத் தொடர்பு சாதனங்களின் எழுச்சி திராவிட அரசியலின் வரவு தமிழரசு இயக்கங்கள் சிங்களப் பேரினவாதத்தின் அழுத்தங்கள் இவைகளின் ஊடாக தமிழ் மக்களிடை தேசியம், தாயகம், தன்னாதிக்கம் என்ற உணர்வுகள் ஊற்றெடுத்தன. இந்த ஊற்றுக்கள் தமிழிலக்கிய இலக்கண உலகில் மட்டுமல்ல தமிழ்க்கலை உலகிலும் 'மக்கள்' என்ற செயற்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்தன. அதிலும் குறிப்பாக 'மக்களின் யதார்த்தங்கள்'



கலைகள் ஊடாக வெளிக்கொண்டு வரப்படல் வேண்டும் என்ற தேவையை ஏற்படுத்தின. தமிழீழத்தில் இதற்கும் மேலாக இலக்கியம் விடுதலையை வெளிப்படுத்த வேண்டிய வரலாற்றுத்தன்மை தோற்றம் பெற்றதும் அல்லாமல் ஸ்ரீலங்காப் பேயரசின் ஆக்கிரமிப்புக்களை, அநியாயங்களை, கொடுமைகளை வெளிப்படுத்தி சுட்டெரிக்கும் ஊடகமாகவும் கலை போராடத் தொடங்கியது.

தொடங்கியது. இந்தக் கலைவழி மக்கள் நிலை உணர்த்தி அரசியல் விழிப்புணர்வு ஊட்டுகின்ற போராட்டப்போக்கு இந்திய வல்லாதிக்கம் அமைதிப்படை என்ற பெயரில் தமிழீழ மக்களின் விடுதலை மூச்சை நசுக்கிய வேளையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை இலக்கிய பண்பாட்டு முயற்சிகள் மூலம் முன்னெடுக்கப்படத் தொடங்கியது.

இவ்வாறு கலையும் விடுதலைப் போராட்டக் கருவியாக மக்களால் மாற்றப்பட்டதன் பின்னர் தமிழ் மக்கள் உலகில் எங்கு வாழ்ந்தாலும் கலைப் பணியூடாக அதர்மத்தை அநியாயத்தை பொய்மையை அறியாமையைச் சுட்டுப்பொசுக்கும் கலைத் தீயை மூட்டி வளர்த்து வருகிறார்கள்.

ஆடற் கலையின் தலைவனாக தமிழ்க் கலையுலகு சுட்டிக்காட்டும் நடராஜரின் தூக்கிய திருப்பாத அழகுக் கோலமும்கூட, விடுதலைக்கு உரமூட்டும் உன்னத கோலமாகக் காட்சி அளிக்கின்றது.

## நடராஜர் நடனத்துவத்தில் விடுதலை

நடராஜர் நடனக்கோலம் பல தத்துவங்களின் குறியீடு என்பது ஆய்வாளர் கருத்து. நடராஜரின் ஒரு கரம் உடுக்கினை அடிக்கிறது. மறு கரம் அனல் ஏந்தி நிற்கிறது. இடது கால் அறியாமையின் உருவான முகலனை அழுத்தி நிற்கிறது. வலது கால் விடுதலையின் குறியீடாக இயல்பாகவே அண்டத்தில் தூக்கப்பட்டு காட்சியளிக்கின்றது. மூன்றாவது கரம் தூக்கிய திருப்பாதத்தை சுட்டிக்காட்டி விடுதலைமீது நம்பிக்கை ஊட்டுகிறது. நான்காவது கரம் அருள் பொழியும் அபய முத்திரைக் கோலம் காட்டுகிறது. முழு உருவுமே விடுதலைத் தீயை மூட்டும் இயற்கையை உருவாக்குவதால் சுற்றிலும் தீ நாக்குகள் இடமிருந்து வலமாக ஒளிர்கின்றன. இறைவனின் திருமுகத்தில் ஒரு காதில் ஆண்கள் அணியும் காதணியும் மறு காதில் பெண்கள் அணியும் காதணியும் காணப்பட்டு ஆண் பெண் சமத்துவமும் மிளிர்கிறது. விண்ணாடும் கற்றைத் தலைச் சடையில் கங்கை அமர்ந்து அருள் பாலிக்கும் கோலம் காட்டுகிறான். உச்சத்தலை மயிரினிலே மதி சூடிநிற்கிறது திருவுருவம்! இறைவனின் திருவுருவம் தூக்கிய திருப்பாதம் அபயமளிக்கும் முத்திரைக் கரம் மூன்றும் ஒரு முக்கோண தளத்தில் அமைந்துள்ளன.

ஆக கூட்டு மொத்தமாக எடுத்த நோக்கின் காலத்தின் எத்திசைவுக்கும் இயங்குவது படைப்பு என்கிற உண்மையை உடுக்கு அடிக்கும் கையும் அறியாமை, பொய்மை மிதித்து அழிக்கப்பட வேண்டும் என்பதை முகலன் மேல் பதித்த திருப்பாதமும், ஆண் பெண் விடுதலை உட்பட அத்தனை விடுதலையும் எய்தப்பட வேண்டும் என்பதை தூக்கிய திருப்பாதமும் ஆண் பெண் காதணிகள் ஆண் பெண் காதணிகள் அணிந்த திருமுகமும் எடுத்து விளக்குகின்றது. கருணை (கங்கை) அபயமளிக்கும் கை, கால ஆவர்த்தனம் விளக்கும் உடுக்கடிக்கும் கை, நம்பிக்கை ஊட்டும் கை அனைத்தம் வலது புறமாகவும் ஆனால் ஏந்தும் கை இடது புறமாகவும் அமைந்துள்ளது. கருணை,

நம்பிக்கை ஒழுங்குமுறைகள் விடுதலையை ஏற்படுத்த அனுமதிக்கப்படாவிட்டால் விடுதலை அனல் சுட்டெரித்து விடுதலை வாழ்வை வளர்க்கும் என்பதை வெளிப்படுத்தும் விதத்தில் கைகளின் அசைவுகள் உள்ளன.



எனவே, சுருக்கமாக எடுத்து நோக்கின் பரதக்கலை விடுதலை வாழ்வுக்கு வழிகாட்டும் கலை. அன்பு, கருணை, ஒழுங்குமுறை, நம்பிக்கை தகர்க்கப்படும் பொழுது விடுதலை உணர்வு அனலாக எழுந்து விமர்சனத்திற்கு விடுதலையை அளிக்கும் அறியாமையை மிதித்தொழிக்கும் என்பதற்கு உத்தரவாதம் நடராஜர் தத்துவம். நடராஜர் தத்துவத்தைக் கொண்டு விஞ்ஞான உலகின் முக்கிய கணிதச் சமன்பாடான ஐன்ஸ்டீனின் E=MC ஐ கலாயோகி ஆனந்த குமாரசுவாமி உட்பட பலர் விளக்க முற்பட்டனர். ஆம் பரதக்கலை ஒரு சக்தி பிறப்புத்தான். விடுதலைச் சக்தியை மனிதனுக்கு அளிக்கும் அற்புதக்கலை. இந்த உண்மை தமிழர் வீழ்ச்சியுடன் மறக்கப்பட்டு தற்போது தமிழீழ மக்களின் எழுச்சியுடன் மீளவும் உணரப்படுகின்றது.

---

**6.06.** சுவீடன் தேசிய தினம்

★★★

**10.06.** போர்த்துக்கல் தேசிய தினம

★★★

**12.06.** பிலிப்பைன்ஸ் தேசிய தினம்

★★★

**23.06.** லக்ஸ்சம்பேக் தேசிய தினம்

★★★

**25.06.** மொசாம்பிக் தேசிய தினம

★★★

**26.06.** மடகஸ்கார் தேசிய தினம்

★★★

**1.07.** கனடா, புருண்டி, ருவாண்டா தேசிய தினம்

★★★

# சுயச் சுரண்டல்

-இராஜன் முருகவேல்

தாயகத்திலே சுதந்திரத் தீயின் தாக்கத்தைத் தாங்கிப் பொருதத் திராணியற்று, மாற்றுத் தேசங்களிடம் மானத்தைவிட்டுக் கெஞ்சிக் கூத்தாடி, மண்டியிடாத குறையாக வாங்கிய ஆயுதங்களின் உதவியுடன் தினம் தினம் ஆக்கிரமிப்பாளர்கள் நிகழ்த்தும் எறிகணைகளுக்கும் விமானக் குண்டு வீச்சுகளுக்கும் இடையே அகப்பட்டு அநியாயமாக உயிர்துறக்கும் அப்பாவித் தமிழர்களைத் தவிர— அவற்றினின்றும் தப்பவெனத் தமது உறவுகளுடன் இடம் விட்டு இடம்பெயர்ந்து அலையும் தமிழர்களுக்குத்தான் நிமிடத்துக்கொரு பிரச்சனைகளாகப் பொழுதுகள் அவலங்களாகின்றனவென்றால்— பசிக்கும் பட்டினிக்கும் நோய்க்கும் இறப்புக்கும் அஞ்சித் தமது இருக்கைகளுக்குப் பாதுகாப்புத் தேடவென வெளிநாட்டில் தஞ்சம் புகுந்த தமிழர்களுக்குத்தான் எத்தனை பிரச்சனைகள்?!

வெளிநாடு நிம்மதி தரும் என்ற எண்ணங்களுடன் வாஞ்சை பொங்க வந்தவர்களுக்குத்தான் பிரச்சினைகளுடன் கூடிய அனுபவங்கள் எத்தனை, எத்தனை?!

வீட்டுக்கு வீடு வாசற்படி என்பார்கள். ஆனால் சகல வாசற்படிகளிலும் அல்லவா பிரச்சினைகள் புதுப்புது உருவங்களில் உட்கார்ந்திருக்கிறது!

எதற்கெடுத்தாலும் வேகம்... வேகம்... மூச்சுவிடுவதற்காக ஓய்வெடுக்கக்கூட முடியாமல் நேரத்துடன் போட்டிபோட்டு வாழ்வதற்காக ஓட வேண்டியுள்ளது. அவ்வாறு ஓடியோடி உழைத்தாலும், பெறுமதியான ஐரோப்பியப் பணங்களைக் கூலியாகக் கண்டாலும், அவை புதுப்புதுத் தேவைகளுக்காகவும் அத்தியாவசிய நிறைவேற்றுதல்களுக்காகவும் கைகளை விட்டோடிப் பறந்து, பற்றாக் குறையாகி, அதனுள் பிரச்சனைகள் முளைவிட்டுப் பூதாகரமாகி பல புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களை ஆட்டிப்படைக்கும் சுமைகளுடனான நிகழ்வுகள்தான் எத்தனை, எத்தனை?!

பணம்தான் பிரச்சினையா என்றால், அதைவிட புதிதாக அறிமுகமாகும் வெளிநாட்டவருக்கான சட்

டங்களும், நீதி விசாரணைகளும், விசாக்களின் தராதரங்களுமல்லவா வெவ்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றன?!

விமலனின் பேச்சைக் கேட்கும்போது ஆதவனால் அப்படித்தான் எண்ணத் தோன்றியது.

"குகன்ரை நிலமையைப் பார்த்தியே.... ஜேர்மனிக்கு வந்து நாலு மாதம்தான் ஆகுது. அதுக்கிடையிலை நாட்டைவிட்டுப் போ எண்டு கடிதம் வந்திருக்கு. நாட்டிலை கொளுந்து விட்டெரியிற பிரச்சினையள் உலகம் முழுக்க வானொலி ரெலிவிசன் எண்டு எல்லாருக்கும் தெரிஞ்ச விசயமாயிருக்கேக்கை... அங்கை வானத்திலையிருந்து குண்டுகளைப் போட்டு அப்பாவிச் சனங்களை கூட்டங்கூட்டமாக அரச பயங்கரவாதம் அழிச்சுக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலை குகனுக்கு அங்கை பிரச்சினை இல்லை, சொந்த நாட்டிலை வாழலாம், அதனால் திருப்பி அனுப்பப் போறதாய் கடிதம் வந்திருக்கு. ஏற்கெனவே திருப்பி அனுப்பினவங்களை கட்டுநாயக்கா விமான நிலையத்திலையே அவங்கள் கைது செய்து சித்திரவதை செய்ததுகளை எல்லாம் தெரிஞ்சுகொண்டும் அங்கை பிரச்சினை இல்லை, நாட்டிலை வாழலாம், போ எண்டு கடிதம் போட்டிருக்கிறாங்கள்."

"அந்த அவலங்களுக்குள்ளாலை தப்பிப் பிழைக்கவெண்டு உயிரைக் கையிலை பிடிச்சுக் கொண்டு கடனோ தனியோபட்டு இங்கை வந்தால், நாட்டிலை பிரச்சினையில்லை எண்டு கலைக்கிறாங்கள்...."

"இதுகளைப்பற்றிக் கதைக்க இந்த அகதித் தமிழர்களுக்காக ஆர் இருக்கினம்? அவனவன் தங்கடை வசதியளும் வாய்ப்புகளுந்தான் முக்கியம், மற்றவன் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை எண்டு மனம்போன போக்கிலை திரியேக்கை... ஓ... எங்கடை ஆக்களைத்தான் சொல்லுறன்... வசதியான விசாக்களோடை ஸ்ரீ லங்காவுக்கு சுற்றுலா போறவையும்... அங்கையிருந்து பரிசுப் பொருட்களை வாங்கியந்து 'அவுஸ்லாண்டர் பொலிஸு'க்கு கொடுத்து மகிழுற முட்டாள் சனங்களும் எங்களுக்குள்ளை இருக்கேக்கை... அங்கை உண்மையாய் பிரச்சினை எண்டால் எப்பிடி நம்புவாங்கள்...'

"இஞ்சை வரேக்கை நாங்களாய்த்தான் வந்தம்... இலங்கைத் தமிழனாய்ப் பிறந்த ஒரேயொரு காரணத்துக்காக, பிரிட்டிஷ்காரன் வெளியேறின நாள்முதலாய் கொஞ்சங் கொஞ்சமாய் பாதிக்கப்பட்டு, இப்ப எல்லா வழியலாளையும் தாக்கப்பட்டு... ஒடுக்கப்பட்டு அங்கை வாழேலாது எண்டுதானே அரசியல் தஞ்சம் கேட்டம். அரசியல் தஞ்சம் கேக்கேக்கை நாங்கள் எல்லாரும் ஒட்டுமொத்தமாய் அங்கை பிரச்சினை, வாழ வழியில்லை எண்டு ஒற்றுமையாய் வாக்குமூலம் கொடுத்தம். திருப்பி அனுப்பேக்கைமட்டும் 'அவனைத்தானே அனுப்புறாங்கள்... எனக்கு விசா கிடக்கு' எண்டு ஆளாளுக்கு வேற்றுமை காட்டுறது எந்தவிதத்திலை நியாயம்? நாங்கள்தான் எல்லாரும் சேர்ந்து உதுக்கெதிராய் ஒற்றுமையாய் ஓங்கிக் குரல் கொடுக்கவேணும்..."

"கேக்கிறதுக்கு நல்லாய்த்தான் கிடக்கு... வீரபாண்டிய கட்டப்

பொம்மனுக்கு ஒரு எட்டப்பன்... பண்டார வன்னியனுக்கு ஒரு காக்கை வன்னியன்... தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஒட்டுப் படைத் தமிழ்க் குழுக்கள்... திருப்பியனுப்பப்படும் அகதித் தமிழருக்கு ஸ்ரீலங்காவுக்கு உல்லாசப் பயணம் செய்யும் விசா வசதியுள்ள பழைய அகதித் தமிழர்கள்... இப்பிடி கால காலமாக தமிழருக்கு தமிழரே எதிராக இருக்கேக்கை எப்பிடி தமிழினம் உருப்பட முடியும்?"

"சிலபேர் ஊர்வலம் அது இதெண்டு குரல் கொடுக்கத்தான் செய்யினம். சிலபேர் குரல் கொடுக்கிறமாதிரி ஏதோ ஒரு ஐஞ்சு நிமிசம் தலையைக் காட்டிப்போட்டுத் தங்கடை வேலைவெட்டியெண்டு ஓடுவினம். பிறந்தநாள் கொண்டாட்டங்களுக்கும் கலியாண வீடுகளுக்கும் நேரத்தை ஒதுக்கிற அக்கறையிலை ஒரு துளிகூட, இப்பிடியான முக்கிய பிரச்சினைகளுக்காய் செலவழிக்கிறதிலை இல்லை... இண்டைக்கு கனபேர் வெளிநாடுகளிலை புதுப்புது வசதிகளை அனுபவிக்கிறதுக்கு அத்திவாரமாய் இருக்கிறதும் அங்கை ஊரிலை தங்களை அர்ப்பணிக்கிற உயிர்கள் எண்டதைக்கூட எண்ணிப் பார்க்கினமில்லை... கனபேர் இதுகளைப்பற்றி எல்லாம் அக்கறைப்படாமை தங்களுக்கும் இதுகளுக்கும் சம்பந்தமில்லை எண்டமாதிரி வாழினம்..."

"ஆனா அவைக்கும் ஒருநாளைக்கு இப்பிடிக் குரல் கொடுக்கிறத்துக்கு ஆள்தேவைப்படும் எண்டதை இப்ப உணராட்டியும், எப்பவாலும் உணரக் கூடிய நேரம் ஒண்டு அவைக்காகக் காத்திருக்குது

---

சிக்கனமாகவும் எளிமையாகவும் வாழும் வழியைத் தன் பிள்ளைகளுக்குக் கற்றுத் தரும் தந்தையானவன், அளவற்ற செல்வத்தை விட்டுச் செல்லும் தந்தையைவிட மேலானவன்.

– வில்லியம் பென்

ஆசையில்லாமல் செயல்பட முடியும். பற்றுதல் இல்லாமல் செயல்பட முடியும். செருக்கு இல்லாமல் சான்றோர்களால்தான் செயல்பட முடியும்.

– அரவிந்தர்

நல்ல மரங்கள் நல்ல கனிகளைக் கொடுக்கும். நல்ல மக்கள் நல்லதையே செய்வார்கள்.

– இயேசு நாதர்

நல்ல அறிவு எந்த மூலையில் எவ்வளவு தூரத்திலிருந்த போதிலும் அதைத் தேடிச் செல்.

– நபிகள் நாயகம்

மரம் தனக்காகப் பழுப்பதில்லை. ஆறு தனக்காக ஓடுவதில்லை. சான்றோர் தமக்காக வாழ்வதில்லை.

– குருநானக்

உறவினர்களை, நண்பர்களை நேரில் புகழாமல் மற்றவர்களிடமே போற்றிப் பேச வேண்டும். வேலையை முடித்த பிறகே ஊழியரைப் பாராட்ட வேண்டும்.

– வட மொழிப் பாட்டு

ஆதவன்" என்று உறுதியுடன் கூறினான் விமலன்.

"உண்மைதான். இந்த நாட்டிலை வேலையில்லாத் திண்டாட்டங்களும் பொருளாதாரப் பிரச்சினையளும் கூடிக் கொண்டே போகேக்கை, என்ன விசாவோடை இருந்தாலும் 'வெளிநாட்டவனே வெளியேறு' எண்டுதான் விரட்டியடிப்பாங்கள்."

"ஆனால் அவங்கள் விரட்டியடிக்க முந்தியே எங்கடையள் சிலது தங்களுக்கிடையிலையே அடிபடுதுகளே..." என்று வெறுப்புடன் கூறினான் விமலன்.

"ஏன்... என்ன பிரச்சினை... ஆர் அடிபட்டது?"

"இஞ்சை அடிக்கடி வெட்டுக் கொத்துகள் அடிபிடியள் எண்டு நெடுகத்தானே நடக்குது. தாயகத்திலை எத்தினையோ சனங்கள் ஒருவேளை சோத்துக்குக்கூட வழியில்லாமை எந்தநேரம் என்ன நடக்குமோ எண்ட பயப்பிராந்தியோடை உயிரைக் கையிலை பிடிச்சுக் கொண்டு வாழுதுகள். தமிழன்ரை ரத்தத்தைக் குடிக்கிறதிலை ஆளும் கட்சி எதிர்க்கட்சி எண்ட வித்தியாசமில்லாமை சிங்களக் கட்சியள் எல்லாம் கைகோர்த்துக் கொண்டு நிக்குதுகள். ஆனால் நாங்கள் இஞ்சை... எந்த ரத்தத்தைக் கண்டு தப்புறதுக்காக வந்தோமோ... வந்த நாட்டிலையே எங்கடை இனத்தின்ரை ரத்தத்துக்காக அலைஞ்சு கொண்டிருக்கிறம்..."

"எங்கடையளிலை கொஞ்சப் பேர் அடிபட்டாலும் கனபேர் சண்டை போட்டாலும் வெளியிலை தமிழன் அடிபடுறான் எண்டுதானே சொல்லுவாங்கள்.... போனமாதம் கூட... ஒரு இடத்திலை ஒரு கொலை..."

"கொலையோ...?!"

"ஓம் கொலைதான்.... ஒருத்தன் ஜேர்மனிக்கு வந்து ஆறுமாதம்தான் இருக்கும். ஊரிலை மூண்டு பிள்ளையள் இருக்காம். வந்த இடத்திலை உற்ற நண்பனாகப் பழகினவனைக் குத்திப்போட்டான்.... ஒரு குத்தில்லை.... நாலு குத்து..."

"ஒருத்தரும் மறிக்கேலையே..."

"மறிக்கேலை... அதுமட்டுமில்லை... கண்டவன் எவனும் சாட்சி சொல்லக்கூடப் போகேலை.... தங்களுக்கேன் வீண் சோலி எண்டு ஒதுங்கிவிட்டார்கள்.... ஊரிலை எத்தனையோ உயிர்களின்ரை வேதனைகளையும் ரத்தங்களையும் காட்டி இந்த நாட்டிலை வாழ வசதியாய்க் குந்தியவை, கண்முன்னாலை நடந்த கொடூரத்தைக் கண்டும் காணாத மாதிரி தூர ஓடீட்டாங்கள்... இது தான் உலகம் எண்டு சொல்லுறதா... இல்லாட்டி இதுதான் புலம்பெயர்ந்து வாழுற தமிழன் எண்டு சொல்லுறதா?"

"ஏன் குத்தினவன்?"

"எல்லாத்துக்கும் காசுப் பிரச்சினைதான் காரணம்... குத்தினவன் மற்றவனுக்கு காசு கொடுக்க வேணுமாம்... ஆக்களுக்கு முன்னாலை காசைத் திருப்பித் தரச் சொல்லிக் கேட்டானாம்... ஆக்களுக்கு முன்னாலை காசு கேட்டு தன்னை அவமானப்படுத்திப் போட்டான் எண்டு குத்திப் போட்டானாம்.... எங்கடை ஆக்களின்ரை ரோசமும் பெருமையும் போலிக் கௌரவங்களும் மேதாவித்தனங்களும் சண்டித்தனங்களும் எங்கடை இனத்துக்குள்ளை மட்டுந்தான்... வெளியாலை உதெல்லாம்

செல்லாக்காசு..."

"காசைக் கொடுத்துச் சாவை வேண்டியிருக்கிறான்.... பாவம்" என்று பரிதாபப்பட்டான் ஆதவன்.

"காசுதான் கனபேற்றை பிரச்சினையளுக்குக் காரணமாய் இருக்குது..." என்று விமலன் கூறியதைக் கேட்டபோது, சுகுமார் பரிதாபத்துடன் ஆதவனின் மனதில் தோன்றிக் கெஞ்சினான்.

ஒரு கிழமை இருக்கும். சுகுமாரைச் சந்தித்தான் ஆதவன். முகம் களையிழந்து வாடிப் போனவனாய் காணப்பட்டான். பேசிக் கொண்டிருக்கும் போதே அடிக்கடி மேலே வெறித்துப் பார்த்துச் சிந்தனையில் ஆழ்ந்தவனாய் காணப்பட்டான்.

ஏதோ ஒரு பிரச்சினையில் மாட்டுப்பட்டவனைப் போலிருந்தான்.

எந்தநேரமும் கலகலப்பாகப் பழகும் சுகுமாரின் மாற்றத்தைக் காணப் பரிதாபமாக இருந்தது.

"ஆதவன்...." என்று தயங்கினான் சுகுமார்.

'என்ன?' என்பதுபோல் பார்த்தான்.

"உன்னட்டை ஏதாலும் காசு பிழங்குதே?"

"கனக்கவே... கொஞ்ச நஞ்சமெண்டால் தரலாம்... என்ரை பிரச்சினையும் தெரியும்தானே... ஊரிலை கொஞ்சம்... கொழும்பிலை கொஞ்சம்.... எல்லாத்துக்கும் தொட்டுத் தொட்டு அனுப்பவேணும்..."

"ஐயாயிரம் மார்க்காலும் தந்தியெண்டால்...."

"ஐயாயிரமோ..." என்று உரக்கச் சிரித்தான் ஆதவன்.

அவனது சிரிப்பு சுகுமாரை வாட்டி வதைத்தது. எஞ்சியிருந்த

உங்களை ஒருவர் விமர்சித்தால் எரிச்சல் வருகிறதா? அப்படியானால் அந்த விமர்சனம் சரியானதுதான்.

– நெல்சன்

ஒருவனிடம் இருக்கும் உயர்ந்த ஆற்றலைக் கண்டுபிடித்து வளர்ப்பது கல்வியே ஆகும்.

– கன்பூஷியஸ்

அறியாமையிலிருந்து பிறப்பதே அச்சம்.

– ரால்வ் வால்டோர் எமர்ஸன்

அறிவற்ற அச்சம், இடையூறுகளை இரட்டிக்கின்றது.

– தாமஸ் புல்லர்

அனுபவத்தின் அன்பிலராயின், அரிய கொடைகளும் அற்பமாகிவிடும்.

– வில்லியம் ஷேக்ஸ்பியர்

அன்பைப் பயில வேண்டும், மீண்டும் மீண்டும் பயின்று கற்க வேண்டும். அதற்கு முடிவே கிடையாது.

– கேத்தரின் ஆன்போர்ட்டர்

மக்களின் ஆசை எப்போதும் குறைவது இல்லை: அது மனத்தின் பசி.

– காண்டேகர்

நம்பிக்கையும் கைநழுவிய சோர்வு அவனை ஆட்கொண்டது.

"ஆயிரம் மார்க்கையே ஒன்றாய்ப் பார்த்துக் கனகாலம்… என்ன விளை யாடுறியே?!"

"விளையாடேலை ஆதவன்… விதிதான் என்னோடை விளையா டுது… கடன் தொல்லையாலை என்ரை நிம்மதி, சந்தோசம் எல்லா மே தொலைஞ்சுபோச்சு. உழைக்கிற காசையெல்லாம் வட்டியாய்க் கட்டிப் போட்டு, முதலை அடைக்க வழி யில்லாமை… எப்பிடி இந்த வட்டிக் குள்ளாலை வெளியை வாறதெண்டு தெரியாமை தவிக்கிறன். வீட்டிலை பெஞ்சாதி பிள்ளையளோடை சந்தோ சமாய் வாழ முடியேலை… அதுக ளின்ரை சின்னச்சின்ன தேவைய ளைக்கூட நிறைவேற்ற ஏலாமை… அதுகளின்ரை ஏக்கம் நிறைஞ்ச பார்வையளைத் தாங்க முடியாத குற் றவாளியாய் உள்ளக்குள்ளையே புழுங் கிப் புழுங்கி அவதிப்படுறன்… என் ரை பிள்ளையளின்ரை எதிர்காலத் துக்கெண்டு நான் ஒரு 'மார்க்'கூட சேர்த்து வைக்கேலை… அதுதான் முடியேலை எண்டாலும் அதுகளை இப்ப சந்தோசமாய் வைச்சிருக்கக் கூட என்னாலை முடியேலை எண் டதை நினைக்கேக்கை செத்துத் தொலைக்கலாமா எண்டு கூட நினைக்கிறன்… ஆனால் அதுக்கும் முடியேலை… என்னை நம்பி இருக் கிறதுகளை அந்தரத்திலை விட்டுப் போட்டு எப்பிடிப் போறது?" என்று அழாக்குறையாகக் கூறினான் சுகு மார்.

"இதோ பார் சுகுமார்… தகுதிக்கு மீறிக் கடன்பட்டால் இதுகளெல்லாம் வருமெண்டு தெரியும்தானே… உன் ரை வருமானம் எவ்வளவு… எவ்வ ளவு மிச்சம் வரும் எண்டதை யெல்லாம் யோசிச்செல்லே கடன் வாங்கியிருக்க வேணும்?! இப்பிடித் தான் கனபேர்… கடன்பட்டுட்டு அடைக்க முடியாமை வட்டி வளர்ந் து குட்டிபோட அவதிப்படினம்…"

"நீ நினைக்கிறமாதிரி இல்லை ஆதவன்… ஊரிலை அப்பா அம்மா… சகோதரங்கள்… நாட்டு நிலமைக ளுக்கை ஒவ்வொருத்தருக்கும் ஒவ் வொரு பிரச்சனைகள்… அதாலை அவசரமான தேவையள்… வருத்தம் துன்பம் பஞ்சம் பட்டினி எண்டு அதுகள் கண்ணீரோடை காயிதம் எழுதேக்கை… எப்பிடி உதவி செய்யாமை வாழுறது? அதுகளுக் கெல்லாம் ஒரேயொரு நம்பிக்கை நான்தானே… அந்த நம்பிக்கையும் பொய்த்துப் போனால் அதுகளும் எங்கை போகும்? அதுகள் அங்கை கஸ்டப்படேக்கை நான்மட்டும் இஞ் சை நிம்மதியாய் எப்பிடி வாழேலும்? சொந்தமும் வேண்டாம், பந்தமும் வேண்டாமெண்டால் நான் எவ்வள வோ பணத்தைக் கட்டிப்பிடிச்சுக் கொண்டிருக்கலாந்தான். ஆனால் என்னாலை அப்பிடி வாழ முடி யேலை. கடன்பட்டுட்டன்… ஆயிரத் துக்கு ஐம்பது மார்க் வட்டி… மொத்தம் பத்தாயிரம் கடன்… விமல னிட்டைத்தான் வாங்கினனான்… இப் ப பத்தாயிரத்தையும் வைக்கச் சொல் லுறான்… ஒரு ஐயாயிரம் இருந் தாலாவது அதைக் கொடுத்துச் சமாளிக்கலாம்… என்ன செய்யுற தெண்டே தெரியேலை…"

இன்னும் கொஞ்சநேரம் பேசி னால் அழுதுவிடுவான்போல் இருந் தது.

புலம்பெயர் நாட்டிலே பல தமிழர் களது வாழ்வு இவ்வாறாகத்தான் இருக்கிறது.

தாயகத்திலுள்ள உறவுகள்... தாய கத்தில் நிகழும் உரிமைப் போராட் டம்... அவற்றுக்கான அவசரமான தேவைகள்... இப்படிப் பலவழிகளிலும் மன ஈரம்கொண்டு தமது தகுதி களையும் மீறி உதவ நிர்ப்பந்த மானவர்களாய், கடன்களுடனும் வட் டிகளுடனும் தமது சுயதேவைகளை நசுக்கி, உழைப்பு உழைப்பு என்று தம்மைக் கசக்கிப் பிழிந்து உருக் குலைந்தும், எதற்குள்ளாலும் மீள முடியாமல் விரக்தியுற்று, எதிர்கா லமே இருள் கவ்விய தடுமாற் றத்துடன் வாழ்க்கையின் நகர்தலுக் காக மூச்சைப்பிடித்து முயலும் தமி ழர்கள்தான் எத்தனை, எத்தனை?!

சுகுமாரை அவனுக்கு நன்றாகவே தெரியும்.

ஓய்வற்ற உழைப்பாளி.

சில வருடங்களுக்கு முன்னர் கடன் பக்கம் எட்டிப் பார்க்காத காலத்தில் ஏனைய சிநேகிதர்களுக்கு ஆபத்து அந்தரம் என்றால் வலியச் சென்று உதவி செய்தவன்தான் சுகு மார்.

வட்டி இல்லாமல் பலருக்கு பண உதவி செய்தும், தற்போது அவ னொரு கடனாளியாக, வட்டி கட்டு வதிலேயே காலத்தை மனப் பாரங் களுடன் கழிப்பவனாக, குடும்பத்தில் குதுாகலங்களைத் தொலைத்தவனா க....

நல்லவனுக்குக் காலமில்லையா?

இரக்கப்படுபவர்களுக்கு இன்னல் கள்தான் சொந்தமா?

ஈரமுள்ளவர்களைத்தான் இடை யூறுகள் தேடி இடம்பிடிக்குமா?

ஆதவனால் அவனுக்காக இரக்கப் படமட்டுந்தான் முடிந்தது.

"சுகுமார்.... என்னட்டை காசி ருந்தால் தந்திருப்பன்.... நீ எதுக்கும் மனதைவிடாதை.... தைரியமாக இரு. காலம் எப்பவுமே ஒரேமாதிரி இருக் கிறதில்லை. நான் ஆரிட்டையாலும் விசாரிச்சுப் பாக்கிறன். கிடைச்சால் பாக்கலாம்."

"நிச்சயமாய் எதிர்பார்ப்பன்...."

கெஞ்சுதல் பொதிந்த பார்வை யுடன் விடைபெற்றான் சுகுமார்.

சுகுமாருக்கு உதவ முடியாத தனது இயலாமையை நினைத்து மனதிற்குள் வேதனைப்பட்டான் ஆத வன்.

அவனுக்கு எப்படியாவது உதவி செய்ய வேண்டும்.

முடியுமா?

முடியக்கூடிய சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தான்.

அப்போது விமலனாகவே பணம்தான் பலருடைய பிரச்சினைகளுக்குக் காரணம் என்று கூறியபோது சுகுமாரின் நினைவு தான் மேலெழுந்தது.

"என்ன திடீரெண்டு யோசினை..." என்ற விமலனின் குரல்கேட்டுச் சுய நினைவடைந்தான் ஆதவன்.

'சுகுமாரின் விசயத்தைப்பற்றிச் சம்பந்தப்பட்டவனிடமே கதைத்தால் என்ன?!'

கதைக்கலாம்.

'தப்பாக ... நினைத்துவிட்டால்... வட்டிக்காரனிட்டை இரக்கத்தை எதிர்பார்க்கலாமா?! அவனும் மனிதன் தானே.... அந்த மனதிலும் ஈரமிருக் கத்தானே செய்யும்... பக்குவமாக எடுத்துச் சொன்னால் இரக்கம் வரா

மலா போய்விடும்… கல்லுக்குள்ளும் ஈரம் இருக்கென்பார்களே..!"

"விமலன்…. காசுதான் கனபேற்றை பிரச்சினையளுக்குக் காரணம் எண்டு நீ சொல்லேக்கைதான் எனக்கொரு விசயம் ஞாபகத்துக்கு வந்திச்சு… ஆனால் அதை உன்னட்டைச் சொன்னால் நீ என்ன நினைப்பியோ தெரியாது…"

தயங்கினான் ஆதவன்.

"என்ன விசயமாய் இருந்தாலும் சொல்லு… நான் தவறாய் நினைக்கமாட்டன்…"

"இல்லை. சுகுமாரைப்பற்றி…."

யோசித்தான்.

"நீ என்ன சொல்ல வாறாய் எண்டு விளங்குது. கடன் கொடுத்துக் கனகாலமாகுது…. திருப்பிக் கேட்டனான்…"

"சுகுமார் பாவம்…. வட்டியைக் கட்டவே திண்டாடுறான்… இந்தக் கடனாலை அவன்ரை குடும்பமே நிம்மதியில்லாமைத் தவிக்குது. அவனும் ஒரு நல்ல பொடியன்… கஸ்டம் வாறது இயற்கை…. நேற்று நல்லாய் வாழ்ந்தவன் இண்டைக்குக் கஸ்டப்படுறதும், இண்டைக்குக் கஸ்டப்படுறவன் நாளைக்கு நல்லாய் இருக்கிறதும்தான் மனித வாழ்க்கை… வாழ்க்கை எண்டால் அதிலை மேடு பள்ளங்கள், கஸ்ட நஸ்டங்கள், இன்ப துன்பங்கள் அவ்வப்போது மாறிமாறி வந்துகொண்டே இருக்கும்… கஸ்ட நேரத்திலை ஒருத்தருக்கு மற்றவர் உதவி செய்யவேணும்…. தாழ்ந்து போறவனைக் கைதூக்கி விடவேணும்…"

"அதுக்காகத்தானே கேட்ட உடனை பொறுப்பு ஒண்டும் வேண்டாம் எண்டு பணத்தைத் தூக்கிக் கொடுத்தனான்…"

"உண்மைதான்…. ஆனால் நீ வட்டியில்லாமைக் கொடுத்திருந்தியெண்டால் அது உதவியாய் இருந்திருக்கும். இப்ப நீ கொடுத்த பணம் அந்தக் குடும்பத்தின்ரை நிம்மதிக்கே உபத்திரமாய் மாறிப்போச்சு…"

"அதுக்கு நான் என்ன செய்ய முடியும்…"

"உன்னாலைதான் இதுக்கொரு பரிகாரம் காணமுடியும். இண்டைக்கு தாயகத்திலை போராட்டத்துக்கை கஸ்டப்படுற ஒவ்வொரு தமிழனும் பணக்காரன் ஏழை எண்ட ஏற்ற தாழ்வின்றி, சாதி சமயம் எண்ட பாகுபாடுகளைத் தாண்டி ஒருத்தருக்கு ஒருத்தர் உதவியாய் வாழேக்கை நாங்கள் ஏன் இஞ்சை ஒற்றுமையாய் ஒருத்தருக்கு ஒருத்தர் உதவியாய் வாழக்கூடாது?! அப்பிடி வாழ்ந்தால்தான் நாங்கள் ஒவ்வொருத்தரும் ஈழத் தமிழன் எண்டும், போராட்டம் எண்டும் கதைக்கிறதிலை அர்த்தம் இருக்கு…. அதை விட்டுப்போட்டு எங்களை நாங்களே சுரண்டிக்கொண்டு, பிய்ச்சுப் பிடுங்கிக்கொண்டு ஒற்றுமை சுதந்திரம் விடிவு எண்டெல்லாம் கதைக்கிறது என்ன நியாயம்..?"

உணர்ச்சி வசப்பட்டுக் கூறினான் ஆதவன்.

"நீ சொல்லுறதிலையும் நியாயம் இருக்குதான்…. ஆனால் கடன் கொடுக்கேக்கை வட்டி எண்டு ஒண்டு இருந்தால்தான் கடன் வாங்கினவனுக்கே அதைத் திருப்பிக் தரவேணும் எண்ட நினைப்பு வரும். இண்டைக்கு வங்கிகளை எடுத்துப் பாரன்…"

"வங்கிகள் எந்த நாட்டுக்காரனுக்

கும் கடன் கொடுக்கும். ஆனால் தமிழாக்களின்ரை வங்கிகளிலை தமிழருக்குத்தானே கடன் கிடைக்கும். சுகுமார் ஆர்... எங்களோடை எத்தினை வருசப் பழக்கம்... அவன் கலியாணம் கட்டாமல் தனியாய் இருக்கேக்கை நல்லாய்த்தானே இருந்தவன்... நாலுபேருக்கு வட்டி குட்டி எண்டு கேக்காமை உதவி செய்தவன்தானே... முந்தி உன்ரை வீட்டுக்கு காசு அவசரமாய் அனுப்ப கடனுக்காய் கனபேரிட்டை அலைஞ்சு திரியேக்கை, அவன் உனக்கே வலிய வந்து வட்டி ஒண்டுமில்லாமைக் கடன் தந்திருக்கிறான்... அதைக்கூட நீ மறந்துபோனாய்..."

சிறிதுநேரம் யோசித்தான் விமலன்.

"உந்தக் கடனாலை அவன்ரை குடும்பமே புதுத் துணிமணி வாங்க முடியாமை... ஒண்டு ரண்டு நகை நட்டுக்கூடப் போடமுடியாமை... அயலட்டையின்ரை விசேசங்களுக்கும் போகமுடியாமை... அந்தச் சின்னஞ்சிறு பிள்ளைகளின்ரை கொஞ்சநஞ்ச ஆசைகளைக்கூட நிறைவேற்ற முடியாமை கஸ்டப்படுது... அவன் தன்ரை தாய் தேப்பன் சகோதரங்களுக்கு உதவி செய்யாட்டி, உந்தப் பத்தாயிரம் மார்க் காசு அவனுக்கு பெரிய காசில்லை... ஆனால் அவனாலை அப்படி வாழமுடியேலை எண்டது தான் உண்மை..."

"எல்லாரும் செய்யிறதைத்தான் செய்யிறன் எண்டு நினைச்சன்... ஆனால் இதாலை இவ்வளவு பிரச்சினையள் வருமெண்டு உன்னோடை கதைக்கேக்கைதான் விளங்குது... இதோ பார் ஆதவன்... ஒண்டு செய்யலாம்... சுகுமார் இதுவரையும் தந்த வட்டியை முதல்லை இருந்து கழிச்சுப்போட்டு மிச்சத்தைத் தரச் சொல்லுறன்... "

'அப்பாடா..'

'பலர் விளக்கம் இல்லாமல்தான் தங்களை அறியாமல் தவறு செய்கிறார்களோ? சொல்லுவதை சரியான முறையில் சொன்னால் வீண் பிரச்சினைகளுக்கே இடமில்லை.'

சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் தான் மனித மனங்களின் போக்குகளுக்கும் மாற்றங்களுக்கும் காரணமெனில், நல்ல சந்தர்ப்பங்கள் உருவாகும்போது மனங்களும் மனிதம் உள்ளவையாகத்தான் இருக்கின்றன.

---

☞ உலகில் மிக வேகமாக ஓடக்கூடிய பறவையினம் தீக்கோழி ஆகும். இது மணிக்கு 72 கிலோ மீற்றர் வேகத்தில் ஓடக்கூடியது.

✱✱✱

☞ *1938ம்* ஆண்டு புளோரசன்ட் மின்குமிழ் முதன்முதல் கண்டுபிடிக்கப்பட்டது. ஜெனரல் இலக்றிக் வெஸ்டிங் கவுஸ் என்ற அமெரிக்க நிறுவனமே இதனைக் கண்டுபிடித்தது.

✱✱✱

☞ ஒலிபெருக்கியானது முதன்முதல் *1924*ல் கண்டுபிடிக்கப்பட்டது. இதனைக் கண்டுபிடித்தவர் அமெரிக்கரான ரைஸ் கெல்லோக் என்பவராகும்.

# ஆளாளப்பட்ட வெளிநாடு

## -அனுபவக் குறிப்புகள்-

_சோழியான்

### (1) ஆர்வம்

ஆசைக்கும் ஆர்வத்திற்கும் அதிகளவு வேறுபாடு கிடையாது. அனுபவிக்க வேண்டும் என்றால் அது ஆசை. அந்த ஒன்று என்னவென்று அறிய முயல்வது ஆர்வம்.

ஆர்வம் எல்லோருக்கும் உள்ளது. ஆர்வம் இல்லாதவன் முன்னேற்றத்தைப்பற்றி அக்கறை இல்லாதவன். அறிவு வளர்ச்சிக்கு ஆர்வம் இன்றியமையாதது. எதற்கும் ஆர்வம் அளவோடு அமையவேண்டும். நியாயமானதாக அமையவேண்டும். ஆர்வப்பட்டால்மட்டும் போதாது. அதை எவ்வாறு நிறைவேற்றுவது என்பதைச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

காலப் பெட்டகத்தில் இருந்து **1984, 1985** காலப்பகுதிகளை அள்ளியெடுத்துப் பாருங்கள். எத்தனை ஆயிரம் ஈழத் தமிழ் முகங்கள் கிழக்கு பேர்லின் விமான நிலையத்தில் மலங்க மலங்க முழித்துக்கொண்டிருந்தன. எப்படித் தொலைபேசியில் தொடர்புகொண்டு அறிந்தவர்களை அழைப்பது: எவ்வாறு காசு மாற்றுவது போன்ற விடயங்கள் எதுவுமே பலருக்குத் தெரிந்திருக்கவில்லை.

'மேற்கு ஜேர்மனியில் வெள்ளைக்காரிகளுடன் கைகோர்த்து உலாவலாம்: நான் வேலை தருகிறேன், நீ வேலை தருகிறேன் என்று முதலாளிகள் வரிசையில் காரில் காத்திருப்பார்கள்'– வெளிநாட்டைப் பற்றி, அதுவும் குறிப்பாக ஜேர்மனியைப்பற்றி இலங்கையில் உலாவிய வதந்தியை நம்பி, நடைமுறைச் சாத்தியங்களைப்பற்றிக் கொஞ்சம்கூட ஆராய்ந்து பாராமல், வெளிநாட்டு ஆர்வம் காரணமாக வந்தோரே பலர்.

இலங்கையில் இருந்து கிழக்கு பேர்லினுக்குப் புறப்பட்ட விமானத்துள் இருந்த ரகு, தேவனைக் கேட்டான்.

'83ம் ஆண்டு இனக்கலவரத்திலை கொழும்பிலை இருந்து அக

தியாய்த்தானே யாழ்ப்பாணத்துக்கு வந்தனி?!"

பலருக்கு முன்னால் ரகு தன்னை அவமானப்படுத்திய உணர்வில் தேவனின் முகம் சிவந்தது. அருகில் அமர்ந்திருந்தவர்கள்கூட ஏளனமாகத் தேவனைப் பார்த்தது என்னவோ உண்மைதான். ஆனால் எல்லோருமே அகதியாக வாழத்தான் ஜேர்மனிக்குப் போகிறோம் என்ற உண்மையை அங்கிருந்த பலரும் அறிந்திருக்கவில்லை. பணம் சேர்க்க, சுகமாக வாழ, குடும்பத்தைக் காப்பாற்ற.... இவ்வளவுதான் தெரிந்திருந்தது.

எப்படி வேலை கிடைக்கும், வீடு கிடைக்கும், பணம் கிடைக்கும் போன்ற கேள்விகளை எழவிடாமல் தடுத்தது வெளிநாடு செல்ல வேண்டும் என்ற ஆர்வம். அறியாமையால் விளைந்த ஆர்வத்துடன் ஜேர்மன் மண்ணை மிதித்தவர்கள் பலவித ஏமாற்றங்களுக்கு ஆளாகி, வெளிநாட்டிலிருந்து வெறுங்கையுடன் திரும்பிச் சென்றால் உற்றத்தார் சுற்றத்தார் எல்லோரும் கேலிசெய்வார்களே என்ற நினைப்பில் தங்கியோரும்– நாடுவிட்டு ஒவ்வொரு நாடாக நாடோடிகளாக அலைபவர்களுமே அதிகம்.

நகரம்விட்டு நகரம் செல்லமுடியாமல் குறிப்பிட்ட எல்லைகளுள், குறிப்பிட்ட காலம்வரை வேலை செய்யக்கூடாது என்ற தடையுடன், 'அறிந்தவர்களை.... தெரிந்தவர்களை' சந்திக்க முடியாத நிர்ப்பந்தங்களுடன், 'என்ன செய்வது.... வெளிநாடு என்று முன்பின் யோசியாமல் வந்துவிட்டோம். நாலு காசு சேர்த்துக்கொண்டு தாயகம் போவோம்' எனத் தங்களைத் தாங்களே தேற்றி வாழ ஆரம்பித்து வாழ்வோரே அதிகம்.

இப்படியாக வாழ ஆரம்பித்தவர்கள், அன்று துரும்பாகத் தெரிந்த தாயகப் பிரச்சனைகள் இன்று துணாக மாறியதாலும், வெளிநாட்டு வாழ்க்கைக்குத் தங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டதாலும், சில கட்டுப்பாடுகள் தடை உத்தரவுகள் காலப்போக்கில் நீங்கியதாலும் தொடர்ந்து இங்கே தங்க நினைப்பதை இன்று பார்க்கிறோம்.

1984, 1985களில் பலர் இங்கு வருவதற்கு நாட்டுப் பிரச்சனை முக்கிய காரணமாக இருக்கவில்லை. வெளிநாட்டுக் கவர்ச்சியே பிரதான காரணமாகும். இந்தக் கவர்ச்சியை விதைத்தவர்களில் பெரும்பாலானோர் 1980, 1981களில் வெளிநாட்டிற்கு வந்தவர்களே. இவர்கள் விதம்விதமான உடைகள் அணிந்து பலவிதமான கோணங்களில் வர்ணப் படங்களை எடுத்து, தாய்நாட்டிலுள்ளவர்களுக்கு அனுப்பி அங்குள்ளவர்களின் ஆர்வத்திற்குத் தூண்டுகோலாகினர்.

1984ம் ஆண்டுத் தொடக்கத்தில் தினகரன் என்பவர் ஜேர்மனியில் இருந்து ஊருக்கு வந்திருந்தார். அவரை நண்பன் மூர்த்தி சந்தித்தான். தான் இரண்டு வருட வேலை ஒப்பந்தத்தில் ஜேர்மனியில் வேலை செய்ததாகவும், ஒப்பந்தம் முடிவடைந்ததால் திரும்பியதாகவும் கூறிய தினகரன், தான் அங்கிருந்து கொண்டுவந்த 'ரீவி', 'வீடியோ', 'கமரா' என்று பலதையும் பெருமையாக எடுத்துக் காட்டினார்.

சில வருடங்களின் பின்னர் ஜேர்மனிக்கு வந்த மூர்த்தி தற்செயலாக தினகரன் முன்பு வசித்த நகரத்

திற்குச் சென்றபோது, அவரின் குட்டு வெளிப்பட்டது.

அரசியல் தஞ்சம் நிராகரிக் கப்பட்ட தினகரன் சமூக உதவிப் பணத்திலேயே வாழ்ந்ததாகவும், தாய கம் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டபோது பணமெதுவும் செலுத்தாமல் தவ ணைமுறையில் 'ரீவி' உட்படப் பல பெறுமதியான பொருட்களை வாங் கிக்கொண்டு தாயகத்திற்குச் சென்ற தை அறிந்தான்.

வெளிநாட்டில் அகதியாக வாழ் வதைப்பற்றியோ அல்லது உடலை வருத்திக் கூலி வேலை செய்வதைப் பற்றியோ எழுதினாலோ அல்லது கூறினாலோ இனம் சனம் கேலி செய்வார்கள் என்ற தாழ்வு மனப் பான்மையில் பழையவர்கள் தமது நிலையை மறைத்துவிட்டதே பல ரின் வெளிநாட்டு வருகைக்குக் காரணமானதென்றால் தப்பில்லை.

ரகு தன்னுடைய உறவினன் குமாருடன் வெளிநாட்டவர் அலுவ லகத்திற்கு வந்திருந்தான். குமார் சில வருடங்களுக்கு முன்பே ஜேர் மனிக்கு வந்துவிட்டான். குமார் தான், 'ஜேர்மனிக்கு வந்தால் சுகமாக வாழலாம்' என்ற ஆர்வத்தை ரகு வின் மனதில் விதைத்தவன்.

"குமார்! அட்வான்ஸ் லெவல் (Advanced Level) சேர்டிபிக்கேற், பள்ளிக்கூட நற்சாட்சிப்பத்திரம் எல் லாம் கொண்டு வந்திருக்கிறேன். எங்கையாலும் ஒரு 'கொம்பனி'யிலை 'கிளார்க்' (clerk) வேலை எடுத்துத் தருவியா?" என்று அப்பாவித்தன மாய்க் கேட்டான் ரகு.

"ரகு! விசயம் விளங்காமைக் கதையாதை. இந்த நாட்டு மொழி யிலை படிச்சால்தான் 'கொம்பனி'க ளிலை வேலை செய்யலாம். இங்கே எங்கடை படிப்புக்கு வேலை இல் லை. கூலி வேலைதான். கூலி வேலை செய்தாலும் எங்கடை ஊரைமாதிரி இளக்காரமாய் நினைக் கமாட்டினம்...."

"அப்ப ஜேர்மன்காரரிலையும் கூலியாட்கள் இருக்கினமே?"

"வெளிநாட்டவர்கள்தான் நிறை யப்பேர். நாங்கள் செய்யிற வேலை களை ஜேர்மன்காரர் விரும்பமாட் டினம்.... ஆனால் அவை எங்கடை வேலையை இளக்காரமாய் நினைக் கமாட்டினம்...."

இப்படியே ஒருவருக்கொருவர் பேசிப்பேசியே தங்களுக்குள் தங்களை உயர்வாக எண்ணி வெளிநாட்டில் காலத்தைப் போக்குபவர்களே அதி கம்.

'வெளிநாடு, வெளிநாடு' என்று வந்தவர்களுக்கு 'இக்கரைக்கு அக் கரை பச்சை' என்ற போதனை கிடைத்தது என்பதே உண்மை.

## (2) அறியாமை

தமிழா! அன்று நீ ஜேர்மனியை மிதித்தபோது எத்தனை தவறு களை இழைத்துள்ளாய் என்பதை எண்ணிப் பார். இன்று அவற்றை எண்ணிச் சிறுகணமேனும் வருந் தினால் அதை நீ என் இனத்திற்குச் செய்யும் பேருதவியாக நான் கரு துவேன்.

எத்தனை தொலைபேசிக் கூண் டுகளைக் காசு போடாமல் கதைத் துப் பழுதாக்கியிருப்பாய். பயணச் சீட்டின்றி எத்தனை பஸ் வண்டி களிலும் புகையிரதங்களிலும் பிரயா ணம் செய்திருப்பாய்?!

இதெல்லாம் பழைய சங்கதி. இதை ஏன் இப்போது கிளறுகிறாய் என்று கேட்கலாம். நீ அன்று செய்த தவறுகள் இன்றுவரை இந்நாட்டு மக்களின் மனதில் கறையாகப் படிந்துள்ளதை அறிவாயா?!

தொலைபேசிக் கூண்டுக்குள் நின்று நெடுநேரம் பேசும்போது பலரின் சந்தேகப் பார்வைகள் உன்மேல் படர்வதை அறியவில்லையா? அன்று நீ அறியாமையினால் சிறு இலாபம் கருதிக் குறுக்குவழியில் செய்த தவறுகள் எல்லாத் தமிழர்களையுமே குற்றவாளியாகக் காட்டியதை அறியவில்லையா? உன் தவறுகள் உனது இனத்தையே களங்கப்படுத்தியதுதான் நீ கண்ட மிகப் பெரிய இலாபம்.

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்று நீதான் முன்பு கூறினாய். இதைத்தான் இந்நாட்டு மக்களில் பெரும்பாலானோர் வெளிநாட்டவர்களைப் பொறுத்தவரையில் அமுல்படுத்துகிறார்கள்.

இப்படித்தான் ஒருமுறை நீ நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும்போது மத ஊழியர் ஒருவர் உன் வாசல் நாடி வந்திருந்தார். அவர் பைபிள் சம்பந்தமாக விளக்கம் அளித்தபோது உனக்கு ஏற்கெனவே அந்த மதத்தைப்பற்றி தெரியும், அதில் ஈடுபாடு என்று கூறினாய். அம்மத சம்பந்தமான பாடலொன்றைப் பாடிக் காட்டுவதாகக் கூறி, பிரபல சினிமாப் பாடலொன்றைப் பாடினாய். அந்த மத ஊழியரை ஏமாற்றியதாக உனக்கும் நண்பர்களுக்கும் மகிழ்ச்சி. இந்த அறியாமையால் விளைந்த மகிழ்ச்சியால் என்ன பயன் என்று சிந்தித்தாயா? ஏன் இத்தகைய பிரயோசனமில்லாத செயல்?!

உனக்கு அறிவு இருக்கிறது; ஆற்றல் இருக்கிறது; எவ்வளவு தடைகள் வரினும் அவற்றையெல்லாம் தகர்த்து எறியக்கூடிய திறமை இருக்கிறது; எத்தகைய சூழலிலும் அதற்கேற்ற மாதிரி வாழ்க்கையை அமைத்து முன்னேறும் புத்திசாலித்தனம் இருக்கிறது.

ஆனால் இவையெல்லாம் ஆக்கத்திற்குப் பயன்படுவதை விடுத்து குறுக்குவழியில் சிறு இலாபத்திற்காகத் தமிழினத்தையே தலைகுனியச் செய்வதை எவ்வாறு அனுமதிக்க முடியும்?!

ஒரு நண்பர் வீட்டிற்கு ஜேர்மன்காரர் ஒருவர் விருந்துக்கு வந்திருந்தார். வரும்போதே 'எப்படி மடையா' என்றபடி வந்தார். அவர் ஒரு அன்பளிப்பைக் கொடுக்கும்போது நண்பர் 'நன்றி' என்று ஜேர்மன் மொழியில் கூற, அவரோ 'போடா' என்றார். நண்பருக்கு முதலில் காரணம் புரியவில்லை. பின் ஊகித்துக்கொண்டார். எல்லாம் எமது புத்திசாலிகள் சிலரின் தமிழ்ச் சேவைதான். தமிழ் மொழியில் சில சொற்களையாவது அறிவதற்கு முனைந்த அந்த ஜேர்மன்காரருக்குத் தவறான சொற்களைத் தவறான அர்த்தத்தில் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். இதை அறியாமை என்றுதானே கூறவேண்டும்.

தமிழா! போதைப் பொருட்களுக்கு அடிமையாகி உன்னையும், மதுவால் தள்ளாடித் துவண்டு விழுந்து சுற்றாடலின் அமைதியையும் களங்கப்படுத்துவதாலும் நீ அடைந்த இலாபம் என்ன? சில நிமிட சந்தோசத்திற்காக மொழியை

யும், குறுக்குவழித் தேடல்களால் இனத்தையும் களங்கப்படுத்துவதோடு நின்றுவிட்டாயா?

குரக்கன் பிட்டையும் ஒடியல் கூழையும் நீ இழிவான உணவென்று ஒதுக்கவில்லையா? அதேவேளை தவிட்டுப் பாணையும் கூலா 'சூப்' பையும் சத்தான உணவென்று உண்ணவில்லையா?

உன் அறியாமையால் நல்லவற்றை ஒதுக்காதே. நேர்வழியை அடைக்காதே.

கப்பலோட்டிய தமிழன், உலகை ஆண்ட சோழன் என்று பழைய சரித்திரத்தைப் பேசிப்பேசி மார் தட்டுவதைவிட – ஜேர்மனியில் சிவா, பிரான்ஸில் தேவன் என்று நீ உள்ள எல்லா நாடுகளிலும் தமிழன் பெயர் ஓங்க– வாழ முயற்சிப்பாயா?

## (3) ஆணவம்

ரகு இலங்கையில் பிரபல வங்கி ஒன்றில் உத்தியோகம் செய்தவன். அவனும் ஜேர்மனிக்கு அகதியாக வந்து, தற்போது சோசல் காசில் (சமூக உதவிப் பணத்தில்) வாழ்கிறான். அத்துடன் இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரியும்கூட. அதனால், அந்த அகதி விடுதியில் வசிக்கும் ஏனைய தமிழர்களிலும் பார்க்கத் தானே அதிகமாகப் படித்தவன், ஊரில் நல்லதொரு உத்தியோகத்தில் இருந்தவன் என்ற ஆணவம் அவனுக்கு.

ரகு ஜேர்மனிக்கு வரும்போது ஆணவக்காரனாக இல்லை. ஆனால் இங்கே வந்த பின்னர் மொழி தெரியாத பலர் சோசல் கந்தோருக்கு, வெளிநாட்டவர் அலுவலகத்திற்கு, வைத்தியசாலைக்கு என ஆங்கிலம் தெரிந்த ரகுவின் உதவியை நாடியதே அவனது ஆணவத்திற்குக் காரணம். தனக்குத் தெரியாத அலுவல்களே இல்லை: தன்னைவிட அறிவாளியே இல்லை என்பதுபோல் வெளிப்படையாகவே பேசித் திரிந்தான். மொழி தெரியாதவர்கள் என்ன செய்வார்கள்?! அவனுடைய உதவி தேவை என்பதற்காகப் பேசா மௌனிகளாக இருந்தார்கள்.

சில வருடங்கள் சென்றன. ஆணவப் பேச்சிலேயே காலத்தைப் போக்கிய ரகு சோசல் காசிலேயே வாழ்கிறான். ஆனால் மற்றவர்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்கிறார்கள். குடும்பத்தை ஊரிலிருந்து வரவழைத்து வாழ்கிறார்கள். திருமணம் செய்து குடும்பமாகிறார்கள். புதுப்புதுக் கார்களில் பவனி வருகிறார்கள். ஜேர்மன் மொழியில் சரளமாக உரையாடுகிறார்கள்.

ரகுவின் ஆணவம் அவனது முன்னேற்றத்தை, அறிவு வளர்ச்சியைத் தடை செய்துவிட்டது. என்றாலும் ரகு தன்னை உணர்ந்து திருந்துவதாக இல்லை.

'அவையள் என்னதான் சம்பாரிச்சாலும் வசதியாய் வாழ்ந்தாலும் என்னைமாதிரிப் படிச்சவையே?"

ரகு அப்படியேதான் இருக்கிறான்.

இன்னுமொரு சம்பவம்.

1983ம் ஆண்டுக்கு முன்பு யாழ்ப்பாண மாவட்டத்திலே கிராமத்துக்கு ஒரு சண்டியர்வீதம் இருந்தார்கள். அவர்களை வீதியில் கண்டால் மக்கள் வேறுபக்கமாக ஒதுங்கிவிடுவார்கள். சந்திகளில் இவர்களின் அட்டகாசத்திற்கு அளவே

கிடையாது.

இவர்களில் ஒருவர் தயாள். யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு கிராமத்தில் சண்டித்தனத்தால் பெயர் பெற்றவர். சில விடுதலை இயக்கங்கள்கூட இவரை எச்சரிக்கை செய்தும் பயனில்லாமல், தண்டனை வழங்குவதற்காக இவரைத் தேடிய போது தலைமறைவாகி ஜேர்மனிக்கு வந்துவிட்டார்.

ஜேர்மனியில் தயாளின் அட்டகாசங்களிற்குக் குறைவில்லை. தனது அறைத் தளபாடங்களை உடைப்பது; ஏனைய தமிழர்களை அடிப்பது போன்ற அடாவடித்தனங்களில் ஈடுபட்டு, தன்னை ஏன் என்று கேட்பதற்கு எவருமில்லை என்ற ஆணவத்துடன் வாழ்ந்தார். இப்படியானவர்களைச் சுற்றி 'ஆமாம்' போடவென்றே எப்போதும் ஒரு கூட்டம் இருக்கும்.

இவர்கள் கூடினால் மதுப் போத்தல்கள் காலியாகி யன்னல் கண்ணாடிகள் நொறுங்கும். ஏதாவது ஒன்று சேதமானால்தான் குடிக்கும் குடிக்குப் பெறுமதி என்று நினைப்பவர்கள் பலர் தமிழரில்தானே இருக்கிறார்கள்?!

அன்றும் அப்படித்தான். மது வெறியுடன் தயாளும் வேறு சிலரும் 'டிஸ்கோ கிளப்' ஒன்றிற்குச் சென்றார்கள். தன் இனத்தவரிடம் கைவரிசையைக் காட்டி ஆணவமாக மார் தட்டித் திரிந்த தயாள் அந்த 'கிளப்'பிலும் தனது அடிபிடியைக் காட்ட முற்பட்டபோது, சில ஜேர்மன் இளைஞர்களால் நையப்புடைக்கப்பட்டார்.

நண்பர் என்று சேர்ந்துபோனவர்களில் ஒருவரைக்கூட அங்கே காணவில்லை.

இன்று தயாள் ஒரு புதுமனிதர். கிறீஸ்துவ சபை ஒன்றின் உண்மையான ஊழியர். பாவங்கள் செய்யக் கூடாது என்று பைபிள் வசனங்களை உதாரணம் காட்டி அறிவுரை வழங்குகிறார்.

'இவன் வேசம் போடுகிறான். தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை' என்று தயாளைப்பற்றி விமர்சிப்பவர்களும் இருக்கிறார்கள்.

ஆனால் வெளிநாடு தயாளின் தவறுகளை உணரவைத்து, அவரை நல்லவராக மாற்றியிருக்கிறது என்பதே உண்மை.

'தாங்கள்தான் மேலானவர்கள்' என்ற எண்ணமே ஆணவத்தின் ஆணிவேர். ஆணவம் கொண்டவர்கள் அறிவை இழக்கிறார்கள். சிலர் அனுபவங்கள்மூலம் திருந்துகிறார்கள். சிலர் திருந்த மறுத்துக் காலப் போக்கில் அழிந்து போகிறார்கள் அல்லது ஒதுக்கப்படுகிறார்கள்.

உதாரணமாக, அன்று 'நான் பெரிய சாதி, நீ தாழ்ந்த சாதி' என்று சாதியால் ஆணவம் கொண்டவர்கள் வெளிநாட்டில் திருந்தி வாழ்வதை அல்லது ஊமைகளாக்கப்பட்டதைப் பாருங்கள்.

ஒருவன் தன்னால் முடியும் என்று தன்னம்பிக்கை கொள்ளலாம். ஆனால் தன்னால் மட்டும்தான் முடியும் என்று ஆணவம் கொள்வது எதற்குமே பயன்படாது.

## (4) வேசம்

உலகமெனும் நாடக மேடையில் எத்தனை ஆயிரம் வேசதாரிகள்?!

குழந்தையைச் சமாளிப்பதற்கா

கத் தாய் நடிக்கிறாள். கணவனின் கோபத்திலிருந்து தப்பும் நோக்கில் மனைவி நடிக்கிறாள். முதலாளியிடம் நற்பெயர் வாங்குவதற்காகத் தொழிலாளி நடிக்கிறான்.

இவ்வாறு அன்றாடம் எல்லோருமே அறிந்தோ அறியாமலோ நடிக்கவேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகிறார்கள். ஆனால் இந்த நடிப்பு மற்றவர்களைப் பாதிக்காதவரையில் அவை சந்திக்கு வருவதில்லை. மற்றவர்களைப் பாதிக்கும்வகையில் நடிப்பவர்களை 'வேசதாரிகள்' என்கிறோம்.

இத்தகையோரில் எத்தனை மனிதர்களின் வேசங்கள் இனம் காணப்பட்டன என்பது போன்ற செய்திகள் பத்திரிகைகளால் வாரியிறைக்கப்பட்டாலும், வெளியுலகுக்கு இலைமறை காயாக எமக்குள்ளேயே எம்மைத் தினமும் ஏமாற்றும் வேசதாரிகள் எத்தனை பேர் என்பதை இனம் காண்பதற்குரிய திறமை எல்லோருக்கும் இருந்தாக வேண்டும்.

வேசதாரிகளை முளையிலேயே அடையாளம் கண்டு கிள்ளி எறிவதுதான் ஒருவனது முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தும். வேசதாரிகளால் வாழ்வில் ஏமாற்றங்கள்: ஏமாற்றங்களால் பல தடைகள்.

இலங்கைத் தீவின் அரசியல் அரங்கில் கட்சிகள், இயக்கங்கள் என்று வேசம்போட்ட மனிதர்களால் ஈழத் தமிழினத்தின் தலைவிதியே சின்னாபின்னமாகியதுபோல், இன்று சில காலமாகப் பாதுகாப்பை முன்னிட்டு வெளிநாட்டுக்கு வருவதற்காகச் சொத்துக்களை எல்லாம் விற்றோ – அடகு வைத்தோ 'ஏஜென்சி' என்ற வேசம் அணிந்தவர்களின் நயவஞ்சகத்தை உணராமல், அவர்களின் ஆசை வார்த்தைகளில் மயங்கிக் கையில் உள்ளவற்றை எல்லாம் தாரைவார்த்துவிட்டுக் கொழும்பிலும்— இந்தியா, தாய்லாந்து, மொஸ்கோ போன்ற முன்பின் அறிந்திராத அந்நிய தேசங்களிலும் திக்கற்றவர்களாய்த் தவிக்கும் எம்மவர்கள்தான் எத்தனை ஆயிரம்?!

இவ்வாறு இந்தியாவில் நிர்க்கதியான பல தமிழர்கள் சில வியாபார முதலைகளின் பிடியில் சிக்கிப் போதைப் பொருட்களைக் கடத்துவதில் ஈடுபட்டுச் சிறைக்கம்பிகளுள் ஆயுளை அடைக்கலமாக்கியதற்குக் காரணமான 'ஏஜென்சி'யாக வேசமிட்டவர்களை என்ன செய்வது?!

மகன் வெளிநாட்டில் உள்ளான் என்று சுளைசுளையாகச் சீதனம் வாங்கிப் பெண்ணை ஏற்றுமதி செய்யும் பெற்றோர்கள்: நெருங்கிப் பழகி 'களவாய் வேலை செய்கிறான்' என்று உளவு கூறும் நண்பர்கள்: பெண் உரிமைபற்றி மேடையில் முழங்கிவிட்டு வீட்டில் மனைவியைச் சித்திரவதை செய்யும் கணவன்: காதலியைத் தாயகத்தில் காத்திருக்குமாறு சொல்லிவிட்டு வெள்ளைத் தோல்களுடன் சரசமாடும் காதலன் – இப்படி எத்தனையோ வகையான வேசதாரிகள் இந்த வெளிநாட்டில்?!

ஜேர்மனியைப் பொறுத்தவரையில் காலநிலை எப்போது மாறும் என்று கூறுவது கடினம்போலவே வேசதாரிகள் எப்போது எந்த வடிவத்தில் வந்து ஏமாற்றுவார்கள் என்

று கூறுவதும் கடினம்.

நண்பன் முகுந்தன் பல வருடங்களுக்கு முன்பு இங்கு வந்தவர். ஜேர்மன் மொழியில் பாண்டித்தியம் பெற்றவர். பிறப்பில் இந்துவான முகுந்தன் கிறீஸ்துவ சபையொன்றின் முக்கிய ஊழியர். வேலை வாய்ப்புப்போன்ற சிறுசிறு சலுகைகளை எதிர்பார்த்து கிறீஸ்துவை அறிய ஆவல் என நடிப்பவர்களையும், உண்மையிலேயே விசுவாசிக்க ஆவலுள்ளவர்களையும் தவறாமல் காரில் அழைத்துச் செல்வார். மற்றும் பல சரீர உதவிகளையும் பின் நிற்காமல் செய்வார். அதனால் எல்லோருக்கும் உதவும் நல்லவர் என்று பெயர் பெற்றார்.

இப்படித்தான் ஒருமுறை கேசவன் மொழிபெயர்ப்புச் சம்பந்தமாக முகுந்தனின் உதவியை நாடியபோது உதவிசெய்ய மறுத்துவிட்டார்.

காரணம் கேசவன் ஒருமுறை கூட முகுந்தனின் அழைப்பை ஏற்றுக் கிறீஸ்துவ சபைக் கூட்டத்திற்குச் சென்றதில்லை.

எனவே முகுந்தனின் பிறநலசேவையை கிறீஸ்துவ சபைக்கு ஆட்களை அழைக்கும் வேசம் என்று கூறாமல் என்ன வென்பது?!

இந்திரனுக்கு ஓரளவுதான் ஜேர்மன் மொழி தெரியும். ஒரு தொழிற்சாலையில் வேலை உள்ளதாக அறிந்து முகுந்தனின் உதவியை நாடினான். தான் விசாரித்து உதவுவதாகக் கூறிய முகுந்தன், நன்கு ஜேர்மன் மொழியறிவு உள்ளவர்தான் தேவையாம் எனக் கூறி, அந்த வேலை இந்திரனுக்குக் கிடையாது என்றும் கூறினான். ஆனால் இப்போது முகுந்தனுடன் கூட்டத்திற்குச் செல்லும் ஜேர்மன் மொழியறிவு மிகவும் குறைவாகவுள்ள ஒருவர் அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்கிறார். பாவம் இந்திரன், 'எனக்காகத் தொழிற்சாலைக்குச் சென்று கதைத்த முகுந்தனின் உதவியை மறக்க முடியாது' என்று கூறிக்கொண்டிருக்கிறான்.

ஒருவர் வலிய வந்து, 'உதவி செய்கிறேன்' என்று கூறினால் அதற்கான காரணம் எதுவாக இருக்கும் என ஓரளவாவது சிந்தித்துச் செயலாற்றுவதன்மூலமே வேசதாரிகளின் வலையிலிருந்து தப்ப முடியும்.

வேந்தனை ஒரு ஜேர்மன் வயோதிபத் தம்பதியினர் தத்தெடுத்து வளர்க்க விரும்பினார்கள்.

இதனை அறிந்த வேந்தனின் நெருங்கிய நண்பர்கள் சிலர் அந்த ஜேர்மன் தம்பதியினரைத் தேடிச்சென்று, 'வேந்தன் நிறையக் குடிப்பான்.... களவெடுப்பான்' என்று சொன்னார்கள்.

இந்த நண்பர்கள் வலிய வந்து கூறுவதில் ஏதோ நோக்கம் உள்ளது என்பதை ஊகித்துக்கொண்ட அந்தத் தம்பதியினர் வேந்தனையே தத்தெடுத்துத் தங்களுடன் வைத்திருக்கிறார்கள்.

அரசியல் தலைவன் தொடக்கம் அடிமட்ட மனிதன் வரையும் வேசதாரிகள் இருக்கிறார்கள்.

நாங்களே எங்களை அறியாமல் சில சந்தர்ப்பங்களில் வேசம்போடுகிறோம்.

இந்த வெளிநாட்டு வாழ்க்கை தினம்தினம் பல வேசதாரிகளை அம்பலப்படுத்தினாலும் வேசதாரிகள் வளர்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

## (5) நட்பு

வெளிநாட்டைப் பொறுத்தவரையில் இளைஞர்களே அதிகம். அதனால் வெளிநாட்டில் நிகழும் நன்மை தீமைகளைப்பற்றிக் கூறும்போது இளைஞர்களை உதாரணப்படுத்துவது தவிர்க்க முடியாத ஒன்று. எனவே, 'எடுத்ததுக்கு எல்லாம் நாங்கள்தானா கிடைத்தோம்?" என இளைஞர்கள் எரிச்சல் அடையமாட்டார்கள் என நினைக்கிறேன்.

பெற்றோர்கள் சகோதரங்கள் என அன்புப் பிணைப்புகளுடன் தாயகத்தில் வாழ்ந்தவர்களில் பலர் பாசப் பிணைப்புகளைப் பிரிந்து தனியாக முன்பின் அறிமுகமில்லாத ஜேர்மனியில் காலடி எடுத்து வைத்தபோது, சோசல் அதிகாரிகளால் ஒரு அறைக்கு நான்கு அல்லது ஐந்து பேர் எனச் சேர்த்து விடப்பட்டனர். தனிமை, தாயகத்தைப் பிரிந்து வந்த ஏக்கம் போன்றவற்றிற்கு வடிகாலாக ஒவ்வொருவருக்கும் இன்னொருவர் தேவைப்பட்டனர்.

இந்தத் தேவை நட்பாக உருவெடுத்துப் பிரிக்க முடியாத உறவாக மாறுகிறது.

ஈழத்திலே முன்பின் அறிமுகமில்லாதவர்களின் தனிமை உணர்ச்சிகள் பரிமாற்றம் அடைந்து நட்பாக அல்லது அதற்கும் மேற்பட்ட ஒரு உறவாகப் பரிணாமம் அடையும்போது சில விபரீதமான விளைவுகள் ஏற்படுவதையும் அவதானிக்க முடிகிறது.

ஒவ்வொரு அறையாகச் சோசல் அதிகாரிகளால் குடியமர்த்தப்பட்டவர்கள், நெருக்கமான நடமாட்டங்களாலும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு அனுசரித்துப் போகத் தங்களைப் பழக்கப்படுத்திக்கொண்டு தங்களிடையே சில விட்டுக்கொடுப்புகளைச் செய்வதாலும் ஒவ்வொரு அறைக்கு ஒவ்வொரு குழுவாக உற்பத்தியாகிறார்கள்.

ஒருவர் சம்பந்தப்பட்ட பிரச்சினைக்குத் தமது அறையில் உள்ளவன் என்ற ரீதியில் அந்த ஒருவருடன் ஒன்றாக அறையில் வசிப்போரும் சம்பந்தப்பட, இருவருக்கிடையே ஏற்பட்ட பிரச்சினையானது இரு அறைகளுக்கு இடைப்பட்ட பிரச்சனையாகப் பெரிதாகிவிடுகிறது.

இதேபோல்தான் விடுதிக்கும் விடுதிக்கும்; நகரத்துக்கும் நகரத்துக்கும்; குடும்பகாரர்களுக்கும் இளைஞர்களுக்கும் என இருவரிடையே ஏற்படும் பிரச்சனைகள் பல தமிழர்களை உள்ளடக்கிய அடிபிடியாக மாறிவிடுகிறது.

இதற்கு என்ன காரணம்?!

ஒரு அறையிலோ அல்லது ஒரு நகரத்திலோ வாழும் தமிழர்கள், தாயகத்தில் உற்றார் உறவினரிடம் கிட்டிய அன்பை, தம்மை அண்டி வாழ்பவரிடம் எதிர்பார்த்து, தங்களைச் சுற்றி ஒரு பாசச்சிறையை உருவாக்குகிறார்கள். அந்தப் பாசச் சிறை உடைந்தால் தாம் மீண்டும் தனிமையை நாடவேண்டி ஏற்படும் என்ற ஒருவகையான பய உணர்ச்சி, மற்றவர்கள் செய்யும் தவறான செய்கைகளுக்குத் துணை போகத் தூண்டுகிறது.

சிலரோ தங்களிடையே ஏற்பட்ட நட்புக்காக, தாம் செய்யும் குற்றங்களை நியாயப்படுத்த முயற்சிக்

றனர். ஆனால், இதனால் ஏற்படும் பாதகமான விளைவுகளையோ பாதிப்புகளையோ நினைத்துப் பார்க்கிறார்களில்லை. தானும் தமிழன், தன்னால் பாதிக்கப்படுவதும் தமிழன் என எண்ணுகிறார்கள் இல்லை.

இந்த நட்பு என்ற உறவுக்காக, நன்மைகளைச் செய்வதைவிடுத்துத் தீமைகளுக்கு உடந்தையாகும் தமிழர்களால் நஷ்டம் வெளிநாட்டில் வாழும் தமிழர்களுக்குத்தான்.

'19ம் நம்பர் அறைக்காரன் 5ம் நம்பர் அறைக்காரனுக்கு அடிக்கிற அளவுக்கு நாங்கள் என்ன கோழைகளே?! 'அவுட்ட சிற்றி'க்காரன் இங்கே வந்து சண்டித்தனம் செய்கிறதைப் பார்த்துக் கொண்டிருந்தால், எப்படித் தலை நிமிர்ந்து நடக்க முடியும்?' என்று தத்துவம் பேசுபவர்கள் பலர்.

இப்படிப் பேசுபவர்களில் பலர்தான், 'தமிழருக்கென ஒரு தாயகம் வேண்டும். தமிழரிடையே ஒற்றுமை வேண்டும்' என்றும் கூறுகிறார்கள். எனவே, மேற்கண்டவாறு தங்களை அறியாமலோ அறிந்தோ வளர்த்தெடுக்கும் சிறுசிறு பிரிவினைகளை முளையிலேயே கிள்ளி எறிவதுதான் தமிழரின் ஒற்றுமைக்கு வழிவகுக்கும் ஆணிவேராகும்.

பரன், சுதன் என்று இரு சகோதரர்கள் ஒரே நகரத்தில் வசிப்பவர்கள். ஆனால் தங்கியுள்ள விடுதிகள் வெவ்வேறு. பரன் தங்கியுள்ள விடுதிக்கு உள்ளே போவதென்றால் பாதணிகளை வாசலில் கழற்றிவிட்டுத்தான் உள்ளே செல்லமுடியும். ஆனால் சுதன் தங்கியுள்ள விடுதியில் அவ்வாறு இல்லை. எவரும் பாதணிகளுடன் உள்ளே நுழையலாம். ஆனால் சிறு விதிவிலக்கு.

பரனின் விடுதியில் உள்ளவர்கள் மட்டும் பாதணிகளைக் கழற்றிவிட்டுத்தான் உள்ளே நுழைய வேண்டும்.

'நாங்கள் அங்கே போனால் சப்பாத்துகளைக் கழற்றிப்போட்டு வரும்படி சொல்லுறாங்கள். அதனால் அவங்களும் இங்கே வாறதென்றால் சப்பாத்தைக் கழற்றிப்போட்டுத்தான் உள்ளே வரவேணும். அவங்களுக்கு ஒரு நியாயம் எங்களுக்கு ஒரு நியாயமே?' என்பது சுதனுடன் வசிப்பவர்களது வாதம்.

மற்றவர்கள் பாதணிகளுடன் சுதனின் விடுதிக்குள் நுழையும்போது, தாங்கள்மட்டும் பாதணிகளைக் கழற்றிவிட்டு நுழைவது அவமதிப்பாகத் தென்பட்டதாலோ என்னவோ, பரனின் விடுதியில் வசிப்பவர்கள் சுதனின் விடுதிக்கு வருவதில்லை. இதனால் சகோதரர்களான பரனும் சுதனும்கூட ஒருவரையொருவர் தாம் தங்கும் விடுதிகளில் சந்திக்காமல் வெளியிலேயே சந்தித்துக் கொள்ளுகிறார்கள். இது எப்படி இருக்கு?!

நட்பு ஆழமானதாக இருக்கலாம். ஆனால் ஆபத்தானதாக இருக்கக்கூடாது. தாயகத்தில் முன்பின் தெரியாதவர்கள் ஒரு இடத்தில் சந்திக்கும்போது ஏற்படும் நட்பு விரிவடைவதன்மூலம் ஆக்கச் சக்திகள் தோன்ற வேண்டுமே ஒழிய, அதுவே புதுப்புதுவகையான வேற்றுமைகளை வளர்க்கக் காரணமாகக் கூடாது.

## (6) மனிதாபிமானம்

வெளிநாட்டில் வாழும் தமிழர்கள், அந்த நாட்டு மக்களிடம் இருந்து சில பழக்க

வழக்கங்களைக் கற்றுத் தம்மை நெறிப்படுத்தவேண்டும் என்றாலும், சில விடயங்களில் இங்கு வாழும் தமிழர்கள் வெளிநாட்டவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்கிறார்கள் என்ற விடயத்தையும் கூறாமல் இருக்க முடியாது. அவற்றுள் ஒன்று மனிதாபிமானம்.

வெளிநாட்டவர்களுக்கு மனிதாபிமானம் இருக்கலாம். எனினும் இயந்திர வாழ்க்கைக்குத் தங்களைப் பழக்கப்படுத்திவிட்டதாலோ என்னவோ மனிதாபிமானத்திற்கும் பார்க்க சுயநலத்திற்கே முன்னிடம் கொடுக்கிறார்கள். சிலசமயம் ஏதாவது உதவிகளைச் செய்தாலும் அதற்கு ஏதோ ஒருவகையில் பிரதி உபகாரத்தை எதிர்பார்க்கிறார்கள். உதாரணமாக, மதம்பற்றிப் பிரச்சாரம் செய்பவர்களைப் பாருங்கள். அவர்களின் வார்த்தைகளைச் சரி என்று ஏற்றுக் கொண்டீர்களானால் பல உதவிகளைச் செய்வார்கள்.

இல்லையேல் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டார்கள்.

ஒரு சிலர் இதற்கு விதிவிலக்காக உள்ளார்கள். விதிவிலக்கானவர்கள் எல்லாச் சமூகத்திலேயும் உள்ளார்கள்.

அவர்களை விட்டுவிடுவோம்.

வயதான நபர் ஒருவர் வியாதி காரணமாக மயக்கம் அடைந்து வீதியில் விழுந்தால், ஒருவர்கூடக் கிட்டச் சென்று உதவிக்குக் கரம் நீட்டமாட்டார்கள். தொலைபேசியில் அம்புலன்ஸுக்கோ அல்லது பொலிஸுக்கோ தெரிவித்துவிட்டுத் திரும்பிக்கூடப் பார்க்காமல் சென்றுவிடுவார்கள்.

இதை மனிதாபிமானமான செயற்பாடு என்று கூறமுடியாது. வேண்டுமானால் ஏதோ கடமை ரீதியில் செய்வதாகத்தான் சொல்லமுடியும்.

ஆனால் எம்மவர்கள்.... சொந்த நாட்டிலோ அல்லது வந்த நாட்டிலோ மனிதாபிமானத்திற்கு முதலிடம் கொடுப்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இப்படி எம்மவர்களின் மனிதாபிமான உணர்வு இந்த நாட்டு மக்கள் சிலருக்கு வியப்பையும் ஆச்சரியத்தையும் தந்த சம்பவங்கள் பற்பல. எனினும் அவற்றுள் சில இங்கே....

அந்த நகரத்தின் கடைகளும் கந்தோர்களும் நெருக்கிக்கொண்டிருக்கும் பிரதான வீதி. அதன் ஓரத்தில் ஒரு வயோதிபர் பேச்சற்றவராய் விழுந்துகிடந்தார். தெருவில் நடமாடுவோர் எவருமே அவரைக் கவனிக்காத நிலையில், ரகு அவர் அருகே சென்று, அவரைத் தூக்கி, 'டக்ஸி' ஒன்றில் ஏற்றி வைத்தியசாலை ஒன்றில் சேர்த்தான்.

சில நிமிடங்களில் தகவல் அறிந்து வைத்தியசாலைக்கு வந்த அவரது வயதான மனைவி ரகுவைப் பாராட்டி, அவனது பெயர் முகவரிபோன்ற விபரங்களை அறிந்துகொண்டார். சில நாட்களின் பின்பு அந்த வயதான தம்பதி ஏராளமான பரிசுப் பொருட்களுடன் ரகுவின் வசிப்பிடத்தைத் தேடி வந்தார்கள்.

'கறுப்பர்கள் பொல்லாதவர்கள்' என்ற தங்களுடைய எண்ணத்தை ரகுவின் செய்கை மாற்றிவிட்டதாகக் கூறி, இன்று ரகுவைத் தங்களின் வீட்டில் ஒரு பிள்ளையைப்போல வைத்துப் பராமரிக்கிறார்கள்.

சேகர் ஜேர்மன் உணவு விடுதி ஒன்றில் சில மாதங்கள் வேலை செய்தான். ஆனால் அவனின் வேலை சரியில்லாததாலோ அல்லது ஜேர்மன்காரரின் நடுவே கறுப்பன் ஒருவன் வேலை செய்வதை ஏனையவர்கள் விரும்பாததாலோ என்னவோ, சேகரைத் தொடர்ந்து வேலைக்கு வரவேண்டாம் என்று கூறினார் அந்த முதலாளி.

சிலகாலம் சென்றது. அந்த முதலாளி நோய்வாய்ப்பட்டு வைத்திய சாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்ட செய்தி அறிந்த சேகர், அடிக்கடி வைத்தியசாலைக்குச் சென்று உடல் நலம் விசாரித்தான். அவருக்குத் தேவைப்பட்ட சிறுசிறு சரீர உதவிகளைச் செய்தான். சுருங்கக் கூறினால் அவரின் தனிமை சேகரைக் கண்டு மறைந்தது.

ஏதோ கடமைபோல் பூச்செண்டை வைத்துவிட்டுச் செல்லும் மனைவி பிள்ளைகளுடன், ஒரு நாளில் சில மணி நேரத்தையாவது எவ்விதப் பிரதியுபகாரமும் எதிர்பாராமல் செலவிடும் சேகரை ஒப்பிட்டுப் பார்த்திருக்கவேண்டும் அந்த முதலாளி. வைத்தியசாலையில் இருந்து முதலாளி வீடு திரும்பிய கையோடு சேகருக்கு மீண்டும் வேலை கிடைத்தது.

அது மட்டுமா....?! அவனின் நண்பர்கள் சிலருக்குக்கூட அங்கே வேலை கிடைத்தது.

இவற்றில் இருந்து புரிந்து கொள்ளக் கூடிய பொதுவான விசயம் ஒன்று உண்டு. அந்நிய நாட்டவர்கள், அதிலும் வயோதிபர்கள் இந்த இயந்திரமயமான வாழ்க்கைக்கு நடுவே மனிதாபிமானம் உள்ளவர்களின் அண்மையை விரும்புகிறார்கள். அதற்காக எதையும் செய்யத் தயாராக உள்ளார்கள் என்பதுதான் வெளிப்படை. மனிதாபிமானத்தைப் பொறுத்தவரையில் நிறம் ஒரு பொருட்டாக அவர்களுக்குத் தெரியவில்லை.

இளமைப் பருவத்தில் வேகமான வாழ்க்கைக்கு மத்தியில், பிறரின் உதவி தேவையில்லை என்ற அலட்சியப்போக்கு அவர்களிடம் தென்பட்டாலும் வயதாக.... வயதாக உண்மையான மனிதாபிமான உணர்ச்சிக்காக ஏங்குவதைத்தான் மேற்படி சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

சிலசமயங்களில் இத்தகைய மனிதாபிமானம் உள்ளவர்களுக்கு எதிர்பாராத ஏமாற்றமோ அல்லது 'ஏன் உதவி செய்யப் போனோம்?' என்று எண்ணி அசடு வழிகிற சம்பவங்களோ ஏற்படுகின்றன.

துரையும் பாபுவும் 'வஸ்'ஸில் அருகருகே அமர்ந்து பிரயாணம் செய்தார்கள். 'வஸ்'ஸின் உள்ளே நிறையச் சனம். அப்போது நிறைமாதக் கர்ப்பிணியான ஒரு வெள்ளை மாது 'வஸ்'ஸில் ஏற, அவளுக்கு இடம் கொடுப்பதற்காக எழுந்து நின்றான் துரை. எனினும் அந்தப் பெண்மணி துரையை அலட்சியமாகப் பார்த்தாளேயொழிய அங்கே உட்காரவில்லை.

காரணம் பாபுவின் அருகே உட்கார வேண்டுமே என்ற நிறவெறி. இதனால் துரை அசடு வழிய நேர்ந்தது. 'இனிமேல் ஜேர்மன்காரருக்கு உதவிசெய்யக் கூடாது' என்று நினைக்கத் தோன்றியது.

ஆகவே மனிதாபிமான உணர்வைச் சிலர் நிறவெறி, இனவெறி

காரணமாக அலட்சியப்படுத்துவதைத் தவிர்க்க என்ன செய்யலாம். ஒரேயொரு வழிதான் உண்டு. உதவி செய்வதற்கு முன்பு, 'உதவி தேவைப்படுகிறதா?' என்று கேட்டுச் செய்வதே நல்லது.

எனினும் இந்த அந்நிய நாட்டில் மனிதாபிமான உணர்ச்சியைப் பொறுத்தவரையில் நாம் ஒரு படி மேலே நிற்பதைத் தைரியமாகக் கூறிக் கொள்ளலாம்.

## (7) மீண்டும்.... மீண்டும்....

இங்கு அகதிகளாகக் குடியேறுபவர்களைத் தடுத்து நிறுத்தவோ அல்லது திருப்பி அனுப்பவோ, வட்டமேசை மகாநாடுகள் மூலம் இழுபறிப்பட்டு வந்த அரசியல்வாதிகளுக்கு— வாய்க்கு அவலாகப் புதிய நாஜிகளின் வெளிநாட்டவருக்கு எதிரான கோசங்களும் தாக்குதல்களும் கிழக்கு ஜேர்மனியில் பகிரங்கமாகி வெகுவிரைவாக விஷக் கிருமிகளாய் ஜேர்மனி பூராவும் பரவிக்கொண்டு இருக்கிறது.

இந்த ஜேர்மன் மண்ணை எந்த நோக்கத்திற்காக, என்ன நிலையில் மிதித்தோம் என்று சற்றேனும் பின்னோக்கிப் பாராமல், கண்டதே கோலம் கொண்டதே காட்சி என்ற எண்ணத்தில் தாயகத்தை மறந்தவர்கள் எல்லோரும் 1991 யூலையில் வெளிநாட்டவர்களுக்கு எதிரான புதிய சட்ட மூலங்கள் வரப்போவதைப் பத்திரிகைகளிலும் தொலைக்காட்சிச் சேவைகளிலும் அறிந்து, சுகமான சுகபோக சாம்ராஜ்யம் என்று கொண்ட பெறுமதியான நாணயத்தின் மேலமைந்த வாழ்க்கை வரண்டுவிடப் போகிறதே என்ற அச்சத்தில், அலறிப்புடைத்துக்கொண்டு நம் நாட்டு அழிவுகளையும் அவலங்களையும் உயிருக்கு உத்தரவாத மற்ற உறுத்தல்களையும் தமக்குச் சாதகமாக்கிக் கண்ணீரில் கோசங்களாக்கி, ஊர்வலமாகி— ஒன்று, இரண்டு வருட விசாக்களின் வரவால் மீண்டும் விழாக்களாகிப் பரிசில்களுடனும், பவுண்களுடனும், பட்டுக்களுடனும் புதுப்புதுக் கட்டுப் பணக் கார்களில் சுற்றி உலாவவும்— எத்தனை வருட, மாத விசாக்களைக் குறித்துத் தம்பட்டமடிக்கவும் முற்பட்ட சங்கதிகளின் ஆயுள்கள் கெட்டியாக முன்னரே புதிய நாஜிகளின் அச்சுறுத்தல்களினாலும் அட்டகாசங்களினாலும் மீண்டும் மீண்டும்.... தாயகத்தை முட்டும்போது ஏற்படப்போகும் ஆபத்திற்காக அச்சப்படத் தொடங்கிவிட்டார்கள்.

இங்கே நான் பார்த்த பலரில் உயிரைப் பற்றிய கவலைகளிலும் பொருட்களைப் பற்றிய கவலைகளே மிதமிஞ்சி நிற்கின்றன.

நண்பர் ஒருவர் கூறினார், ஐரோப்பா இணைந்துவிட்டால் எங்கேயாவது திரிந்து ஒளிந்து வாழலாம் என்று.... ஆனால் ஜேர்மனியில் தோன்றி வளருகின்ற இந்த வெளிநாட்ட்வர் துவேசமானது.... அதிலும் குறிப்பாக நிறத் துவேசமானது ஐரோப்பா முழுவதும் தணலாகப் புகைவதும், அது நெருப்பாக மாறும் காலம் வெகுதொலைவில் இல்லை என்பதும் பாவம்.... நண்பருக்குத் தெரியவில்லை.

இந்த நிலையில் நிரந்தரம் இல்லாத நாட்டில் தாய்மொழியை மறக்க முற்படுபவர்களையும், மறந்தவர்களாக

களாக நடிக்க விளைபவர்களையும், மொழியின்பால் விருப்பற்ற பெற்றோர் களினால் தாய்மொழியை அறிய முடியாத சிறார்களையும், நம் தாய்நாடு என்ன நிலையில் வர வேற்றாலும் அங்கே இவர்களின் நிலை— எதிர்காலம் எப்படி அமை யப் போகிறதைப்பற்றிப் பெரும்பாலா னோர் அக்கறைப்படுவதாகவோ.... வருங்கால வாரிசுகளின் எதிர்காலம் ஆகக் குறைந்தது தாய்மொழியின் அத்திவாரத்தில்தான் உருவாக முடி யும் என்பதைப்பற்றி உணர்ந்ததாக வோ தெரியாதது துரதிஷ்டமான விடயமாகும்.

இற்றைவரை இந்த மண்ணில் பெரிதும் சிறிதுமாக நூற்றுக்கும் மேற்பட்ட வெளிநாட்டவருக்கு, குறிப்பாக ஆசிய ஆபிரிக்கருக்கு எதிரான தாக்குதல் சம்பவங்கள் நிகழ்ந்து முடிந்ததின் பின் எத்தனை மொட்டைத் தலையர்கள் (புதிய நாசிகள்) விசாரணையின்மூலம் குற் றவாளியாக்கப்பட்டுச் சிறைகளில் அடைக்கப்பட்டார்கள் என்றால் எஞ் சுவது பூச்சியமே. அகதி முகாம்கள், வெளிநாட்டவரின் வீடுகள் பெரும்பா லனவற்றின் எரிவுக்கு மின் ஒழுக்கே முக்கிய காரணம் என்ற பதத்துள் நாசிகள் பாதுகாப்பானார்கள் என்பதே வெளிவராத சத்தியமாகும்.

இந்த வளர்ந்து வரும் இன வெறியரை இந்த அரசாங்கமும் கைகட்டிக் கண்டும் காணாமல் வேடிக்கை பார்ப்பதும், காவல்துறை உயர் அதிகாரிகளே பத்திரிகை களிலும் தொலைக்காட்சிச் சேவை களிலும் இத்தகைய சம்பவங்களுக்கு மறைமுக ஆதரவு தெரிவிப்பதுமான செயல்களானது எதிர்காலத்தில் எம் மையோ அல்லது எமது வாரிசுக ளையோ எவ்வளவுதூரம் பாதிக்கும் என்பதை உணர்ந்தும் இந்த நாட் டில் கிடைக்கும் சுகபோகங்களுக் காகவும் தாயகத்தின் அவலங்க ளுக்காகவும் அலட்சியப்படுத்தி — வேண்டாததைப் படோடோபமான வாழ்க்கையில் காலத்தையும் பணத் தையும் விரயமாக்கி, தாயகத்தையும் மொழியையும் புறக்கணிக்கும் செயற் பாடுகளுக்கு மீண்டுமொரு வெளி நாட்டவர் சட்டம்தான் சற்று நேர மாவது விலங்குபோடுமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இன்று வெளிநாட்டவர் துவே சத்தை வளர்ப்பதில் வெகுசனத் தொடர்புச் சாதனங்கள்கூட, அரசியல் வாதிகளுக்குச் சளைத்தவர்கள் அல்ல எனும் போக்கில் தமது சேவைக ளைத் தொடரும்போதில் நாம் ஒவ் வொருவரும் எமது வாழ்வுக்கான உத்தரவாதத்தை ஒன்று திரண்ட தீர்மானங்கள்மூலமே இயன்றவரையில் உருவாக்கமுடியும். அதைவிடுத்து மீண்டும்.... மீண்டும்.... தாய்நாட்டின் அழிவிலும்.... குருதியிலும் இந்த நாட்டில் எமது இருப்பை உறுதிப் படுத்தலாம் என நினைப்பது மிகவும் முட்டாள் தனமான செயலேயன்றி வேறில்லை.

## (8) கார் ஓட்டம்

ஜேர்மனியில் எதைப்பற்றி எழுதாது போனாலும்— நம்மவர்களின் வாகனக் கொள்வனவு களையும் பாதிப்புகளையும்பற்றி எழு தாமல் எப்படி?!

இங்கு புலம்பெயர்ந்து புகலிடம் தேடிய தமிழரிடம் என்ன இல்

லையோ— பெண் என்றால் நகை யும்— ஆண் என்றால் மோட்டார் வாகனமும் இருந்தால்தான் மதிப்பு என்ற புதிய அகராதி விளக்கம் இந் த அகதிச் சமூகத்தின் இடையே வேரூன்றி விருட்சமாக முயற்சிப் பது என்னவோ உண்மைதான்.

எனினும் இன்று பல வேலை வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள வாகன அனுமதிப்பத்திரமும், வாகன மும் பெரிதளவில் தேவைப்படுவ தையும் மறுப்பதற்கில்லை. ஆனால் தகுதிக்கு மேற்பட்ட படாடோபமான வாகனக் கொள்வனவுகளையும் — அதனால் ஏற்படும் வீண் பண விர யத்தையும் சுட்டிக் காட்டத்தானே வேண்டும்.

ஒருவர் ஐந்து வருடம் பாவித் த வாகனம் வாங்கினால் மற்றவர் நாலு வருடப் பாவனைக் கார் எடுப் பது: ஒருவர் 150 கிமீ வேகத்தில் ஓட்டினால் மற்றவர் 200 கிமீ வேகத் தில் கார் ஓட்டுவேன் எனச் சவால் விட்டு, வீதி விதிமுறைகளைப்பற்றி அக்கறைப்படாமல் நிகழ்த்திக் காட் டி நிரூபிப்பது போன்ற அர்த்த மில்லாத செயல்களால் விபத்துக்கள் ஏற்பட்டு— உயிருக்கு உத்தரவாதம் தேடிய நாட்டில் உயிர்கள் வீதிகளில் விழுவது எவ்வளவு பரிதாபகரமான நிகழ்வு?!

சங்கர் மிகவும் கஸ்டப்பட்டுச் சில ஆயிரம் மார்க் காசைச் செலவ ழித்து வாகன அனுமதிப் பத்திரம் பெற்றார். பெற்ற சில நாட்களில் புதி ய கார் ஒன்றை வாங்கினார்.

சங்கர் மதுவுக்கு அடிமையான வர். நள்ளிரவு மது போதாமை யினால், அதற்காக பெற்றோல் நிலை யத்திற்கு மது வெறியில் காரில் சென்றார். பொலிஸ் மறித்தது. மது கொடுத்த உற்சாகத்தில் வயல்வெளி களுக்கால் பொலிஸுக்கு காரோட் டம் காட்டினார். நாற்புறமும் பொ லிஸ் கார் சுற்றி வளைத்துத்தான் அவரைப் பிடிக்க முடிந்தது. முடி வில் வாகன அனுமதிப் பத்திரம் பறிமுதல். தண்டனையாகப் பண நஸ்டம்.

அன்று கால் தேய நடந்து, பழைய சைக்கிள் தேடி எடுத்து, தட்டிப்போட்டுப் பழுதுபார்த்த காலம் போய்— கட்டைப் புத்தகங்களில் ஏதோ கார் என்ற பெயரில் ஒரு பழையதை எடுத்து ஓடி— இன்று கட்டுப் பணத்துக்கோ, அல்லது முழுப் பணத்துக்கோ விரும்பிய விதக் கார்களை எடுத்துப் பாவிப் பதில் முன்னேற்றத்தைக் காணக் காலம் கனிந்திருக்கிறது.

ஆனால் இந்த முன்னேற்றம் வீதி விதிமுறைகளை ஒழுங்காகக் கடைப்பிடிப்பதிலும் காணப்படுகிறதா எனில்..... கேள்விக்குறிதான்.

வாகனங்களில் அளவுக்கு மேல திகமாக ஆட்களை ஏற்றுவது.

குறிப்பிட்ட வேகத்திலும் பார்க் க மேலதிக வேகத்துடன் ஓடுவது.

போதையில் போவது.

நித்திரை இன்றி வாகனம் செலுத்துவது.

முறையாகப் பயிலாமல் போலி அனுமதிப் பத்திரங்களைக் கையாள் வது.

ஜேர்மனியில் இடம்பெற்ற பல வாகன விபத்துகளுக்கும் உயிரிழப்பு களுக்கும் மேற்கூறிய காரணங்களே பொருந்துபவைகளாக உள்ளன.

கோபால் என்று ஒருவர் வீதி ஒழுங்குகளின்படிதான் செல்வார்.

ஆனால் அருகிலோ அல்லது எதிரிலோ வரும் வாகனம் தவறு செய்து தனது வாகனத்தை உரசும் என்று தெரிந்தால், அதைத் தவிர்க்க முயற்சிக்கமாட்டார். இவ்வாறே பல தடவைகள் தனது வாகனச் சேதத்தைக் காட்டிப் பல ஆயிரம் மார்க்குகளைக் காப்புறுதிமூலம் நட்ட ஈடாகப் பெற்றார். இப்படியான சந்தர்ப்பங்களைத் தானாகவும் வரவழைத்துக் கொண்டார். இறுதியில் இந்த உழைப்பதற்கான குறுக்கு வழி கோபாலின் உயிருக்கே இயமனாகியது.

யோகன், 'இரண்டு நாளாக நித்திரையில்லாமல் கார் ஓட்டினேன். மூன்று நாளாக ஓட்டினேன்' என்று பெருமையாகக் கூறுவார். இறுதியில் ஒருநாள் வாகனம் செலுத்தும்போதே அவர் நித்திரையாக, வாகனம் ஒரு கம்பத்தில் மோதி அவர் சடலமானார்.

இன்னுமொரு சம்பவம்....

சத்தியனும் சந்திரனும் ஒரே தொழிற்சாலையில் வேலை செய்பவர்கள்.

சந்திரன் புத்தம் புதிதாக ஒரு வாகனம் வாங்கினார். அதைத் தொழிற்சாலையில் சத்தியனின் பழைய வாகனத்துக்குப் பக்கத்திலேயே நிற்பாட்டுவார். இது சத்தியனுக்குப் பிடிக்கவில்லை. காரணம் தனது வாகனத்தக்கு அருகே புதிய வாகனம் நிற்பதால் தனக்கு மதிப்பில்லை என நினைத்தார். அதனால் சந்திரனை தனது வாகனத்துக்குப் பக்கத்தில் நிறுத்த வேண்டாம் என எச்சரித்தார். ஆனால் சந்திரன் அதனைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்தும் தனது வாகனத்தைச் சத்தியனின் வாகனத்தின் அருகே நிறுத்த.... ஒருநாள் சினமடைந்த சத்தியன் தனது வாகனத்தால் சந்திரனின் வாகனத்தை மோதி நசுக்க, இருவரிடையேயும் கைகலப்பு ஏற்பட்டு– தற்போது இருவருக்குமே அங்கு வேலை இல்லை.

நடுநிசி. வாகனத்தின் பின் இருக்கையில் மூன்று பெரியவர்கள். அவர்களின் மடியில் மூன்று சிறார்கள். வாகனத்தை ஓட்டியவர் தூக்கத்தின் பயமுறுத்தலால் பக்கத்திலிருந்தவரிடம் வாகனத்தைச் செலுத்து மாறு கொடுத்தார். அவரோ சாரதி அனுமதிப்பத்திரம் எடுத்துச் சில வாரங்கள்தான் இருக்கும். தொலைப் பிரயாண அனுபவம் இல்லாதவர். வாகனத்தைச் செலுத்த ஆரம்பித்து அரை மணித்தியாலம்தான் இருக்கும். அப்போது எதிரே ஒரு வாகனம் வர– அது தனது பாதையில் தவறாக வருவதாக நினைத்து எதிரே வந்த வாகனத்தின் பாதைக்கு தனது வாகனத்தைத் திருப்ப– கண நேரத்தில் அந்த எண்மரின் உயிரும் பரிதாபமாகப் பிரிந்தது.

இதற்குக் காரணம் அவசரமும் பதட்டமும் ஆகும்.

வீதி ஒழுங்கு முறைகளின்படி– அவற்றுக்கு மதிப்பளித்து வாகனம் செலுத்தினால் விபத்து என்ற பேச்சுக்கே இடமில்லை.

சிலசமயம் வேறு வாகனத்தின் தவறால் விபத்து ஏற்பட்டால் அதை விதிவிலக்கு என்றுதான் கூறமுடியும்.



# பாவரங்கு

## எரிந்த பக்கங்கள் மீண்டும் உயிர்பெறும்!

– காண்டீபன்

இனவாதச் சிங்களத்தார்
திட்டமிட்டு இட்ட தீயில்
எரிந்த பக்கங்கள் சில எழுந்து பேசின!
எழுந்த எம்மக்களைப்
பேசா மடந்தையராக்கிட
எரித்தனர் எம்மை
எரிந்த பக்கங்கள்
புகையாகிப் போகையிலே
புத்தனின் ப(க்)தர்களைக்
கண்டோம் சுபாஸ்ஹோட்டலிலே!
ஜே. ஆரின் கட்டளையைக்
காவியே காமினி
தீயாக்கி வைத்ததை
கருகிய பக்கங்கள் நாம்
பதிவாக்கி வைத்தோம்.

இயலாமையால் தவித்த இழிமகனொருவன்
குடிபோதையில் துணைவியை துவைத்ததைப் போல
தமிழீழ இளைஞர்கள் எழுச்சியின் வீச்சு
இனவாதச் சிங்களத்தை எச்சரித்த வேகத்தை....
அடக்க வழியறியா இனவாதச் சிங்களம்
அறிவுக் களஞ்சியத்தை அழித்தே மகிழ்ந்தது...

புனித சம்பத்தாசிரியர்
கல்லூரியதிபர்
வண பிதா லோங்கின்
பெருமுயற்சியாலே
தமிழார்வம் கொண்ட எம்
தமிழ்ப்பெரியார் தம் முயற்சி
திருவினையாகி எழுந்தது... நூலகம்...
ஓ...
அறிவுப் பூஞ்சோலையின்
நுழைவாயிலிலே...
சிலையாக யாரை வைப்போம்
என்றே ஆராய்ந்தார்
எம்மில் சில பெரியோர்
கல்விக்கரசி கலைமகளென்று
கனல் பறக்க மதவாதம் பேசி
தமிழரை மதத்தால்
பிரிக்கும் சூழ்ச்சியை
புல்லறிவாளர் சிலர் புகுத்தியவேளையில்
நல்லறிவாளர் சிலர் நல்கிய கருத்தால்
தமிழ்த்தாய் வடிவில் எழுந்தது சிலை...

ஆனாலும்,
யாழ்ப்பாணப் பெருமையை பறைசாற்றும் எண்ணம்
மேலோங்கி எழுந்ததால் தமிழ்த்தாய்க்கு
மாறுவேடம் போட்டார்
யாழ் நங்கை யென்று
நாமம் சூட்டியே முன்னே நிறுத்தினார்.

கொஞ்சக் காலத்தின் முன்னே
வந்த தேர்தலில் தமிழர் வாக்குகளுக்கு
வலைவீசும் நோக்கில்
வஞ்சகச் சந்திரிகா....
எரிந்த என் வீட்டை புதுப்பிக்க
செங்கல் சூளை கட்டுகிறே னென்று
புதுக் கயிறொன்று
திரித்து மகிழ்ந்தார்.

தேசியத்தலைவன் சூரியச்செல்வனின்
தேடலின் தீர்வாய்
அமையும் தமிழீழத்தில்
எரிந்த என் பக்கங்கள் மீண்டும் உயிர்பெறும்
என்னை எரித்து மகிழ்ந்தவரே ஒன்றுணர்வீர்...
நான் தமிழ்...
என்றுமிருப்பேன் அழியா வரமுடையேன்.

# பிறேமன் செ.யோகநாதனின் கவிதைகள்

## சூரியனே...!

பூமிக்கு விளக்கேற்றிய சூரியனே!
எங்கள் ஒளியை திருடிய கள்வனை
உனது அக்கினிக்கரங்களில் ஒப்படைக்கின்றோம்
அழித்துவிடு!


## மண்ணில் விழும்!

பூமியின் வியர்வைத் துளிகளை
உறிஞ்சிக் கொழுத்த மேகங்களை
வானுலக மக்கள் விரட்டியடித்தபோது
மழையாய் வீழ்ந்தன மண்ணில்...
கவலைப்படாதே தோழா!
உனது உழைப்பை உறிஞ்சிக் கொழுத்தவர்களும்
ஒருநாள்...
உனது காலடியில் மிதிபடுவார்கள்.

## பறப்பு!

நட்சத்திரங்களை வினாடியில்

வீழ்த்திவிடுவேன் என்று
வேதம் ஓதிய
போதி மரத்துப் போர்ப்பறவை
மின்மினிப் பூச்சிகளை வீழ்த்திவிட்டு
சூரியக் கிரகத்தை நோக்கிப் பறக்கின்றது!




## மனிதத் தூசு!

காற்றின் மேனியில் மனிதத் தூசிகள்
நீ காற்றைக் கழுவிச் சுத்தம் செய்
இல்லை யென்றால்...
உன்னால் மூச்சுவிடமுடியாது!

## பூசை!

தமிழுக்காய் தன்னை
தற்கொடை தந்த மாவீரனுக்கு...
அர்ச்சனை...
இன்னும் சமஸ்கிருதத்தில்தான்!



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வண. பிதா எச். எஸ். தாவீது அடிகளார் சிறந்த கல்விமான். பன்மொழிப் புலவர். சிறந்த மொழி ஆராய்ச்சியாளர்.

யாழ்.-சென். பற்றிக்ஸ் கல்லூரியில் மொழித்துறையில் சிறந்த சேவையாற்றினார்.

யாழ். நூலக அழிப்புச் செய்தியை அறிந்ததும் ஏற்பட்ட அதிர்ச்சியால் மாரடைப்பு ஏற்பட்டுக் காலமானார்.



# ஓயாத அலைகள் மூன்று
## சில பதிவுகள்...!

2.11.99

ஓயாத அலைகள் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டது. வன்னிப் பெருநிலப் பரப்பில் ஒட்டிசுட்டான் நெடுங்கேணி முகாம்கள் கைப்பற்றப்பட்டன.

3.11.99

ஒலிமடு, கரிப்பட்டிமுறிப்பு ஆகிய பிரதேசங்கள் மீட்கப் பட்டன.

6.11.99

புளியங்குளம், கனகராயன்குளம் ஆகிய இரு பலமான தளங்கள் கைப்பற்றப்பட்டன. மூன்றுமுறிப் பு, மேற்கு மாங்குளம், நயினாமடு, மதியாமடு ஆகிய பிரதேசங்கள் மீட்கப்பட் டன.

17.11.99

மணலாற்றுப் பகுதியில் தனிக்கல், சிலோன் தியேட்டர் முகாம்கள் உட்பட 5 பாரிய முகாம்கள் தாக்கியழிக்கப் பட்டன.

18.11.99

பாலம்பிட்டி, பள்ளமடு, பெரியமடு, தட்சணாமருதமடு, மடுத்திருப்பதி, மடுறோட் ஆகிய பிரதேசங்களிலிருந்த இராணுவ முகாம்கள் மினிமுகாம்கள் தொடர்காவல ரண்கள் என்பன கைப்பற்றியழிக்கப்பட்டன.

இதே நாளில் இரணைஇலுப்பைக்குள இராணுவ முகாமும் கைப்பற்றப்பட்டது.

11.12.99

வெற்றிலைக்கேணி கடற்படைமுகாம், கட்டைக்காடு புல்லாவெளி இராணுவமுகாம்கள் முற்றாகத் தகர்க்கப் பட்டன.

13.12.99

தென்மராட்சிப்பகுதியின் நாவற்குழி, சாவகச்சேரி, கொடிகாமம், இயக்கச்சி ஆகிய பிரதேசங்களில் அமைந்திருந்த படைமுகாம்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

15.12.99

வடமராட்சி கிழக்குக் கரையோரப் பகுதியிலுள்ள முக்கியத்துவமிக்க மருதங்கேணி இராணுவத் தளம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.

17.12.99

பரந்தன் இராணுவ முகாம் 23 மணிநேரச் சமரின் பின்னர் கைப்பற்றப்பட்டது. அதேவேளை கேரதவு, சங்குப்பிட்டி, அறுகுவெளி முகாம்கள் கைப்பற்றப்பட் டன.

21.12.99

பரந்தன் இரசாயணத் தொழிற்சாலை முகாமும், கோரக்கன்கட்டுக்குளம் ஆகிய இரு முகாம்கள் வீழ்த்தப்பட்டுள்ளன.

27.12.99

உமையாள்புர முகாம் தகர்க்கப்பட்டது.

29.3.00

தாளையடி, செம்பியன்பற்று ஆகிய பிரதேசங்களில் இருந்த இராணுவத்தினர் விரட்டியடிக்கப்பட்டனர். பளையிலிருந்த ஆட்லறித்தளம் தகர்க்கப்பட்டது.

3.4.00

பளைக்கும் எழுதுமட்டுவாளுக்கும் இடைப்பட்ட A-9 நெடுஞ்சாலையின் 6 கிமீ. பகுதி பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இத்தாவில் முகமாலைப்பகுதிகள் மீட்கப்பட்டன.

23.4.00

வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஆனையிறவுப் பெருந்தளமும் பிரதேசமும் மீட்கப்பட்டது.

30.4.00

பளை நகரம் மீட்கப்பட்டது.

10.5.00

நாவற்குழி, அரியாலை கொழும்புத்துறைப் பகுதிகள் கைப்பற்றப்பட்டன. தென்மராட்சியில் கோயிலாக்கண் டி, தனங்கிளப்பு ஆகிய இருதளங்கள் கைப்பற்றப்பட் டன.

11.5.00

பாசையூர், மணியந்தோட்டம் முதலான பகுதிகள் கைப்பற்றப்பட்டு யாழ் கச்சேரியை அண்மித்து புலிகளின் படையணிகள் நிலைகொண்டுள்ளன.

*(நன்றி: களத்தில்..)*

# கி.பி. அரவிந்தனின் கவிதை

92ன் சிறந்த கவிதைத் தொகுப்பாக சுதந்திர இலக்கிய விழா 93ல் விருதுபெற்ற முகம் கொள் கவிதைத் தொகுப்பிலிருந்து.........

## உறைதலாய்

நிழலும்
குறுகிக் கரையும்.
பார்வை தாழ
நெஞ்சுக்குள் கூசும்.
கறுப்பிலும் மாற்றுக் குறைந்த
என்னை
பூனைக் கண்கள்
உரிக்கும்.
எலும்பு மச்சைக்குள்ளும்
துழாவும்
இரத்தம்
கறுப்பாய் இல்லையோ..?
இகழ்ச்சி கொப்பளிக்கும்.

ஆபிரிக்காவுக்கு
தெற்கேதான் நரகமாம்.
நரக வெக்கையில்
கறுத்தவர்கள்
தங்கள் வளையத்துள்
நுழைவதோவாம்...

நரகத்தின்
வாசல் தாண்டி
வாஸ்கொடகாமா
பயணித்ததனால்தானே
குளிர் வலயத்தில்
சொர்க்கம் எழுந்தது.

யாருக்கு வேண்டும்
உனது சொர்க்கம்?
தட்டிப் பறிப்பதற்காய்
நான் வரவில்லை.
எங்கள் சொர்க்கத்தை
தட்டிப் பறித்தவர்கள்
நீங்களே என்பதும்
எப்போதும் மறவேன்.

நீர் உறிஞ்சி
மண்ணில் வேர் பிடித்து
கனி தரும் நிழல் தரும்
மரமாகி,
விதை பரப்பி,
தோப்பாகும் முன்னால்
வேரடி மண்ணுடன்
வீழ்த்தப்பட்டேன்.
நற்கனி கொடாத மரமென்றோ
உறைபனியில் வீசப்பட்டேன்.
குண்டி மண்ணையும்
தட்டி விட்டாயிற்று.

ஆணிவேரில் ஒட்டியவற்றை?

சாதிய வெக்கையிலும்
வேகாத உயிர்
நிறவெக்கையிலா வேகும்?
அந்நியன்
எங்கே, எப்போது
நேசிக்கப்பட்டான்?
இருநூறு முன்னூறு
ஆண்டுகள்
நாங்கள்
உன்னைப் பொறுத்திருந்தோமே
கொஞ்சம் பொறு

நிழலும்
குறுகிக் கரைய
நெஞ்சுக்குள் கூச
பனியில் உறைந்திருக்கிறேன்... □

# கவிதையின் சமுதாயச் செயல்பாடு

-டி.எஸ்.எலியட்
தமிழில்: முரளி அருபன்

இந்தத் தலைப்பு அநேகமாகப் பலருக்குப் பல்வேறு பொருள்களை வழங்கலாம். தலைப்புக்கு இதுதான் பொருள் எனச் சொல்வதற்கு முன்னால் எது பொருளல்ல எனச் சொல்ல விரும்புகிறேன். ஏதாவதொன்றின் செயல்பாட்டைப் பற்றிப் பேசும்போதெல்லாம் அது எவ்வாறு செயலாற்றியது அல்லது செயலாற்றுகிறது எனச் சிந்திப்பதைவிட எப்படிச் செயலாற்ற வேண்டும் என்றே சிந்திக்கிறோம். இது ஒரு முக்கியமான வேறுபாடாகும். ஏனென்றால் கவிதை என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி நான் பேசப் போவதில்லை.

கவிதை என்ன செய்ய வேண்டும் எனச் சொல்பவர்கள் கவிஞர்களாகவும் இருந்தால் அவர்கள் எத்தகைய கவிதைகளை எழுத விரும்புவார்களோ அத்தகைய கவிதைகளைப் பற்றியே பேச விரும்புவார்கள். இது எப்போதும் சாத்தியமே ஆயினும் இறந்த காலத்தில் கவிதைக்கு இருந்த செயல்பாடு எதிர்காலத்தில் மாற்றமடையலாம். ஆனால் அப்படி இருக்கும் பட்சத்தில் அது முந்தைய காலத்தில் எம்மாதிரியான செயல்பாட்டைக் கொண்டிருந்தது. அச் செயல்பாடு ஒரு குறிப்பிட்ட காலத்திலும் அல்லது மற்றொரு கால கட்டத்திலும் எவ்வாறு இருந்து வந்தது என்றும் இன்னொரு குறிப்பிட்ட மொழியிலும் அல்லது வேற்று மொழியிலும் உலகம் முழுவதிலும் அதன் செயல்பாடு எவ்வாறு இருந்தது என்றும் முதலில் தீர்மானித்துக் கொள்வது பயனுடையதாகும். கவிதை ஆக்கத்தில் நான் என்ன செய்கிறேன் அல்லது என்ன செய்ய விரும்புகிறேன் என்பதைப் பற்றி எளிதாக என்னால் எழுதிவிட முடியும். முக்கியமாக இதைத்தான் பல சிறந்த கவிஞர்கள் செய்ய முயன்றார்கள்: அல்லது முயன்றிருக்க வேண்டும் என நீங்கள் அறிந்து கொள்ளத் தூண்டுகிறேன்.

இறந்த காலத்தில் கவிதையைச் செயல்பட வைப்பதில் அவர்கள் முழுமையாக வெற்றிபெறவில்லை:

அப்படி வெற்றி பெறாதது அவர்களது பிழையல்ல. இறந்த காலத்தில் கவிதை என்பது.... அனைத்துச் சிறந்த கவிதைகளையும் சொல்கிறேன்... சமுதாயச் செயல்பாட்டைக் கொண்டிருந்திருக்கவில்லை என்றால் எதிர்காலத்திலும் அவ்வாறே செயல்பாடு அற்றிருக்கும்.

'நல்ல கவிதைகள்' என்று வரையறுப்பதன் மூலம் மற்றொரு வகை விளக்கத்தைப் புறந்தள்ளுகிறேன். கவிதை என்ற நிலையில் அதன் செயல்பாடு பற்றி விடையளிக்காமலேயே ஒருவர் பலவகைப்பட்ட கவிதைகளை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக் கொண்டு கவிதையின் சமுதாயச் செயல்பாட்டைப் பற்றிப் பலவிதமாக விளக்கலாம். கவிதைச் செயல்பாட்டைப் பொதுவாகவும் குறிப்பாகவும் வேறுபடுத்த விரும்புகிறேன். இதைப் போலவே நான் எதைப் பற்றிப் பேசவில்லை என்பது குறித்தும் தெளிவாக இருக்கிறேன். கவிதைக்கு முன்பே முடிவு செய்யப்பட்ட உணர்வுப்பூர்வ சமுதாய நோக்கம் இருக்கலாம். கவிதையின் தொல் வடிவங்களில் இந்நோக்கம் மிகத் தெளிவாக அமைந்துள்ளது. உதாரணமாக மந்திர வாசகங்களும் (runes) உச்சாடணங்களும் (chants) கண்திருஷ்டியைத் தடுக்கவும் சில நோய் நொடிகளைப் போக்கவும் அல்லது பூதகணங்களைச் சாந்தப்படுத்தவும் என அக்கவிதையின் சில கூறுகள் நடைமுறைத் தேவைக்காக இருந்தன. பழங்காலத்தில் கவிதையானது சமயச் சடங்குகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டது. இப்போதும் நடைமுறைத் தேவைக்கேற்ப நம்மால் பாடப்படும் துதிப் பாடல்களிலும் (hymn) கவிதையைப் பயன்படுத்துகிறோம். வீரகாவியம் மற்றும் புராணக் கதைகளின் தொல்வடிவங்கள் இனக்குழுக்களின் கேளிக்கை மற்றும் நிகழ்ச்சிக்கெனமட்டுமே இருந்தன் முன்னர் சரித்திரத்தை எடுத்துரைப்பனவாக இருந்திருக்கலாம்: அத்துடன் எழுத்து மொழியின் பயன்பாட்டுக்கு முன் சந்தங்களை அடிப்படையாகக் கொண்ட கவிதைகள் நினைவுகூரலுக்கு மிகவும் உதவியாக இருந்திருக்கலாம். பழங்கால நாடோடிக் கவிகள் (bards) கதைசொல்லிகள் (story tellers) மற்றும் அறிஞர்களின் நினைவுத்திறன் வியப்புக்குரியதே. பழங்காலக் கிரேக்கச் சமுதாயம் போன்ற வளர்ச்சியடைந்த சமுதாயங்களில் அங்கீகரிக்கப்பட்ட கவிதையின் சமுதாயச் செயல்பாடு முனைப்பாக இடம்பெற்றிருந்தது. சமயச் சடங்குகளிலிருந்து வளர்ச்சியடைந்த கிரேக்க நாடகம், மக்கள் கொண்டாடும் சடங்குகளாக எஞ்சித் தொன்றுதொட்டுவரும் சமய விழாக்களுடன் தொடர்பு கொண்டதாகத் தெரிகிறது. பின்டார் (Pindar) என்ற கிரேக்கக் கவிஞனது இசைபாடல் வகை (Ode) குறிப்பிட்ட சமுதாய நிகழ்ச்சியோடு தொடர்புற்று வளர்ந்தது. கவிதையின் இத்தகைய பயன்பாடு கவிதையின் சில பிரிவுகளின் வடிவம் செம்மையுற உதவியது.

முன்னரே நான் குறிப்பிட்டுச் சொன்ன துதிப்பாடல்களைப் போல இவ் வடிவங்களில் சில இன்றும் நவகவிதையில் வழங்கப்படுகின்றன. அறிவுறுத்தும் கவிதை (didaetic poetry) என்ற சொல்லின் பொருள் இன்று சில மாறுதல்களுக்கு உட்பட்டுள்ளது. அறிவுறுத்தல் என்ற

சொல் ஒரு கருத்தை எடுத்துரைப்பதையோ அல்லது நீதி போதிப்பதையோ அல்லது இரண்டையும் உள்ளடக்கிய ஒன்றையோ குறிப்பதாக இருக்கலாம். உதாரணமாக வர்ஜிலின் (Virgil) ஜியார்ஜிக்ஸ் (Georgics) என்ற அழகிய கவிதை வேளாண்மை பற்றி ஆழ்ந்த தகவல்களைக் கொண்டுள்ளது. இன்றைய நாளில் அதைப்போல வேளாண்மை பற்றிய புத்தகமாகவும் அதே நேரத்தில் கவிதையாகவும் படைப்பது என்பது அரிதாகும். காரணம் வேளாண்மை என்பது பெரும் சிக்கலாகவும் அறிவியலாகவும் இருப்பது இன்னொரு காரணம். இது உரை நடையில் சொல்லத் தக்கவையாக அமைந்தாலும் கவிதை வடிவம் இதற்குத் தேவைப்படவில்லை. ரோமானியர்கள் எழுதியதைப் போல நம்மால் வானியல் (Astronomical) மற்றும் அண்டவியல் (Cosmological) பற்றிய ஆய்வுகளையும் இன்று கவிதையில் எழுத முடியாது. விஷயத்தைப் பகட்டுடன் மறைமுகமாகச் சொல்வதைத் தனது நோக்கமாகக் கொண்ட கவிதையை உரைநடையானது புறந்தள்ளிவிட்டது. அறிவுறுத்தும் கவிதைகள் கொஞ்சம் கொஞ்சமாக நீதிக் கவிதைகளாகச் சுருங்கிவிட்டன. இவ் வகையில் கவிதை என்பது அங்கதத்தை (Satire) உள்ளடக்கியதாக உள்ளது. அது நையாண்டி (burlesque) எள்ளல் (Parody) போன்றவற்றுடன் ஓரளவு ஒத்துள்ளதாகவும் களிப்பூட்டுவதை அடிப்படை நோக்கமாகக் கொண்ட அங்கதத்தைப் பெருமளவு ஏற்றுக் கொண்டுவிட்டது. இதன்படி 17ம் நூற்றாண்டைச் சேர்ந்த டிரைடன் (Dryden) கவிதைகள் அங்கதக் கவிதைகளாகும். அக் கவிதைகள் ஒரு கருத்தைப் பரிகசிக்கின்றன. அவரது அறிவுறுத்தும் கவிதைகள் வாசகனைக் குறிப்பிட்ட அரசியல் அல்லது சமய நோக்கங்களுக்கு இணங்க வற்புறுத்துவதோடு உருவகப் பொருளாகப் புனைந்து சொல்லுகின்ற முறையிலும் அமைந்துள்ளன. இங்கிலாந்து தேவாலயம் ரோமானிய தேவாலயத்திற்குக் கட்டுப்பட்டது என்பதை வாசகனுக்கு உணர்த்தும் அவரது 'The Hind and the Panther' என்ற கவிதை இவ்வகையில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒன்று. 19ம் நூற்றாண்டில் ஷெல்லியின் (Shelley) பெரும்பான்மைக் கவிதைகள் சமுதாய மற்றும் அரசியல் புத்தாக்க ஆர்வத்தின் வெளிப்பாடாகத் தோன்றின.

இன்றைய கவிதை நாடகம் தனக்கேயுரிய சமுதாயச் செயல்தன்மையைக் கொண்டதாக இருக்கிறது. இன்று எழுதப்படும் பல கவிதைகள் தனிமையில் வாசிப்பதற்காக அல்லது சிறு குழுவினர் தங்களுக்குள் வாசிப்பதற்கேற்ப எழுதப்படுகின்றன. இந்நிலையில் நாடகக் கவிதை மட்டும்தான் கற்பனையான கருவைக் கொண்டு மேடையில் நடித்துக் காண்பித்து பார்ப்பவரிடையே ஒரு கூட்டுக் கருத்தை உண்டுபண்ண முடியும். கவிதை நாடகம் பிறவற்றிலிருந்து மிகவும் வேறுபட்டது. ஆனால் அத்தகைய கவிதை நாடகத்தின் சிறப்பு விதிமுறைகள் பொதுவான விதியோடு ஒத்துப் போகின்றன. இதைச் சொல்கையில் நாடகத்தின் தனித்த சமு

தாயச் செயல் பாட்டைப் பற்றி நான் இங்கே குறிப்பிடப் போவதில்லை.

தத்துவக் கவிதையின் தனிச் செயல்பாடு பற்றி ஆய்வு ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும் சொல்ல வேண்டும். கவிதை நாடகத்தின் செயல்பாட்டிலிருந்து நாடகத்திற்கும், விஷயத்தை அறிவுறுத்தும் கவிதையிலிருந்து இதன் கருத்துக்களின் இயக்கத்திற்கும், தத்துவம் அல்லது சமயம் அல்லது அரசியல் அல்லது அறக் கருத்துக்களை அறிவுறுத்தும் கவிதைக்கும் அந்தந்தத் துறைகளின் செயல்பாட்டுக்குமென ஒவ்வொரு கவிதையின் தனித்த செயல்பாடு அதன் பிறசெயல்பாட்டுடன் தொடர்பு கொண்டிருக்கும்: இதைப் பல கவிதைகள் தெளிவாக்கி இருப்பதை ஏற்கெனவே குறிப்பிட்டு இருப்பதாக நினைக்கிறேன். சிலவகைக் கவிதைகளின் செயல்பாடுகளைப் பற்றி நாம் பரிசீலித்தாலும்கூட அதன் சமுதாயச் செயல்பாட்டைப் பற்றி நாம் விளக்கிவிட முடியாது. ஏனெனில் இத்தகைய கருத்துக்கள் உரைநடையிலும் எழுத முடியும்.

இதனை விவாதிக்கும் முன்னர் எழுதக் கூடிய ஒரு மறுப்பினை அகற்றிவிட விரும்புகிறேன். சமுதாயம், அறம், அரசியல் அல்லது சமயக் கண்ணோட்டத்தை வெளிப்படுத்த கவிஞன் தன்னுடைய கவிதையைப் பயன்படுத்தும்போது சில நேரங்களில் மக்கள் அத்தகைய கவிதை முயற்சியைக் கண்டு ஐயுறுகின்றனர். கவிதையின் குறிப்பிட்ட இந்தக் கண்ணோட்டங்கள் விரும்பத்தக்கவையாக இல்லையெனில் அத்தகைய கவிதையை வெறுக்கின்றனர். வேறு சிலர் தமக்குப் பிடித்தமான நோக்கங்களுடைய கவிதையைக் கவிதையென்று ஏற்கின்றனர். ஒரு கவிஞன் ஒரு கவிதையைச் சமுதாயப் போக்கை எடுத்துரைக்கப் பயன்படுத்துகிறானா அல்லது இடித்துரைக்கப் பயன்படுத்துகிறானா என்பது பொருட்டல்ல. மக்களிடையே அந்தந்த நேரத்தில் கருத்தைப் பிரதிபலிக்கும் மோசமான கவிதைகள் குறைந்தகாலமே இருக்கும். ஆனால், மக்களின் போக்கு மாறினாலும் அதில் கவிஞனது நோக்கம் மாறினாலும் நல்ல கவிதைகள் வாழும். லூக்ரிஷியஸின் (Lucretius) கவிதைகளில் காணும் இயற்பியல் மற்றும் வான சாத்திரம் பற்றிய சிந்தனைகள் அவருக்கு அவப்பெயர் தந்தாலும் அவரது கவிதைகள் சிறந்த கவிதைகளாக நிற்கின்றன. 17ம் நூற்றாண்டின் அரசியல் சச்சரவுகள் பற்றிய டிரைடன் கவிதைகளின் பாடு பொருள் நம்மைக் கவரவில்லை. ஆயினும் அது இறந்தகாலத்தின் சிறந்த கவிதையென இப்போதும் நமக்கு இன்பத்தைத் தருகின்றன. அவர்கள் அன்று கவிதையில் எழுதிய விஷயங்கள் இன்று உரைநடையில் எழுதப்படுபவையாக இருக்கின்றன.

கவிதையின் முக்கியமான சமுதாயச் செயல்பாட்டைக் கண்டறிய வேண்டுமானால் அதன் தெளிவான செயல்பாட்டைக் கண்டறிய வேண்டும். முதலில் கவிதை என்பது இன்பத்தைத் தர வேண்டும் என்பதில் திடமாக இருக்க வேண்டுமென நினைக்கிறேன். என்ன மாதிரியான இன்பமென நீங்கள் கேட்கலாம். கவிதையிடம் நாம் எதிர்பார்க்கும் இன்பம் என்றுதான் இதற்குப் பதில்

சொல்ல முடியும். வேறு விதமான பதில் நம்மை அழகியல் துறைகளுக்கும் கலையின் திறன்களுக்கும் இட்டுச் சென்றுவிடும்.

எந்த ஒரு சிறந்த கவிஞனும்... அவன் பெரிய கவிஞனாக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி... கவிதை இன்பத்தோடு வேறொன்றையும் தருகின்றான். இதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். இன்பத்தை மட்டுமே கவிதை தந்தால், அப்படிப்பட்ட இன்பம் மேன்மையானதல்ல. நான் ஏற்கெனவே எடுத்துக் காட்டியதைப் போல கவிதையின் குறிப்பிட்ட நோக்கத்திற்கு அப்பாலும் அதில் அவ்வப்போது நேரும் சில புதிய அனுபவங்களின் உணர்த்துதல் இருக்கும். அல்லது ஏற்கெனவே அறிந்த ஒன்றைப் பற்றிய புதிய புரிதலைத் தருவதாக இருக்கும்: அல்லது வார்த்தைகளால் சொல்ல முடியாத ஆனால், நம்முடைய பிரக்ஞையை விரிவுபடுத்தும் அல்லது உணர்வுகளைச் செம்மைப்படுத்தும் அனுபவமாக இருக்கும். இந்தக் கட்டுரை கவிதையிலிருந்து தனித்துப் பயன்பாடு பற்றில்லாமல் தனிநபர் பெறும் இன்பத்தின் தரம் பற்றியே கூறுகிறது எனலாம். கவிதையானது, கவிதை இன்பத்துடன் அதையும் கடந்து வாழ்க்கை மாறுதலையும் நமக்குத் தர வேண்டும் என்பதைப் பற்றி நாம் அனைவரும் புரிந்து கொண்டிருப்பதாக நினைக்கிறேன். இந்த இரண்டு விளைவுகளை உண்டுபண்ணாத கவிதைகள் கவிதைகளே இல்லை என எளிதாகச் சொல்லிவிடலாம். ஆனால் நாம் இவற்றை ஏற்கும் அதேசமயத்தில் இதையெல்லாம் கடந்து ஒட்டுமொத்தமாகச் சமுதாயத்திற்கு என்ன செய்கிறோம் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். நான் இதை விரித்த பொருளில் சொல்லுகிறேன். ஒவ்வோர் இன மக்களும் அவரவர்களுக்குச் சொந்தமான கவிதையைப் பெற்றிருக்க வேண்டும். பொதுவாகக் கவிதை இரசிகர்களைப் பற்றி நானிங்கே குறிப்பிடவில்லை. அவர்கள் எப்போதும் பிறமொழியைப் பயின்று அங்குள்ள கவிதைகளையும் இரசிப்பார்கள். ஆனால் அக்கவிதை, இனமக்களுக்குச் சொந்தமான ஒட்டுமொத்த சமுதாயத்தில் மாற்றத்தை உண்டுபண்ணுகிறது. அதுவும் கவிதைகளை வாசிக்காதவர்களிடத்தும் மாற்றத்தை உண்டு பண்ணுகிறது. இங்கே தங்கள் நாட்டுத் தேசியக் கவிஞர்களின் பெயர்கள் தெரியாதவர்களையும் அவர்களோடு சேர்த்துக் கொள்கிறேன். இதுவே இந்தக் கட்டுரையின் மையக் கருத்து.

கவிதை பிற கலைகளிலிருந்து வேறுபட்டிருக்கிறது. கவிதையானது கவிஞன் சார்ந்துள்ள இனம் மற்றும் அவனது மொழியைச் சேர்ந்த மக்களுக்கான விழுமியங்களைத் தருவதில் பிற கலைகளிலிருந்து வேறுபட்டுள்ளது. இசையும் ஓவியமும் மண்ணின் தன்மையுடன் இனப் பண்புகளைக் கொண்டிருந்தாலும் கூட வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவரால் அவற்றின் நலம் பாராட்டுவதில் சிக்கலில்லை. மூலமொழியில் எழுதப்பட்ட உரைநடையின் சிறப்பம்சம் மொழிபெயர்க்கும் போது மறைந்து போகிறது. ஒரு கவிதையை மொழிபெயர்ப்பில் வாசிக்கும் போது ஏற்படும் பொருளிழப்பை

விடவும் ஒரு நாவலை வாசிக்கும் போது ஏற்படும் பொருளிழப்பு மிக வும் குறைவே. அறிவியல் கட்டுரை யை மொழிபெயர்ப்பில் வாசிக்கும் போது அங்கே பொருளிழப்பு உண் டாவதில்லை. ஐரோப்பிய மொழி வரலாற்றில் உரைநடையைவிடவும் கவிதையானது மண்ணின் தன்மை அதிகம் கொண்டிருப்பதைப் பார்க்க முடியும். மத்திய கால வரலாற்று வழி சில நூற்றாண்டுகளுக்குள் லத்தீன் மொழியானது தத்துவம், சம யம், அறிவியலாக இருந்தது. கவி தையின் மூலமாகத்தான் மக்கள் மொழி இலக்கியமொழியாகப் பயன்ப டுகிற உத்வேகம் கொள்ளலாயிற்று. ஆகக் கவிதை என்பது அடிப்படை யில் எண்ணங்களையும் மன எழுச் சியையும் வெளிப்படுத்துவதாக உள் ளது. உணர்வும் உணர்ச்சியும் சிறப் பானவை: சிந்தனை பொதுவானவை யாகும்.

அயல்மொழியில் ஒன்றை உணர் வதைவிடவும் சிந்தித்துப் பார்ப்பது எளிதானது. இதனால் கவிதையை விடவும் மிக உறுதிவாய்ந்த தேசி யத்தன்மை கொண்ட கலை வேறில் லை எனலாம். மக்களின் தாய்மொழி யை அவர்களிடமிருந்து பறித்து ஒடுக்கிப் பிற மொழியைப் பள்ளிக் கூடங்களில் கட்டாயமாக்கி அப்புதிய மொழியில் மக்களைச் சிந்திக்க வைக்க நீங்கள் பயிற்றுவிக்கும் போதும் அவர்களது தாய்மொழியை அழித்தொழிக்க முடியாது. அது உணர்வுகளின் வாகனமாகக் கவிதை யில் மீண்டும் தோன்றும். புதிய மொழியில் சிந்தியுங்கள் என்று நான் சொல்வதன் பொருள் உணர்வுகளைப் புதிதாய் வெளிப்படுத்துங்கள் என்பதே. ஒரு மொழியிலிருந்து பிற மொழியில் சொல்லப்படும் கருத்து மாறாதிருக்கும். ஆனால் ஒரு மொழியின் உணர்ச்சியையும் மன எழுச்சியையும் வேற்று மொழியில் வெளிப்படுத்தும்போது மாறிவிடும். அயல் மொழிகளில் ஏதேனும் ஒன் றை நன்றாகப் பயில்வதால் கூடுத லான பண்பாளுமை (Supplementary personality)யைப் பெறுகிறோம். பிற மொழியைப் பயில்வதால் வேறொரு நபராகிறோம் என்பதாலேயே அம் மொழியைப் பயிலாமல் இருக்கி றோம். உன்னதமான மொழியை, அம்மொழி பேசும் மக்களை அழித் தாலன்றி அழிக்க முடியாது. ஒரு மொழியின் இடத்தை மற்றோர் மொழி பிடித்துக் கொள்கிறது என் று சொன்னால் அதில் சில பயன் பாடுகள் இருப்பதால்தான். அது வெறும் மொழி வேறுபாடு மட்டு மல்ல. சிந்தனையை வெளிப்படுத்து வதிலும் உணர்வுகளை வெளிப்படுத் துவதிலும்கூட இந்த இடம் பற்று கிற மொழி நுட்பம் வாய்ந்ததாக இருக்கிறது. பண்படாத மொழி அத்தகைய பயன்களை அளிக்காது.

உணர்வெழுச்சியும் எண்ணங்க ளும் மக்கள் மொழியில் சிறப்பாக வெளிப்படுத்துகின்றன. அதாவது மக்கள் பேசும் மொழியின் கட்ட மைப்பு (Structure) ஒலிநயம் (Rythm) ஓசையுடைமை (Sound) மரபுத் தொடர்கள் (Idioms) போன்றவை மக்களது குணச் சித்திரங்களை வெளிப்படுத்துகின்றன எனலாம். உரைநடையைவிடவும் கவிதையே உணர்வெழுச்சியையும் எண்ணங்க ளையும் வெளிப்படுத்துவது என்று நான் சொல்கையில் கவிதைக்கு

அறிவார்ந்த விஷயங்களோ அர்த்தங்களோ தேவையில்லை என்பதாகாது: அல்லது சிறந்த கவிதை ஏனைய மாற்றுக் குறைந்த கவிதையைவிடப் பொருளற்று இருக்கும் என்றும் ஆகாது. ஆனால் இப்படி நான் சொல்லிக் கொண்டே போவதென்பது இக் கட்டுரையின் நோக்கத்திலிருந்து விலகிச் செல்வதாகிவிடும். மக்கள் தங்களது உணர்வுபூர்வ வெளிப்பாட்டை பிற கலைகளை விடவும் தங்கள் சொந்த மொழிக் கவிதைகளிலே வெளிப்படுத்துவார்கள். நல்ல கவிதை எல்லோராலும் ஏற்கப்பட்டுப் புரிந்து கொள்ளப்பட்ட உணர்வுகளோடு மட்டும் வரம்பு கட்டிக்கொள்ளும் என்பது பொருளல்ல. நல்ல கவிதையின் வரம்பை மக்களறியும் கவிதையோடு மட்டும் நாம் நிறுத்திவிடக் கூடாது.

ஓர் இனத்தவருள் திருந்திய நுட்பமான உணர்வுடையோர்க்கும் அவ்வாறு பண்படாத உணர்வுடைய அதே இனத்தைச் சேர்ந்த மக்களிடையேயும் சில கூறுகள் பொதுத் தன்மை உடையதாக இருக்கும்.

ஆனால், பண்பட்ட நுட்பமான உணர்வுடையவர்களைப் போன்றவர்கள் அவர் தரமுடையவர்களாயினும் அயல் மொழியினர்க்கும் அவர்களுக்கும் பொதுத்தன்மையான கூறுகள் இருக்காது. பண்பாடு செழிப்புடன் இருக்கும்போது சிறந்த கவிஞர்கள் தம் நாட்டு மக்களுக்கு அனைத்து நிலைகளிலும் அறிவு புகட்ட ஏதேனும் சில கருத்துக்களைக் கொண்டிருப்பார்கள்.

கவிஞன் மறைமுகமாக மொழியைப் பாதுகாப்பதுடன் அதை விரிவாக்கி வளர்ச்சி நிலைகளைக் கொண்டுவரும் சேவை செய்யக் கடமைப்பட்டவன். நேர்முகமாக மக்களுக்குச் சேவை செய்யக் கடமைப்பட்டவன் என்பது அடுத்த நிலையில்தான் எனக் கருதப்படுகிறது. ஆனால், அவ்வாறு இல்லை. மற்றவர்கள் என்ன உணர்கிறார்கள் எனச் சொல்கையில் அதை மிகவும் உணரத்தக்கதாக மாற்றுகிறான். அத்துடன் மக்களுக்கு அவர்கள் ஏற்கெனவே உணர்ந்ததை நன்கு உணர்த்துகிறான். இதன் காரணமாக அவர்களைப் பற்றிய புரிதலை அவர்களுக்குத் தெளிவு படுத்துகிறான். ஆனால், அவன் பிறரைவிடவும் உணர்ச்சித்திறன் கொண்டவன் மட்டுமல்ல. பிறரிடம் இருந்து வேறுபட்டவன். இதுவே அவனது வாசகர்களை அவர்கள் இதுவரையில் காணாத புத்தம்புதிய உணர்வுகளைத் தெளிவுடன் பகிர்ந்துகொள்ளச் செய்கிறது. இதுவே கருத்துப் பிறழ்வு கொண்ட அல்லது பைத்தியமான எழுத்தாளர்க்கும் உண்மையான கவிஞர்களுக்கும் இடையேயான வேறுபாடாகும். முதலில் சொன்ன கருத்துப் பிறழ்வான எழுத்தாளரது உணர்வுகள் கவனம் கவர்வதாக இருந்தாலும் அவற்றைப் பகிர்ந்து கொள்ளமுடியாது. இதனால் அத்தகைய உணர்வுகள் பயனற்றவை எனலாம்.

சிறந்த கவிஞன் பல்வேறு உணர்ச்சி விகற்பங்களைப் பிறரால் புரிந்துகொள்ளும் வகையில் படைக்கிறான். அத்துடன் அவற்றை உணர்த்துவதில் தான் பேசும் மொழியை விரிவுபடுத்தவும், வளப்படுத்தவும் செய்கிறான்.

ஒருவர்க்கொருவர் வேறுபடுகிற

உணர்ச்சி விகற்பங்களை எடுத்துக் காட்டியதோடு வேறுபட்ட பல மொழிகளிலே அவை வலியுறுத்தப் படுவதையும் வளர்க்கப்படுவதையும் பற்றி நான் நிறையச் சொல்லி விட்டேன். மனிதர்கள் உலகை வெவ்வேறு இடங்களில் மட்டும் வெவ்வேறுவிதமாக உணர்வதில் லை. வெவ்வேறு காலங்களில் வெவ்வேறுவிதமாகவும் உணர்கி றார்கள். நம்முடைய உணர்வுகளும் சீனர்களின் உணர்வுகளம் ஒன்றல்ல. அதைப்போல பல நூற்றாண்டு களுக்கு முன்னர் வாழ்ந்த நம்மு டைய மூதாதையர்களின் உணர்வுக ளும் நம்முடைய உணர்வுகளும் ஒன்றல்ல. நமது தந்தையர் காலத் திலும் அது ஒரேமாதிரியாக இருந்த தில்லை. நாம் சென்ற ஆண்டு இருந்ததைப்போல இந்த ஆண்டில் இருப்பதில்லை. இது தெளிவானதே. இதன் காரணமாகத்தான் நாம் தொடர்ந்து கவிதையைப் படைத்துக் கொண்டே இருக்கிறோம். படித்த பல மக்கள் தங்கள் படைப்பாளிகளின் படைப்புகளை வாசித்திராதபோதும் தங்கள் நாட்டில் காணப்படும் ஏனை ய தனிச் சிறப்புகள்மீது பெருமிதம் கொள்வதைப் போல இச் சிறந்த படைப்பாளிகளைப் பற்றியும் பெருமி தம் கொள்வார்கள். ஒருசில படைப் பாளிகளே அரசியல் சொற்பொழிவு களில் குறிப்பிடும்படியான புகழ்பெற் றுத் திகழ்கின்றனர். ஆனால் பெரும் பாலான மக்கள் இது போதாது என்பதை உணராமல் இருக்கிறார் கள். சிறந்த படைப்பாளிகளை குறிப் பாக சிறந்த கவிஞர்களைத் தோற்று விக்காமல் போனால் மக்களது மொழி சீர்குலைவதோடு பண்பாடும் சீர்குலையும். அத்துடன் அவை இன்னொரு வலிமையான கலாச்சா ரத்தில் கரைந்துவிடும்.

நம்மிடம் வாழும் இலக்கியம் இல்லாமல் போனால் பழங்கால இலக் கியங்களிலிருந்து வெகுவாக நாம் தொடர்பறுந்து போவோம். இலக்கி யத்தின் வளர்ச்சித் தொடர்பைப் பரா மரிக்காமல் போனால் நம்முடைய பழங்கால இலக்கியம் நம்மிடமிருந் து பெருமளவு ஒதுங்கி அன்னிய மாகிவிடும்: பிற நாட்டு மக்களின் இலக்கியங்கள் எப்படி நமக்கு அன் னியமாகுமோ அதைப்போல, பல் வேறு வழிகளில் நம்முடைய சூழல் லௌதீக மாறுதல்களால் மாற்றமடை வதால் நம்முடைய வாழ்க்கைமுறை மாற்றத்திற்கு உள்ளாகிறது. இதன் காரணமாக நம்மடைய மொழியும் மாற்றமடைகிறது. மிகத் தேர்ந்த உணர்திறனும் சொல்வன்மையும் சேர்ந்து அமையப்பெற்றவர்கள் நம் மிடையே இல்லையென்றால், நமது வெளிப்பாட்டுத் திறனும் கரடு முரடான உணர்வுகளை உணரும் திறனும் இழந்து, சக்தியற்றுப் போய் விடுவோம்.

கவிஞன் தன் வாழ்நாளில் தனக் கான வாசகர்களைப் பெருமளவில் பெற்றிருந்தானா என்பது முக்கிய விஷயமல்ல. ஒவ்வொரு தலை முறையிலும் அவனுக்கான வாசகர் குழுவினர் சிலரேனும் இருந்து கொண்டிருக்க வேண்டும். கவிஞர் கள் காலஞ்சென்ற கவிஞர்களாக மட்டுமில்லாமல் காலத்தை வென்ற கவிஞர்களாகத் தொடர்வதன் சிறப் பையே இங்கே குறிப்பிடுகிறேன். ஒரு கவிஞன் அதிவிரைவில் தனக் கான வாசகர்களைப் பெருமளவில்

அடைவதென்பது பெரும் சந்தேகத்திற்கு இடமளிப்பதாகும் என்று முன்னர் சொன்ன கருத்தையும் இங்கே வலியுறுத்துகிறேன்.

கவிஞன் புதிதாக எதையும் படைக்கவில்லை என்ற எண்ணத்தை நமக்குத் தோற்றுவிக்கிறது: ஏற்கெனவே மக்கள் அறிந்ததைச் சொல்கிறான்: அவன் தனக்கு முந்தைய தலைமுறைக் கவிஞர்கள் என்ன சொன்னார்களோ அதையே சொல்கிறான் என்ற எண்ணத்தையும் தோற்றுவிக்கிறது. கவிஞனுக்குத் தன் வாழுங்காலத்தில் அவனைப் புரிந்துகொண்ட சரியான வாசகர் குழு இருப்பது அவசியமாகும். தனித்தன்மையுடன் கவிதை நலம் பாராட்டும் சிறிதளவு தேர்ந்த வாசகர் இருக்க வேண்டும். வாழுங்காலத்தின் சிந்தனையைவிட முற்போக்கான புதுமையை உடனடியாக உட்செரித்துக் கொள்ளும் ரசனைத்திறன் மிகுந்த வாசகர் இருக்க வேண்டும். ஒவ்வொருவரையும் முன் வரிசையில் நிறுத்துவது என்பது பண்பாட்டு வளர்ச்சி என்பதன் பொருளாகாது.

பண்பட்ட வாசகர்களை முன்னிறுத்தவும் ஒரு தலைமுறை இடைவெளி அளவுக்குப் பின்தங்கிவிடாதும் பார்த்துக் கொள்வதுதான் ரசனைப் பண்பாட்டு வளர்ச்சி என்பதன் பொருளாகும். முதலில் மெல்லுணர்வின் மாற்றமும் வளர்ச்சியும் மொழியினுள் சீராகச் செயல்பட்டுப் பரவும். அவ்வுணர்வின் செல்வாக்கானது பிறரிடம் உண்டாவதுடன் வெகுஜன உழுத்தாளரிடமும் தடையின்றி நிகழும். அப்போது அவர்கள் நன்கு புகழ்பெற்று வருவார்கள். புதிய முன்னேற்றமும் ஏற்படக்கூடும். இதுமட்டுமில்லாமல் மறைந்த கவிஞர்கள் இத்தகைய வாழும் எழுத்தாளர்கள் மூலமும் உயிர்த்து உலாவுகிறார்கள். அத்தகைய கவிஞர்களைப் போல ஆங்கில மொழியை வெகு ஆழமாகப் பாதித்தவர் ஷேக்ஸ்பியர் (Shakespere). அவருக்கு அடுத்து வந்த இலக்கியப் படைப்பாளிகள் பாதித்ததை விடவும் பாதித்தவர். மிகச் சிறந்த கவிஞர்கள் பெற்றுள்ள இலக்கியக் கூறுகள் உடனடியாக வெளிச்சத்திற்கு வந்து பரவிவிடுவதில்லை. சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு மற்றக் கவிஞர்களின்மேல் செல்வாக்கைப் பதித்து, வாழும் மொழியின்மேல் தங்கள் பாதிப்பை அவர்கள் தருவார்கள். கவிஞன் தன் மொழிச் சொற்களில் தெளிவான பயிற்சியைப் பெற்றிருக்க வேண்டும். அக் கவிஞன் தன் காலத்தின் பதங்களைச் சிறப்பாகக் கையாளும் கவிஞர்களைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டும். அவ்வகையில் மொழியைப் புதிதாக்கியவர்களைப் பற்றியும் அவன் தெரிந்திருக்க வேண்டும்.

எந்த அளவுக்கு கவிதையின் செல்வாக்கு செல்லும் என்பதைச் சொல்லி இருக்கிறேன். ஸ்திரமாகச் சொல்வதானால் பின்வரும் காலத்தில் மொழியில் ஒரு மாறுதலும், உணர்திறனில் ஒரு மாறுதலும் சமுதாய மக்களின் வாழ்க்கையில் ஒரு புதுவிதமாகவும் அமைந்திருக்கும் ஒரு கவிதை, எந்தச் சமுதாயத்திற்கு உரியதாக இருக்கிறதோ, அதை அம்மக்கள் இரசிக்கிறார்களோ இல்லையோ அக் கவிதை இருந்து கொண்டிருக்கும். மங்கலாக, சூட்சுமமாக இருக்கும் கவிதைச் செல்

வாக்கை நிறுவிக் காட்டுவது என்பது மிகவும் கடினமான செயலாகும். அது நிர்மலமான வானத்தில் பறக்கும் பறவையைப் பின்பற்றுவது போலவும் அல்லது விமானத்தைப் பின்பற்றுவது போலவும் ஆகும். அது அருகாமையில் பறக்கும்போது நீங்கள் அதனைத் தெளிவாகப் பார்க்கலாம்.

வெகு உயரத்தில் பறப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பதால் அது உங்களுக்குப் புலப்படும். மிகமிக உயரத்தில் பறக்கும்வரையில் உங்களால் அதனைப் பார்க்க முடியும். பிறர்க்கு அதனைச் சுட்டிக் காட்டும்போது அவர்களால் அதனைப் பார்க்க முடியாது. எனவே கவிதையால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட வாசகர் வழியே கவிதைச் செல்வாக்கை, எங்கும் நிலவும் கவிதைகளில் கண்டறியலாம். நீங்கள் குறைந்தபட்சம் தேசியப் பண்பாடு உயிர்ப்புடனும் வளத்துடனும் இருப்பதைக் கண்டறிய வேண்டும்போது வளமான சமுதாயத்தில் தொடர்ச்சியான பரஸ்பர செல்வாக்கின் ஒவ்வொரு பகுதியும் மற்றொரு பகுதியோடும் ஊடாடுவதைப் பார்க்கலாம். இதைத்தான் கவிதையின் சமுதாயச் செயல்பாடு என்ற விரிந்த அர்த்தத்தில் சொல்கிறேன். கவிதையால் பாதிப்பு அடைந்தவர்களைப் பற்றி தெரிந்து கொள்வதன் மூலமும் கவிதையை வாசிக்காதவர்களைப் பற்றி அறிந்து கொள்வதன் மூலமும் கவிதை பற்றி தெரிந்து கொள்வீர்கள். கவிதையின் சிறப்புக்கும் ஆற்றலுக்கும் தக்கபடி ஆங்கிலக் கவிதையின் சமுதாயச் செயல்பாடு அமைந்து அந்நாடு முழுவதிலுமான மக்களின் பேச்சையும் உணர்வையும் அது பாதிக்கும்.

கவிஞர்களால்தான் மொழியானது உறுதி செய்யப்படுகிறது என்று நான் சொல்வதாகக் கற்பனை செய்துவிடக் கூடாது. இதைவிடவும் பண்பாட்டுக் கட்டமைப்பு மிகவும் சிக்கலானது. உண்மையில் நம்முடைய கவிதையின் தரமானது மக்களின் மொழிப் பயன்பாட்டின் அடிப்படையில் அமையும் என்பது உண்மையாக இருக்கலாம். கவிஞன் தன்னைச் சுற்றிப் பேசுகின்ற மொழியைத் தனக்கான கவிதை மொழியாக எடுத்துக் கொள்ளவேண்டும். அம்மொழி வளர்ச்சியுற்றால் அவனுக்குப் பயன் தரலாம். அம்மொழி சிதையும்போது இயன்றளவு அவன் அம்மொழியைச் சிறக்கச் செய்ய வேண்டும். கவிதையால் ஓரளவுக்கு மொழியின் வனப்பைக் காக்கவும் முடியும்; இழந்துபோன வனப்பை மீட்கவும் முடியும். நவீன காலத்திலுள்ள வளர்ச்சிகளைப் பார்த்திராத பழங்காலங்களில் பயன்பட்ட மொழி நவீன காலத்திற்கு ஏற்பவும் பயன்பட வேண்டும். கவிதை என்பது அதன் கட்டுக்குள் அடங்காத அரிய பெரிய சந்தர்ப்பங்களைப் பொறுத்துப் பயன்பட்டு வரும் 'சமுதாயத்தின் ஆளுமை' (Social personality) என்பதை நாம் பண்பாடு என்கிறோம். இதன் ஒவ்வொரு திறமும் அந்தச் சமுதாய ஆளுமையை நம்பி இருப்பதுபோல் கவிதை என்பது பல சந்தர்ப்பங்களைப் பொறுத்துள்ளது.

மேலே சொன்ன சிந்தனைகளை மீண்டும் சிந்தித்துக் கிடைக்கும் பொதுவான சில முடிவுகளுக்குச் சொல்கிறேன். தேசிய மற்றும் பிராந்திய கவிதையின் செயல்பாடு மீதான

என்னுடைய கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். ஏனெனில் ஐரோப்பிய மக்கள் சமுதாயத்தின் கவிதைச் செயல்பாடு மக்களுக்கு மக்கள் பிரித்துக் கொள்ளப்படுகிறது எனப் பொருள்பட்டு விடக்கூடாது என்று விரும்புகிறேன். ஏனெனில் ஐரோப்பிய மக்கள் சமுதாயத்தின் பண்பாடுகள் தனித்தனியே பிரிந்து வளரும் என்பதை நான் நம்பவில்லை. நாகரீகம் உயர்ந்து விளங்கிய காலங்களில் எல்லாக் கலையும் இலக்கியமும் தனிமைப்படுத்தப்பட்டே வளர்ந்து வந்துள்ளன. என்னால் அதைப் பற்றி திடமாகப் பேச முடியாது. முதலில் அந்த நாகரீகங்கள் தனித்து வளருமெனத் தோன்றினாலும் உண்மை அப்படி இருக்காது என்று நம்புகிறேன். ஐரோப்பாவில் நாகரீகம் தனித்து வளர்ந்ததாக வரலாறு இல்லை. பழங் கிரேக்கம் எகிப்திற்குக் கடன்பட்டுள்ளது. ஆசியப் பகுதிகளிலும் கடன்பட்டிருந்தது. வேறுபட்ட கிளை மொழிகளுடன் வேறுபட்ட பழக்க வழக்கங்கள் கொண்ட கிரேக்கக் குடியரசுகள் ஒன்றுடன் ஒன்று செல்வாக்கு செலுத்தி இருப்பதைப் பார்க்கலாம்.

தொடர்ந்து கொடுப்பதும் கொள்வதுமாக இல்லாமல் தனித்து இயங்கியதாகத் தோன்றவில்லை. ஐரோப்பிய இலக்கியம் என்பது தனித்திருக்கவில்லை. கொடுப்பதும் பெறுவதுமாக வந்துள்ளது. அயல் செல்வாக்கை ஏற்றுக்கொண்டு புதிய ஊக்கம் பெற்று வளர்ந்துள்ளது என்றே தெரிகிறது. சுருக்கமாகச் சொன்னால் பண்பாட்டில் காணப்படும் பொதுவான தன்னிறைவு என்பது இயலாத ஒன்று. எந்த நாட்டினுடைய பண்பாட்டு வளர்ச்சியும் தொடர்பு கொள்வதிலேயே அமைகிறது. ஐரோப்பிய ஒருமைப்பாட்டுக்கு இடையே பண்பாட்டுப் பரிவினை என்பது ஆபத்தான ஒன்றாகும். ஒற்றுமைப்படுத்தும் முயற்சி என்ற பேரால் ஒற்றுமையாக இல்லாமல் (Unification) ஒரேமாதிரியான தன்மையாக (Uniformity) முடிந்தாலும் அது ஆபத்தே. குறிப்பாக எஸ்பெராண்டோ (Esperants) அல்லது அடிப்படை ஆங்கிலம் (Basic English) போன்றதோர் உலகப் பொது மொழி தேவைப்படுவதைச் சொல்ல வேண்டியுள்ளது. ஆனால், நாடுகளிடையேயான தொடர்புக்கு மேற்சொன்ன செயற்கையான மொழியை மேற்கொண்டால் எவ்வளவு பொருத்தமற்றதாக இருக்கும். இது சிலவற்றுக்குப் பொருத்தமாக இருக்கலாம்.

ஆனால், வேறு சிலவற்றில் பயனற்றுப் போகலாம்.

ஒரு மொழியில் கவிதையைத் தவிர வேறெதுவும் தொடர்ந்து எஞ்சுவதில்லை. கவிதையானது ஒரு மொழியில் சொல்லப்பட்டுச் சிறப்படைகிறது. அதை மொழிபெயர்ப்பது என்பது இயலாதது. ஒரு மக்கள் கூட்டத்திற்கும் இன்னொரு மக்கள் கூட்டத்திற்கும் ஆத்மார்த்த தொடர்பு நிலவுவதற்கு ஒரு மொழியைப் பேசுகின்றவர்கள் வேறொரு மொழி பயின்று அம்மொழியை உணரக் கூடியவர்களாக முயல வேண்டும். இன்னொரு மொழியிலும் பயின்று அம்மொழியை உணரும் திறன் கொண்டிருக்க வேண்டும். அவர்களால்தான் அம்மக்களோடு தொடர்பு கொள்ள முடியும்.

பிறமொழி பேசும் மக்களது கவி

தைகளைக் கற்பது என்பது குறிப்பிடத் தகுந்த அறிவுறுத்தும் அனுபவம் ஆகும். கவிதையின் சிறப்பியல்புகளை அந்தந்த மொழி பேசும் மக்களால்மட்டுமே நன்றாகப் புரிந்துகொள்ள முடியும். ஆயினும் இந்தக் கருத்துக்கு மறுபக்கம் ஒன்றும் உண்டு. எனக்கு மிகவும் பரிச்சயமற்ற மொழி ஒன்றில் வாசிக்க முயன்றேன். ஆனால் அம் மொழியின் ஒரு பந்தியைக்கூட என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒவ்வொரு பதத்தின் பொருளை உறுதி செய்தவுடன் அம் மொழியின் இலக்கணத்தை, தொடரமைப்பை (syntax) தேர்ந்த பள்ளிக்கூட ஆசிரியர்கள் புரிந்து கொள்வதுபோல் புரிந்து கொண்டேன். அதை உள் வாங்கிக் கொண்டதுடன் அந்தப் பந்தியின் பொருளை ஆங்கிலத்தில் சிந்தித்துக் கொண்டேன். ஆனால் சில சமயங்களில் சிறிதும் பரிச்சயமற்ற பதங்களுடன் கவிதையின் ஒரு பகுதியை என்னால் மொழிபெயர்க்க இயலாமல் போகும். அதன் வாக்கியங்களின் பொருளை என்னால் விளக்க முடியவில்லை. ஆயினும் அதனை உடனடியாகப் புரிந்து கொள்ள முடிந்தது. இதைச் சொல்லும்போது எனக்கு ஏற்பட்ட இக் கருத்து ஒரு மாயை அல்ல என்பதைக் கண்டேன். மேலும் நான் அக் கவிதையில் என்ன இருந்ததென நினைத்தேனோ அக் கருத்து கற்பனை அல்ல: உண்மையே. ஆக இன்னொரு மக்களின் கவிதையை உங்களால் புரிந்து கொள்ள முடியும்: அதற்காக வெளிநாடு போகவேண்டிய அவசியமில்லை.

ஐரோப்பாவிலும் வெவ்வேறு மொழிகள் பேசும் மக்கள் இனத்திலும் தொடர்புடைய ஒரே பண்பாட்டில் இருந்து தோன்றும் கவிதையின் சமுதாய செயல்பாட்டைப் பற்றி நம்மால் கேள்வி கேட்க நேரிடலாம். இவ்வாறு கவிதையின் சமுதாயச் செயல்பாட்டைப் பற்றிக் குறிப்பிடும்போது அரசியல் விவகாரங்களில் நுழைவது என் நோக்கமல்ல. ஆனால் அரசியல் விவகாரங்களைப் பற்றிக் கருத்துக் கொண்டவர்கள் நான் குறிப்பிட்ட இவ் விஷயத்தில் சமுதாயப் பண்பாடு பற்றி அடிக்கடி கேட்கப்படுவதைப் பரிசீலிக்கிறேன். அரசியல் அக்கறை கவிதையின் ஆன்மீகத் தன்மையை விட்டு பிரச்சினைகளின் பொருண்மையானக் கூறுகளுக்கு இட்டுச் செல்கிறது. என்னைப் பொறுத்தவரையில் உயிர் வாழ்வன தங்களது வளர்ச்சிக்கு இயற்கையின் நியதிகளைப் பெற்றுள்ளவையே. எப்போதும் அந்த இயற்கை விதிகள் அறிவுநிலையில் ஏற்கப்படுபவையாக இருப்பதில்லை: ஆயினும் அவற்றை ஏற்கவேண்டி இருக்கும். இந்த உயிர் வஸ்துகளுக்கான நியதிகள் காற்று, மழை, பருவங்களுக்கென இருக்கும் நியதியைப் போன்றதல்ல.

இறுதியாக, கவிஞனது மொழியைக் கொண்ட அனைத்து மக்களுக்கான கவிதையானது சமுதாய செயல்பாட்டைக் கொண்டுள்ளதை நம்புகிறேன். கவிஞன் இருக்கிறானா இல்லையா என்பது பற்றிய விழிப்புணர்வு அம் மக்களுக்கு இல்லாதிருக்கலாம். ஒவ்வொரு ஐரோப்பிய சமுதாயத்தின் ஒவ்வொரு மக்களும் தமக்கெனக் கவிதை பெற்றிருக்கத்தான் வேண்டும். என்னால்

நோர்வே மக்களது கவிதையை வாசிக்க முடியாமல் போகலாம். ஆனால் நோர்வே மொழியில் கவிதைகள் எதுவும் இனி எழுதப் படாது என்று என் காதில் விழும் போது அது எனக்கு அதிர்ச்சியளிக்கும். இந்த அதிர்ச்சி நோர்வே மொழியில் கவிதைகள் இல்லையெனப் பச்சாதாபம் கொள்வதை விடவும் அதிகமாக இருக்கும். கண்டம் முழுதும் பரவும் இதையொரு நசிவுக் குறியாக அவசியம் சொல்வேன். நாகரீக உணர்வுகளை எல்லாம் உணரவும் இல்லாமல், வெளிப்படுத்தவும் இயலாமல் போனால் அதை ஒரு பெரிய சரிவின் தொடக்கமாகக் கொள்ளலாம். இத்தகைய செயல் நிகழும் சரிந்துவரும் சமய நம்பிக்கையைப் பற்றி எங்கும் அதிகமாகப் பேசப்படுகிறது. சரிந்து வரும் சமய உணர்வுமீது அதிக கவனம் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. நவீன காலத்தின் பிரச்சினை என்பது நம் முன்னோர்கள் நம்பிய இறை மற்றும் மனித நம்பிக்கை அல்ல. வெறுமனே இறை நம்பிக்கை இருந்து கொண்டுதான் உள்ளது. ஆனால், இறைவனைப் பற்றிய நம் முன்னோர்களிடம் இருந்த உணர்வுநிலை நமக்கில்லை. ஒரு சமய நம்பிக்கை அற்றுப்போனது என்பதைக்கூடப் புரிந்து கொள்ளலாம். ஆனால் சமயக் கருத்தைப் போராடி வெளியிடும்போது அவ்வெளியீட்டில் உணர்வு இல்லையென்றால் இது பொருளற்றுப் போய் விடும். சமய உணர்வுகள் நாட்டுக்கு நாடு காலத்திற்குக் காலம் கவிதை உணர்வுகள் போன்று மாறிக் கொண்டே இருக்கும் இயல்புடையது.

என்னைப் பொறுத்த வரையில் இவ்வுணர்வு அற்றுப் போவதே மரணமாகும். கவிதைக்கான ஆர்வமாகிய உணர்வு, கவிதையில் இடம் பெறத்தக்க உணர்வு, கவிதைப் பொருள்கள் ஆகியவை எங்கணும் இருந்து மறைந்து போகலாம். அப்படி மறைந்து போவதென்பது மக்கள் கூட்டத்தை ஒற்றுமைப்படுத்த உகந்த நிலை என்று சொல்பவர்களும் இருக்கின்றனர்.

அடிக்குறிப்பு:

1. பின்டார் (Pindar) (கி.மு. 522 – 442)
   கிரேக்கத் தன்னுணர்வுக் கவிதைப் படைப்பாளி
2. வர்ஜில் (Virgil) (கி.மு. 70 – 19)
   ரோமானியக் கவிஞர்
3. டிரைடன் (Dryden) (கி.பி. 1631 – 1700)
   கவிதை மற்றும் நாடகப் படைப்பாளி
4. ஷெல்லி (Shelley) (கி.பி. 1792 – 1822)
   மிகவும் சிலாகித்துப் பேசப்படும் ஆங்கிலக் கவிஞருள் ஒருவர்
5. லுக்ரிஷியஸ் (Lucriectius)
   ரோமானியக் கவிஞர். கி.மு. முதல் நூற்றாண்டிடையே வாழ்ந்தவர்.

**குறிப்பு: இக் கட்டுரை 1945ல் வெளியானது.**

# ஆடைகள் வாங்குவதற்காக...!

–பிரபாமணாளன்

சற்றுத் தள்ளிப் படுத்தான் அவன். பக்கத்தில் படுத்திருந்த அவள்மீது பார்வையைப் படர விட்டான். சிறிது முன்னால் உணர்ச்சிக் கொந்தளிப்பில் நடந்து முடிந்த– சதைத்தேவைப் பூர்த்தி அவள் முகத்தில் வியர்வை முத்துக் களைப் பரப்பியிருந்தது. வழக்கம் போலவே இழை பிரிந்த மயிர்க் கொத்தொன்று அவள் நெற்றியில் சுருண்டிருந்தது. வார்த்தைகளுள் அகப்படாத ஒரு வசீகரம் அவளது முகத்தில் எப்போதும் காணப்படுகிறது என்ற தனது கருத்தை இப்போதும் அவன் ஊர்ஜிதம் செய்து கொண்டான். இந்த வசீகரம்தான் தன்னை அவளிடம் இழுத்து வருகிறது என்ற நண்பர்களின் கூற்று உண்மைதானோ எனப் பேதலித்துக் கொண்ட மனதைச் சமாதானப் படுத்தவாவது இன்று தனது கேள்விகளை இவளிடம் இறக்கி வைத்துவிடுவதென முடிவு கட்டினான். இப்படி எத்தனை தரம் முடிவு செய்திருக்கிறேன் என நினைத்துக் கொண்டபோது சிரிப்பு வந்தது.

"சரிதான், சிரிக்கவும் முகட்டை வெறிக்கவும் தொடங்கியாச்சா?" என்ற அவளது கேள்விக்கு ஏதும் பதிலளிக்காமல் சிகரட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டான்.

நுரையீரல்களுக்குள் நிரம்பிய புகையின் சுவையை கண்களை மூடி இரசித்தவன், அந்தச் சுகானுபவத்தை இழக்க விரும்பாமல் மெதுவாக அதை வெளியேற்றினான். அவனையும் அவனது இந்த மோனத் தவத்தையும் பார்த்து திடீரென ஏதோ நினைவுக்கு வந்தவளாக அவள் சிரித்துக் கொண்டபோது, அவன் கண்களைத் திறந்தான். கலைந்திருந்த அவள் ஆடையையும் முக வசீகரத்தையும் மீறி அவளது சிரிப்பு அவனைத் தாக்கவே கண்களை இடுக்கி, "ஏன் சிரிக்கிறாய்?" எனக் கேட்டான்.

"இன்னும் கூடுதலாக உங்களை முகட்டை வெறிக்கச் செய்யலாமா என யோசிக்கிறேன்" என்றபடி அவள் ஆடையைச் சரிசெய்து கொண்

டாள்.

"எப்படி? எப்படி?" என்ற அவனது கேள்வியில் இவள் ஏதோ புதிதாகச் சொல்லப் போகிறாள் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

'இவளைப்பற்றிய எனது எதிர்பார்ப்புகள் என்றும் பொய்யாவதில்லை' என அவன் நினைத்துக் கொண்டபோது அவள் சொன்னாள்.

"இதோ இப்போது கண்களை மூடி ஏதோ மகத்தான தியானமாக இந்த சிகரட்டை ரசித்தீர்களே, இந்தச் சுகமும் சற்றுமுன் நீங்கள் என்னால் பெற்ற சுகமும்.... இவைகள் இல்லாவிட்டால் நீங்கள் எப்படி இருப்பீர்கள் என எப்போதாவது நினைத்திருக்கிறீர்களா?"

கேட்டுக் கொண்டே அவள் எழுந்து வெளியே போனாள்.

அவனால் அவளது கேள்வியின் தோரணையை ஜீரணிக்க முடியவில்லை. இவள் எப்போதுமே இப்படித்தான். நேராகவும் முகத்திலடித்தாற் போலவும் ஏதாவது சொல்லிவிடுவாள். அந்தப் பிரச்சினையிலேயே ஆழ்ந்து அதையே பேசி அவளது வாதங்களைக் கேட்டுக் கொண்டு போக வேண்டியதுதான். அவனது கேள்விகளைக் கேட்கவே நேரம் கிடைப்பதில்லை. இன்றும் அப்படி ஆகிவிடக் கூடாது என்பதில் அவன் தீர்மானமாக இருந்ததால், அவளுக்குப் பதிலையும் அடுத்த தனது கேள்வியையும் அவன் தனக்குள் ஆயத்தப்படுத்திக் கொண்டாள்.

"முகடு என்ன சொல்லுகிறது?" எனக் கேட்டுக் கொண்டு அறைக்குள் வந்தவள் கட்டிலில் கால்களை மடக்கிக் கொண்டு, அவனையே நேராகப் பார்த்துக் கொண்டிருந்த அவனைக் கண்டதும் விழிகள் வியப்பால் விரிய, "ம்ம்" என்று முணகினாள்.

இவன் இன்று வழமைபோல் இல்லை என்பதைப் புரிந்து கொண்டதால், எப்படி இது சாத்தியமாயிற்று என்ற கேள்வியோடு கட்டிலுக்கு எதிரே கால்களைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்தவள், 'சொல்லுங்கள்' என்பதுபோல் அவனை நிமிர்ந்து நோக்கினாள்.

"இவ்வளவு நாளாக என்னை நீ புரிந்துகொண்டது இப்படித்தானா? இவற்றை விடவும் எனது உலகம் பரந்தது. இன்னும் எத்தனையோ சிந்தனைகளில், லயிப்புக்களில் என் வித்தியாசமான கருத்துக்களில் நான் திளைத்திருக்கிறேன். சொல்லப் போனால் அவைதான் என் உலகம், அதுதான் என் வாழ்க்கை. அந்த இறுக்கத்திற்கு நான் தேடும் ஓய்வு.... நோ, ரிலாக்ஸ்தான் நீ".

சற்று மூச்சுவாங்கி சிகரட்டை ஒரு இழுப்பு இழுத்தவன் தொடர்ந்தான்.

"இவ்வளவும் சொல்லுகின்ற நீ உன்னைப் பொறுத்தவரை எப்படியிருக்கிறாய்?"

"கசங்கிய உன் படுக்கை விரிப்பை அடுத்தவனுக்காக சரிசெய்து ஒழுங்காக்கும் இந்த வேலை உனக்கு போரடிக்கவில்லையா?"

"என்றாவது இது வேண்டாம், ஒழுங்காக வாழுவோமென நீ சிந்தித்ததுண்டா?"

"இந்த வாழ்க்கையை விட்டுவிட உன்னால் முடியுமா?"

அவள் மெதுவாகத் தலையைக் குலுக்கிக் கொண்டாள். அவள்

நினைத்த புதியமாற்றம் இவனில் இன்னும் இல்லை. ஆனால் எல்லோ ரும் சொல்லுகின்ற ஒன்றை இன்று தான் இவன் சொல்லியிருக்கிறான். அவனைப் பொறுத்தவரை இன்று வழமையில்லைத்தான். அவளுக்கோ இது கேட்டுக் கேட்டு புளித்துப் போன ஒன்று. இருந்தாலும், சொல்ப வன் இவனாகையால் இதற்குப் பதில் சொல்லியாக வேண்டும். அதுவும் தத் தொழிலை விட்டுவிடுகிறேன், நீ என்னை ஏற்றுக் கொள்வாயா?' என் று கேட்டால், வீம்புக்காவது தன் னைப்பற்றிய ஒரு இமேஜுக்காவது இவன் ஒத்துக்கொள்ளக் கூடும். இவ னுடைய வட்டத்தில் என்னைப் போன்ற ஒருத்தியை மணமுடிப்பது உலக மகா புரட்சியாகக் கருதப்படக் கூடும். ஆனால் அதனோடு எல்லாம் முடிந்து விடுகிறது என இவன்



இவனுக்குப் புரிகிற மாதிரி. எல்லோ ருக்கும் சொல்வதுபோல், 'நான் இந் நினைத்துவிடக் கூடாது. தனது இலட்சியக் கற்பனைகளில் இருந்து

இவன் யதார்த்தத்துக்கு வரவேண்டும்.

ஒரு நீண்ட விவாதத்திற்குத் தன்னைத் தயார் செய்து கொண்டவளாக அவள் மெதுவான குரலில் ஆரம்பித்தாள்.

"நீங்கள் ஜெயகாந்தன் எழுதிய 'இலக்கணம் மீறிய கவிதை' வாசித்திருக்கிறீர்களா?"

கேள்வியோடு நிறுத்தி அவனைப் பார்த்தவள், அவன் வாசிக்கவில்லை எனத் தெரிந்து கொண்டு தொடர்ந்தாள்.

"அதில் ஓரிடத்தில் அவர் சொல்லுகிறார், அவளது தலையில் உள்ள மல்லிகை கசங்கா விட்டால் அன்று முழுவதும் பட்டினி என்று. அர்த்தம் புரிகிறதா உங்களுக்கு? நீங்கள் சொன்னீர்களே இந்தப் படுக்கை விரிப்பை– ஒருவனுக்காவது தட்டிப் போடாவிட்டால் நான் என் வயிற்றைக் காயப்போட வேண்டியதுதான். இந்தத் தொழிலை நான் விட்டுவிட முடியாதிருப்பதும், இந்தத் தொழிலுக்கு நான் வந்ததும் ஒரே காரணத்துக்காகத்தான். வாழுவதற்கு. இதற்கு நான் வெட்கப்பட்டதே இல்லை. ஏனென்றால் இதற்கு வெட்கப்பட வேண்டியது இந்தச் சமூகம். அதுவே வெட்கப்படாமல் என்னிடம் வருகிறது என்கிறபோதுதான் மாற வேண்டியவள் நானல்ல, இந்த சமூக அமைப்புத்தான் என்பது எனக்குத் தெரிகிறது. அதை ஏற்படுத்தாமல் நீங்கள் சொன்னபடி ஒழுங்காக வாழுவோம் என்று நான் முடிவு கட்டிய பிறகு என்ன புதிதாகச் செய்யப் போகிறேன்?"

சிகரட்டை வாயிலிருந்து எடுத்தபடியே அவன் பேசினான்.

"நீளமாகத்தான் பேசுகிறாய். இந்தப் பேச்சினால் உன்னை நியாயப்படுத்திக் கொள்ளப் பார்க்கிறாய். இந்தச் சமூகத்தின் மீது பழியைப் போடுவதைவிட ஏன் நீ திருந்தக் கூடாது? திருந்திவிட்ட உன்னைப் போன்றவர்களை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் எத்தனையோ பேருக்கு இருக்கிறது என்பது உனக்குத் தெரியுமா?"

மேற்கொண்டும் அவனைப் பேச விடாது, 'போதும் நிறுத்துங்கள்' என்பதுபோல் அவள் கைகாட்டினாள்.

"திருந்தி விடுவது, திருந்தி வாழுவது என்று நீங்கள் சொல்லுவது என்ன? ஒவ்வொருவனுக்கும் படுக்கை விரிப்பை தட்டிப் போடாமல் ஒருவனுக்கு மட்டும் தட்டிப் போட்டுக்கொண்டு இவனோடு மட்டும்தான் நான் விபச்சாரம்.... ஓ ஸோரி, அப்போது அதற்குப் பெயர் என்ன?– சரி.... படுத்து எழும்புகிறேன் என்று சமூகத்துக்கு ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு அதற்குச் சாட்சியாக குழந்தைகளைச் சுமந்து ஒரு விசுவாசமிக்க வேலைக்காரியாக நான் இருக்க வேண்டும். ஸோ... திரும்பவும் ஒரு அடிமையாக– அங்கீகரிக்கப்பட்ட அடிமையாக. சொல்லுங்கள், இந்த சமூகத்தில் அடிமையாக இருப்பதற்குக்கூட ஒரு அங்கீகாரம் தேவையா?"

கோபத்தோடு முகம் சிவந்து ஒரு விரலை நீட்டிக் காட்டியபடி எழுந்து நிற்கின்ற அவளை அவன் நிமிர்ந்து பார்த்தான்.

"நீயேன் இப்படி உணர்ச்சிவசப் படுகிறாய் என்று எனக்குப் புரியவில்லை. ஒரு நல்ல மனைவியாக

வாழுவதை இப்படிக் கொச்சைப் படுத்துவது கொஞ்சம்கூடச் சரியில்லை. இத்தனைக்கும் பிறகு உன்னை ஒருவன் ஏற்றுக் கொள்வதே பெரிய விசயம். அதற்குப் பிறகும் நீ இவை எல்லாம் மாற்றமில்லை என்று சொல்லுகிறாயென்றால்...."

நிறுத்தியவன் சற்றுத் தயங்கிக் கேட்டான்.

"இந்த வாழ்க்கையை அந்தளவு நீ ரசிக்கிறாய் என நான் கருதிக் கொள்ளலாமா?"

அவன் எதிர்பார்த்ததற்கு மாறாக அவள் வாய்விட்டுச் சிரித்தாள்.

"இப்போது நீங்கள் சொல்லுகிறீர்களே இதுதான் கொச்சைத்தனம். நான் சொன்ன உண்மைகளை ஏற்றுக் கொள்ள முடியாத உங்கள் ஈகோவின் கொச்சைத்தனம். நல்ல மனைவி என்பதற்கு இந்த சமூகத்தின் வரைவிலக்கணம் என்ன? உங்களுடைய மனைவி ஒரு நல்ல மனைவிதானே?"

அவனுடைய நெற்றிச் சுருக்கத்தையும் முக மாற்றத்தையும் அவதானித்தவள் தொடர்ந்தாள்.

"மன்னியுங்கள். எனக்கு வேறு வழி தெரியவில்லை. இப்போது அவள் நிலை என்ன? நீங்கள் அவளை எப்படி வைத்திருக்கிறீர்கள்?"

கோபத்தோடு அவன் குறுக்கிட்டான்.

"அவளுக்கு எந்தக் குறையும் இல்லாமல் வைத்திருக்கிறேன். சொல்லப்போனால் நான் உன்னிடம் வருவதுகூடத் தெரியும். அப்படி ஒரு 'அண்டர்ஸ்டாண்டிங்' உள்ளவள் அவள்".

"சரி. ஆனால் இதை 'அண்டர்ஸ்டாண்டிங்' என்று எப்படிச் சொல்லுகிறீர்கள்? உங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை அவளுக்குக் கொடுத்திருக்கிறீர்களா? நோ... குறுக்கிடாதீர்கள். அவள் எதுவும் பேசாதிருக்கிறாள் என்பதாலேயே இதை ஏற்றுக் கொள்ளுகின்றாள் என்று அர்த்தமில்லை. நீங்கள் திரும்பிப் போகும்போது உங்களுக்குச் சமைத்து வைத்து அவள் காத்துக் கொண்டிருப்பாள். நாளையும் நாளை மறுநாளும் இப்படியே தொடர்ந்து. உங்கள் ரிலாக்ஸ் சரி. ஆனால் அவளுக்கு? அவள் உணர்வுகளுக்கு என்ன மதிப்பு? என்றைக்கேனும் இப்படி உங்கள் மனைவி பேசினால் அதற்குப் பிறகும் அவளை நல்ல மனைவி என்று சொல்ல நீங்கள் தயாரா?"

அவன் குழம்பிப் போனான்.

'இன்றைக்கு இவள் சொல்லுபவைகள் எவ்வளவு சரியாக இருக்கின்றன. இப்படி ஒருநாளும் எனது மனைவி பேசவில்லை என்பது உண்மைதான். அப்படியானால் இவள் சொல்வதுபோல் அதனால்தான் அவளை நான் ஏற்றுக் கொள்ளுகிறேனா?'

தனது மனைவியை மனக்கண் முன் கொண்டு வந்து இவளைப் போல் எதிர்நிறுத்திக் கற்பனைசெய்து பார்த்து அந்த உண்மையின் வேகம் தாங்காமல் அவன் தலையை உலுக்கிக் கொண்டான்.

அவனது சிந்தனையையும் அதன் போக்கையும் புரிந்து கொண்டவள் போல் அவள் சற்றுப் புன்னகைத்தாள்.

"இப்போது நீங்கள் நினைக்கிறீர்களே, இதுதான் உண்மை. என்னைப்போல் ஒருத்திக்கு வாழ்வு கொடுப்பதற்கு முதல் உங்கள் மனை

விக்கு வாழ்வு கொடுத்திருக்கிறீர்களா எனச் சிந்தியுங்கள். அந்த ஒன்றையாவது முதலில் புரிந்து கொள்ளுங்கள்".

அவனால் இன்னும் ஒரு முடிவுக்கு வரமுடியாமல் இருந்தாலும் ஏதோ ஒன்று புதிதாக தன்னுள் விளைந்திருப்பதுபோல் தெரிந்தது. இன்றைக்கு இது போதும், இப்போதே வீட்டுக்குப் போய்விட வேண்டும் என்று நினைத்துக் கொண்டவனாக அவன் எழுந்தான்.

"இருங்கள் இதோ வந்துவிட்டேன்" என அவள் வெளியேபோய் ஒரு புத்தகத்துடன் திரும்பி வந்தாள்.

தனக்கு முன் அவள் பிரித்துக் காட்டிய வரிகளை அவன் வாசித்தான்.

"நாங்கள் நிர்வாணத்தை விற்பனை செய்கின்றோம், ஆடைகள் வாங்குவதற்காக".

நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

"கேட்டீர்களே இந்த வாழ்க்கையை ரசிக்கிறேனா என்று. இதுதான். இது ரசிப்பு இல்லை. யதார்த்தம். ஆனால் இந்த வாழ்க்கையை நீங்கள் சொல்வதுபோல் யாரோ ஒருவன் ஏற்றுக் கொள்வதால் முடிந்துவிடப் போவதில்லை. என்னைப் போன்ற எல்லோருக்கும் ஆடைகள் மட்டுமல்ல, அமைப்பிலும் மாற்றம் வேண்டும். அதுவரைக்கும் நான்..... இல்லை நாங்கள் இதைச் சொல்லிக் கொண்டுதான் இருப்போம்".

அவள் சொல்லி முடித்துவிட்டு கட்டிலில் அமர, அவன் குனிந்து தனது செருப்பை தேடி அணிந்து கொண்டான்.

---

- உண்மையே உள்ளத் தூய்மையை உண்டாக்கும். உள்ளத் தூய்மையே ஒழுக்கத்தின் உயிர் நாடி.

  – மகாவீரர்

❖❖❖

- வளமுடன் வாழும்போது நண்பர்கள் உன்னை அறிவர். வறுமையில் நீ நண்பர்களை அறிவாய்.

  உண்மையான பெரிய மனிதனுக்கு முதல் அடையாளம் பணிவாக இருத்தல்.

  – ரஸ்கின்

❖❖❖

- அழகே வாய்மை. வாய்மையே அழகு.

  – ஜான் கீட்ஸ்

❖❖❖

- அழகு, ஆண்டவனின் அருட் கொடை.

  – அரிஸ்டாடில்

❖❖❖

- என்றாவது நான் ஆசிரியரானால், அது கல்வி போதிப்பதைக் காட்டிலும், கல்வி கற்பதாகவே இருக்கும்.


  – டாரத்தி தெலூஸி

❖❖❖

- செய்வதற்கு எப்போதும் வேலை வேண்டும். அப்போதுதான் முன்னேற முடியும்.

  – மில்டன்

❖❖❖



# மார்க்ஸீயமும் இலக்கிய விமர்சனச் சமகாலச் செல்நெறியும்

## பேராசிரியர் கா.சிவத்தம்பி

25 வருட காலச் சாதனைகள் பல நிறைந்த வரலாற்றைப் பின்நோக்கி முன்செல்ல முனைந்து நிற்கும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துக்கு, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தோழமை நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

துரித மாற்றங்கள் ஏற்படும் இந்த யுகத்தில் ஒரு கால் நூற்றாண்டு என்பது ஒரு சிறிய காலத்தொகுதி அல்ல. 1974ல் பேசப்படாத பல தொழில்நுட்ப வளர்ச்சிகள் இன்று மனிதத் தொடர்புக்கு இன்றியமையா தனவாக உள்ளன. ஈ மெயில், ஃபாக்ஸ், இன்டர் நெட் எனப் பல

உதாரணங்களை எடுத்துக் கூறலாம்.

இந்தியாவின் வரலாற்றிலும் தமிழ்நாட்டின் வரலாற்றிலும், 1974ல் நிலவிய நிலை இன்று இல்லை. 1974– 1998க் காலத்தில் இங்கு ஏற்பட்டுள்ள சமூக– பொருளாதார– அரசியல், கலை, இலக்கிய அனுபவங்கள் மிக முக்கியமானவை: மிக மிக மாறுபட்டவையும் கூட.

கி.பி. 2000க்கு நம்மை எடுத்துச் செல்லவிருக்கும் எமது வாழ்க்கை, 1974ல் நிலவியதில் இருந்து வேறுபட்டது. அடிப்படைகள், எடுகோள்கள், சவால்கள் எல்லாமே மாறியுள்ளன.

1974– 1999 தரும் படிப்பினைகளை உள்வாங்கி, அவற்றினூடாக வரும் படிப்பினைகளைத் துணையாகக் கொண்டுதான் நாம் அடுத்த கால் நூற்றாண்டுக்கு..., புதிய நூற்றாண்டுக்குச் செல்லல் வேண்டும்.

1978ல் இதே நகரில் (கோயம்புத்தூரில்) தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் வருடாந்தர மாநாட்டில் 'தமிழ் இலக்கியத்தில் முற்போக்கு வாதம்' என்பது பற்றி உரையாற்றினேன். (அது ஒரு சிறு நூலாகவும் வெளிவந்தது. சென்னை புக்ஸ்– 1978). அவ்வுரையில் சமூக மேற்செலவுக்கு இலக்கியம் துணை புரியும் வழிவகைகள் பற்றிப் பேசினேன். விமர்சன யதார்த்த நோக்கு எமது இலக்கிய வழிதேடலுக்கான ஒளிவிளக்காக அமைய வேண்டும் என்று கூறினேன்.

21 வருடங்களின் பின்னர் மீண்டும் கோயம்புத்தூரிலே கூடுகின்றோம். அதாவது, சமூக வாழ்க்கைக்கும், வாழ்க்கைப் பிரச்சினை அறிகைக்கும், அதுபற்றிய அறிவுக்குமான ஒரு சாதனமாக இலக்கியம் அமைகிறது என்பதும் இன்றைய நமது இலக்கியப்போக்கு, இந்த இலக்குகளை அடைவதற்கு உதவுவனவாக அமைதல் வேண்டும் என்பதும் நமது அடிப்படையான நோக்கு என்ற அடிப்படையான உணர்வுடன் கூடுகின்றோம்.

ஆனால் எம்மைச் சுற்றியுள்ள புறவுலகு 1974ல் இருந்ததில் முற்றிலும் மாறுபட்டதாகவும் வேறுபட்டதாகவும் அமைந்துள்ளது என்பது தெரிகின்றது. இந்தப் புறவுலக மாற்றங்கள், நம்மையும் பாதிக்கின்றன: நம்மிலும் அவற்றின் தாக்கங்கள் காணப்படுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை.

புதிய சூழலுக்கு முகங்கொடுக்க, நமது கருத்துநிலையில் (Ideology யில்) சில புதிய முனைப்புக்களும் வலுவான பேண்நிலைத் துணிபுகளும் (determination for the preservation of the self identity) அவசியமாகின்றன.

இது ஒரு சவாலாக மாத்திரம் இருக்கலாமேயொழிய, அஞ்சுவதற்கான, பதற்றப்படுவதற்கான, மனநிலையை ஏற்படுத்துவதாக அமைதல் கூடாது. நாம் வழித்துணையாகவும் நமது பாதையாகவும் கொள்ளும் மார்க்ஸீயம், இத்தகைய சிக்கல் நிலைத் தீர்வையே அதன் அடித்தளத் தொழிற்பாடாகக் கொண்டது.

அதாவது மார்க்ஸீயம், பிரச்சினைகள் எல்லா வேளைகளிலும் ஒரே தன்மையானவையாக இருப்பதில்லை என்பதையும், இயங்கியல் நிலைப்பட்ட ஒரு அசைவியக்கமே (dialectical motion) உலக ஓட்டத்தின்

நியதி என்பதையும், வற்புறுத்துவது. சமூகம் என்பது பொருளியல் நடைமுறைகளினதும், சமூக நடைமுறைகளினதும் ஊடாட்டங்களின் தொகுதியாகும். சமூக நடைமுறைகளுள், கருத்துக்கள் (கலை சிந்தனை முதலியன), நிறுவனங்கள் (குடும்பம், அரசு, கல்விமுறை முதலியன) என்பனவும், பொருளியல் நடைமுறைகளுள் உற்பத்தி உறவுகளும் (யார் வேலை செய்கிறார்? யாருக்குச் சொந்தம்? எப்படிச் சொந்தம்? என்பன), உற்பத்திச் சக்திகளும் (யந்திரம், தொழில்நுட்பம், தொழில்) வரும். இவற்றில் மாற்றம் ஏற்படுவதும், மாற்றங்களால் தாக்கங்கள் ஏற்படுவதும் வாழ்க்கையின் நியமம் ஆகும். தருநிலை (thesis), எதிர்நிலை (antithesis) ஆகியனவற்றின் ஊடாட்டத்தில் ஒரு இணைநிலை (synthesis) தோன்றும். இந்த இணைநிலை பின்னர் ஒரு தனி நிலையாகும். தொழில்நுட்ப வேகங்கள் பங்கீட்டுப் பரம்பல் ஆகியன விரிவடைகின்றபொழுது இந்த (தருநிலை, எதிர்நிலை) ஊடாட்டங்களின் வேகம் அதிகரிக்கும். இதனால் சமூக மாற்ற வேகங்கள் அதிகரிக்கும். அதனால் இந்த ஊடாட்டங்கள் பற்றிய நமது புலப்பதிவு சரியானதாக இருத்தல் வேண்டும்.

இந்த மார்க்ஸீய அணுகுமுறை இன்றைய நிலைமையின் தன்மைகளையும், அந்த நிலைமையின் சுழற்சி வேகத்தையும் நமக்கு எடுத்துணர்த்த வேண்டும். அதற்கான துரிதமும் நெகிழ்வும் எம்மிடத்திருத்தல் வேண்டும். அதாவது இது ஒரு அணுகுமுறையே தவிர வாய்ப்பாடு அல்ல என்ற தெளிவு வேண்டும்.

இந்த அணுகுமுறை நமக்குப் பிரச்சினையின் தன்மை, மையம், வெளிப்பாட்டு முறைமை பற்றிய ஓர் அறிக்கையைத் தரும்.

மார்க்ஸீயத்தின் அரசியல் நோக்குகளையும் பொருளாதார இலட்சியங்களையும் ஏற்காதவர்கள் கூட (மார்க்ஸீயக் கருத்து நிலையை ஏற்காதவர்கள் கூட) இந்தப் பிரச்சினை விளக்க அணுகுமுறையைப் பயன்படுத்துகின்றனர். மார்க்ஸீய அணுகுமுறை ஒரு பிரச்சினையை அதன் சூழமைவுப் பின்புலத்தில்— உரிய இடத்தில்— இட்டு வைக்கிறது. (locates the problematic, sets the text in a context.)

இந்தப் புலமைத் தயார் நிலையுடன் இன்று நம்மை எதிர்நோக்கும் சூழமைவை (context) நோக்குவோம்.

முதலாளித்துவத்தினை எதிர்க்கும் போட்டி முறைமைகள் நிறுவன ரீதியாகத் தோல்வி அடைந்துள்ளன. (சோவியத் வீழ்ச்சி, கிழக்கு ஐரோப்பிய ஆட்சிகள் குலைவு, சீன மாற்றம்).

முதலாளித்துவத்தின் இயங்குமுறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முதலாளித்துவத்தின் பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்கு முதலாளித்துவமே வழிவகைகளைக் கண்டறிந்துள்ளது. (சேமநல அரசு— welfare state) ஏகாதிபத்தின் தன்மை மாறியுள்ளது.

ஆனால் அதே வேளையில் முதலாளித்துவம் தன்னை ஏற்புடைத்தான பொருளியற் கொள்கையாக நிலைநாட்ட உதவிய அதன் பண்புகள்— பொருளாதார வளர்ச்சி (Economic growth), நிறை தொழில்

வாய்ப்பு (full employment), நிதிஸ் திரம் (financial stability), உண்மை ஊதிய அதிகரிப்பு (Rising real wages)– படிப்படியாக மறைந்து கொண்டு போகின்றன. இந்த மாற் றங்கள் ஏற்படத்தக்க வகையில் முத லாளித்துவத்தில் மாற்றம் ஏற்பட்டு விட்டது. இரண்டாவது உலகத்தின் நீக்குகையுடன் மூன்றாவது உலகம் சின்னாபின்னப் பட்டுவிட்டது.

புதிய தொழில்நுட்பங்கள், புதிய கருத்துநிலைகள் இவற்றின் தொழிற் பாடுகள் உலகநிலையை மாற்றிய மைத்துள்ளன. (The Future of Capitalism- Lester Thurow London 1996)

இந்தப் புதிய சர்வதேச நிலைகள், தேசிய நிலைகளில், குறிப்பாகச் சம னற்ற வளர்ச்சியும் குறைவளர்ச்சியும் உள்ள நாடுகளில் அடிப்படை வாதங் களையும், இனக்குழுமக் கொடூரங் களையும் அதிகரிக்கச் செய்துள்ளன. புதிய சமூகச் சமவீனங்களின் தாக் கத்தில் இருந்து தப்பித்துக் கொள்வ தற்குப் பாரம்பரியத்தில் தனித்துவம் காணும் ஒரு முயற்சி நிகழ்கிறது. இது அடிப்படை வாதத்திற்குக் காலாகிறது.

மாறும் உலகப் பொருளாதாரத் தின் சந்தை நிலைத்தளம் உலக உருண்டையைக் கையளவு கிராம மாக்க, அந்த நோக்க நிறைவேற் றத்துக்கு தொடர்பு சாதனத் தொழில் நுட்பங்களையும் கலைவலுவையும் பயன்படுத்த, அசமத்துவங்களை மழுங்கடிக்கும் தனித்துவங்களை வற்புறுத்துவதிலே மனிதக் குழுக்கள் முனைப்புச் செலுத்துகின்றன.

உற்பத்தி உறவுகளும், உற்பத்திச் சக்திகளும் இப்படித் தொழிற்பட, சமூகக் கருத்துக்களும் நிறுவனங் களும், மாறுகின்றன. மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

இந்த ஒட்டுமொத்தமான ஊடாட் டத்தினூடே இலக்கியத்தில் புதிய குரல்கள், அசாதாரண சுருதிகளில், பழைய தாள அமைதிகளைப் புறக் கணிக்கின்ற லயங்களில் தமது பிறப் பையும் இருப்பையும் பதிவு செய்யத் துடிக்கின்றன.

1970களில் பிரித்தானிய மரபுக் கும், ஆங்கில மொழிக்கும் படிப் படியாக வந்து படிந்து கொண்ட இந்த மாற்றங்கள், 1960களில் இருந் து பிரான்சில் முனைப்புப் பெற்ற இவை, காலனித்துவ வரலாற்றுப் பின்னணியும் உடைய எம்மிடம் எண்பதுகளில் படிப்படியாக வந்து 90களில் நிலையான குரல்களாயின.

இந்த சமூக, பொருளாதார நடை முறைகளின் ஊடாட்டங்களின் குழந் தையாகவும், செவிலியாகவும் அமை கின்ற புதிய கருத்துக்கள் நமது சிந்தனைக்குள் வந்து சேர்கின்றன. நமது மொழி அவற்றைப் பற்றிப் பேசத் தயாராகின்றது.

இந்தக் கட்டத்தில் ஒரு விடயத் தை நாம் தெளிவுபடுத்திக் கொள்ளல் வேண்டும். 1960களில் இருந்து ஏற் படும் இவ்வுலக மாற்றங்கள் தமிழ ரிடையேயும் வருவது தவிர்க்க முடியாதது. தமிழரிடையே வருவ தற்கு, குறிப்பாகச் சனநாயகச் சூழ லில், தமிழில் வருவது தவிர்க்க முடியாதது ஆகிறது.

எனவே இந்தப் புதிய விடயங் களைப் பற்றி எழுதத் தொடங்கி யவர்கள் மீது குறை காணாது, வந்த, வர வேண்டிய, அந்தப் புதிய 'சிந்தனைகள்'– கலை, இலக்கியத்

தைப் பாதித்த அந்தக் கொள்கைகள் (theories) யாவை என்பதைப் பார்ப்போம்.

அமைப்பியல் வாதம், பிரதான பின் அமைப்பியல் வாதங்களான (poststructuralist) கட்டவிழ்ப்பு (deconstruction) ஃபூக்கோவின் அதிகார முறைமை நோக்கு என்பனவும், வாசக முனைப்பு வாதங்கள் (Reader Oriented theories), பெண்ணிலை வாதம் (Feminism), எனப்பல இலக்கிய வாதங்கள் பற்றி 1980களில் தமிழில் எழுத்துக்கள் வரத் தொடங்கின.

இவற்றோடு சேர்ந்து பின் நவீனத்துவ வாதம் (post modernism) என்பது பற்றியும் பேசப்பட்டது. இந்தியச் சூழலில், குறிப்பாகத் தமிழ்ச் சூழலில் இதுவே அழுத்தம் பெற்றதெனலாம்.

இவ்வாறு புதிதாக வந்தனவற்றைப் பற்றிய அறிமுகங்கள் செய்யப்படும் பொழுது, மேற்கூறப்பட்ட புதிய கொள்கைகளின் வரவு பற்றியும் அவற்றின் பண்புகள் பற்றியும், எடுத்துக் கூறப்பட்டபொழுது ஒரு முக்கியக் குறைபாடு இருந்தது.

இந்தச் சிந்தனை மரபுகளின் தோற்றம், வளர்ச்சி, பரவல் பற்றிய மெய்யியற் பின்புலத் தெளிவு, கருத்துநிலை உள்ளார்த்தங்கள் விளக்கப்படாது இவை தமிழில் வழங்கப்பட்டன.

அத்துடன் அமைப்பியல், பின்–அமைப்பியல் வாதங்களில் மேனாடுகளில் முக்கியத்துவம் பெற்ற சகல இலக்கியக் கொள்கைகளையும், அவையவைக்குரிய கொள்கை விளக்கப் பின்புலத்தில் தமிழ் வாசகர்களுக்கு, இலக்கியப் பிரியர்களுக்குத் தராமல் இவற்றிற் சில பற்றி மாத்திரமே அழுத்தம் பெறும் ஒரு சமூக இலக்கியச் சூழல் இங்கு நிலவியது. இந்தக் கையளிப்பில் ஒரு தெரிந்தெடுப்பு (selectivity) இருந்தது. இதனால் இவை பற்றிய மார்க்ஸீய நிலைப்பாடு பற்றிய ஒரு விளக்கமற்ற நிலையே ஏற்பட்டது.

உண்மை என்னவென்றால், 1960களில் இருந்து வரத் தொடங்கிய இலக்கியச் சிந்தனைகள் பற்றிய வாத– விவாதத்தின் பொழுது, அமைப்பியல் வாதம், கட்டவிழ்ப்பு வாதம், பெண்ணிலை வாதம் ஆகியன போன்று அவற்றுடன் சேர்ந்து மார்க்ஸீயமும் ஒரு முக்கியமான இலக்கியக் கொள்கையாக விவாதிக்கப்பட்டது. உண்மையில் புதிய இலக்கியக் கொள்கைகளின் உருவாக்கத்தின் பொழுது, மார்க்ஸீயத்தின் சிந்தனை வளத்தில் இருந்தும், தர்க்கத்தில் இருந்தும் பல அம்சங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. ஃபூக்கோ, றோலன்ட் பார்த் போன்ற பலர் தமது புலமையுலகுப் பிரவேசத்தின் பொழுது மார்க்ஸிஸ்டுகளாகவே இருந்தனர்.

இந்தத் தொடக்க உரையில் நான் முதலில் வற்புறுத்த விரும்புவது, மேனாட்டின் 1960க்குப் பிந்திய இலக்கியக் கொள்கை வளர்ச்சியில் மார்க்ஸீய நிலைப்பட்ட வாதங்கள் முக்கியம் பெற்றிருந்தன என்ற உண்மையையே.

துரதிர்ஷ்டவசமாக இந்த விடயம் தமிழில் நன்கு எடுத்துப் பேசப்படாத ஒரு விடயமாகவே போய்விட்டது.

இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. மார்க்ஸீய விமர்சன முறை

மை கடைப்பிடிக்கப்பட்ட மட்டங்களிற் பெரும்பாலும் சோவியத் ரஷ்ய, சீன விமர்சன மரபுகள் பேசப்பட்டு எடுத்தாளப்பட்டு வந்தனவே தவிர, சமகாலத்து ஐரோப்பிய மார்க்ஸீய வளர்ச்சிகள் பற்றி அதிகம் கவனம் செலுத்தப்படவில்லை.

இந்த சோவியத் சார்பு, சீனச் சார்பில் ஓர் அரசியலும் இருந்ததால், அந்தந்த வட்டங்களைவிட்டு வெளியே போவதென்பது அரசியற் பிரச்சினைகளை உருவாக்கக் கூடியவையாகவுமிருந்தன.

இவற்றுக்கு மேலாக இன்னுமொரு காரணமும் இருந்தது. நமது காலனித்துவப் பாரம்பரியம் காரணமாக நாம் ஆங்கிலம் வழியாகவே மேனாட்டு அறிவு வளர்ச்சிகளைப் பெற்றுக் கொண்டோம். பிரெஞ்சு மொழி, ஜப்பானிய மொழிப் பரிச்சயமோ அம்மொழிகள் வழிக் கையளிப்புகள் பற்றிய பரிச்சயமோ நமக்கு இருக்கவில்லை. 1970களின் நடுக் கூற்றிலிருந்தே இச்சிந்தனைகள் பற்றி ஆங்கிலத்திற் பரவலாக எழுதப்படத் தொடங்கிற்று.

இவை காரணமாக, 1960– 1970 காலகட்டத்தில் இலக்கியக் கொள்கைவாத விவாதத்தில் மார்க்ஸீயத்தின் இலக்கியத் தொழிற்பாடுகள்பற்றி விரிவாக எதுவும் பேசப்படவில்லை. (அல்தூசர் பற்றி வந்த நூலில் இவ்விலக்கிய விவாதங்கள் முனைப்புப் பெறவில்லை என்றே கருதுகின்றேன்.)

அவ்வாறு நமது மார்க்ஸீய விமர்சன மரபில் விரிவாக எடுத்துப் பேசப்படாத ஐரோப்பியப் பொதுவுடைமை மரபினர் சிலர் பற்றி இங்கு குறிப்பிடுவது பொருத்தமெனக் கருதுகிறேன்.

முதலில் குறிப்பிடப்பட வேண்டியவர் ஜோர்ஜி லூக்காஸ் (Georgy Lucasz: 1885 & 1977).

இவருடைய விமர்சன நோக்கில் யதார்த்தம் என்பது 'உள்ளதன் சித்தரிப்பு' என்பதற்கு அப்பாலே போய் அடித்தளமான இயங்கியல் உண்மைகளை, அதாவது சமூக சீவியத்திலுள்ள எல்லா முரண்பாடுகளையும் நெருக்கடி நிலைகளையும் சித்தரிக்க வேண்டும் என்பார். இவரின் பயன்பாட்டில் 'Reflect' என்பது 'பிரதிபலி' என்பதற்குப் பதிலாக, 'பட்டறிவுச் சிந்திப்பு' என்ற கருத்தில் நிற்கும். (லெனினும் இக் கருத்தைக் கொண்டிருந்தார்.) லூக்காஸ் நவீன எழுத்தாளர்களைக் கண்டித்தார்.

பெற்றோல்ட் பிறெஃற் (1898– 1956)றின் விமர்சன நோக்கு, குறிப்பாக நாடகத்துறையில் யதார்த்தத்தைச் சித்தரிப்பது பற்றி அவர் கொண்டிருந்த எண்ணத் துணிபு மிக முக்கியமானதாகும். இவர் இவ்விடயத்தில் சோவியத் கொள்கைக்கு எதிராகத் தொழிற்பட்டார். நாடகத்தில், நடிகரின் பணி, பாத்திரத்தைப் பிரதிபலிப்பது அன்று. இப்பாத்திரம் இப்படிச் செய்தது என்று செய்து காட்டுகையே (demonstrate) ஆகும். நடிகர் பாத்திரத்தினின்று சற்று விலகி நின்று பாத்திரத்தைச் சித்தரிக்க வேண்டுமென்று கூறுவார். பிறெஃற்றின் காவிய அரங்கு என்பது, மேற்கூறிய அடிப்படையில் மனிதனின் இன்னல்களைப் பரந்துபட்ட ஒரு பின்புலத்தில் மிகைப்படுத்திக் காட்டுவதாகும்.

ஹிட்லர் காலத்து ஜெர்மனியில் அவர் தனது கலைப் பயில்வை

மேற்கொண்டுவிட்டுப் பின்னர் வெளி நாடு சென்றார்.

1970களில் (அதாவது அமைப்பியல் வாதம் மேலோங்கி நின்ற அதே வேளையில்) மார்க்ஸீய இலக்கிய விமர்சன முறைமை செழித்து வளர்ந்தது பற்றி கிறிஸ் போல்டிக் (Chris Baldick) என்பவர் பின்வருமாறு கூறுவார்.

"1968ன் புரட்சிகரப் பரபரப்புகளுக்கும், தோல்விகளுக்கும் பின்னர் மார்க்ஸீயப் பண்பாட்டுக் கொள்கையில் மேற்கத்திய மார்க்ஸீயப் பாரம்பரியத்தின் மீள் கண்டுபிடிப்பினாலே போஷிக்கப்பெற்ற ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. அதாவது கிறாம்ஸ்சி, லூக்காஸ், பெஞ்சமின் ஆகியோரது எழுத்துக்களின் மூலமாகவும் (1970) அண்மைக் காலத்தே வெளிவந்த சார்த், அடோனோ, மார்க்குலே, அல்துாஸர் ஆகியோரின் எழுத்துக்கள் மூலமாகவும் இப்புது மலர்ச்சி ஏற்பட்டது. 1930களில் வாழ்ந்த அமெரிக்க, பிரிட்டிஷ் விமர்சகர்கள் கட்சிவிதிப்புகளின் அங்கீகாரத்துடன் சில வெகுளித்தனமான புதியன கூறலில் ஈடுபட்டிருந்த பொழுது 1970 களில் வந்த மார்க்ஸீய விமர்சனங்கள் முந்தியதிலும் பார்க்க வளமான பாரம்பரியம் கொண்டனவாக மார்க்ஸீயத்தின் வரையறைகளுக்கு அப்பாலே போய், அமைப்பியல் வாதம், பின்– அமைப்பியல் வாதம், உளப்பகுப்பாய்வியல் (psycho analysis) போன்றவை தரும் பார்வை வீச்சுக்களையும் தழுவுவனவாக அமைந்தன. முதலாளித்துவத்தின் புதிய நுகர்வு நிலை வடிவங்களும் மார்க்ஸீய விமர்சனச் சிந்தனைக்குக் காரணமாக இருந்தன. இந்தப் புதிய நுகர்வு நிலை வடிவங்கள் மார்க்ஸீயத்தின் பழைய மாதிரியங்களைக் கேள்விக்குட்படுத்தின. அவ்வாறு உட்படுத்தியதனால், முதலாளித்துவ அமைப்பைப் பேணுவதற்கும் நியாயப் படுத்துவதற்கும் வேண்டியதான, பண்பாட்டு மேலாண்மை பற்றிய கருத்துக்கள் தோன்றின. ஆங்கிலம் பேசும் உலகில், மார்க்ஸீய விமர்சனத்தின் மறுமலர்ச்சி இலக்கியமும் வரலாறும் (Literature and History) போன்ற சஞ்சிகைகள் மூலமாகவும் பெண்நிலை வாத இலக்கியக் குழுமம் போன்றவற்றின் தொழிற்பாட்டுக்கும் உதவுவதாகவும் அமைந்தது. அத்துடன் 1970ல் சசெக்ஸ் பல்கலைக் கழகத்தில் நடத்தப்பெற்ற கருத்தரங்கின் செல்வாக்கு, சுயபிரகடன மார்க்ஸீயவாதிகளுக்கு அப்பாலேயும் சென்றது. இதன் புலமைத்துவ மேம்பாடு மூன்று அறிஞர்களோடு இணைத்துப் பேசப்படும். பிரித்தனில் றேமன்ட் வில்லியம்ஸ், அவருடைய முன்னாள் மாணவர் றெறி ஈகிள்றனும், அமெரிக்காவில் ஃபிரெடறிக் ஜேம்ஸனுமே அவ்வறிஞர்கள் ஆவர். (Criticism and Literary theory- 1890 to the present- Longman, 1996.)

மேலே தரப்பட்ட கருத்தில் எடுத்துக் கூறப்பட்டோருள் இருவர் பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஏனெனில் அவர்களின் கொள்கைகள் பற்றிய பரிச்சயம் வற்புறுத்தப்பட்டிருக்குமேல் நாம் நமது மண்ணில் மார்க்ஸீய இலக்கியம் வேர்விடுவதற்கான தடைகள் பற்றியும், வழிவகைகள் பற்றியும் அறிந்து மேலும் தொழிற்பட்டிருக்கலாம்.

முதற்பெயர் அந்தோனியோ கி

றாம்ஸ்சி. இவர் 1920களில் இத்தாலியில் பொதுவுடைமைவாதியாகத் தொழிற்பட்டவர். சிறை பிடிக்கப்பட்டவர். இவரது சிறைக் குறிப்புகள் 1970களிலேயே ஆங்கில மொழி பெயர்ப்பில் பரவத் தொடங்கின.

கிறாம்ஸ்சியின் கொள்கைப்படி முதலாளித்துவ மேலாதிக்கத்தின் மிகப்பெரிய ஆயுதம், பூர்ஷூவாப் பெறுமானங்களும் கருத்துநிலைகளும் 'மேலாண்மை' (Hegemony) பெற்றிருக்கும் முறைமை ஆகும். கிறாம்ஸ்சியின் கருத்துப்படி அரசு கருத்துக்களினால் பாதிக்கப்படுகிறது. அதற்கு மேலாக, கருத்துக்களைப் பாதிக்கிறது. அரசு என்பதற்குள் அரசின் அடக்குமுறை அம்சங்கள் மாத்திரமல்ல, அது தன்னையும் தான் பிரதிநிதித்துவப்படும் சக்திகளையும் நியாயப்படுத்திக் கொள்வதற்குப் பண்பாட்டையும், தொடர்புச் சாதனங்களையும் பயன்படுத்திக் கொள்கின்றது என்றார். இவரின் கொள்கைப்படி பண்பாட்டினூடாகவே ஆட்சியாளரின் அதிகாரங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அதனால், முதலாளித்துவ எதிர்ப்பு என்பது பிரதானமாகப் பண்பாட்டு நிலையில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு முயற்சியாகும்.

தென்னாசியாவிலுள்ள பொதுவுடைமை இயக்கங்கள் இந்த உண்மையை வந்தடைய மிக நீண்ட காலம் எடுத்துவிட்டன. சில இன்னும்கூட வந்து சேரவில்லை. சமூக நிறுவனங்களின் கருத்துநிலைகள் நம்மைத் தம்வயப்படுத்தி நிற்கின்றன.

தமிழகம் போன்ற பாரம்பரியமான பண்பாட்டுத்தளம் கொண்ட ஒரு சூழலில், அப்பண்பாட்டை எவ்வாறு பொதுவுடைமைக்கியைந்ததாக ஆக்குவதென்பது முக்கியமான ஒரு வினாவாகும். இந்தப் பண்பாட்டைப் புறக்கணித்துவிட்டு, பொதுவுடைமைச் சிந்தனையைத் தமிழ்நாட்டினுள்ளே கொண்டுவர முடியாது.

கிறாம்ஸ்சி பற்றி மேலும் ஒரு விரிவான நூல் வேண்டும். அது தமிழிலுள்ள மார்க்ஸீய எழுத்தாளனுக்குப் பாடப்புத்தகம் போல அமைதல் வேண்டும்.

றேமன்ட் வில்லியம்ஸ் (1921–1988) பண்பாட்டு நிலை ஆய்வில் முக்கிய இடம் வகிப்பவர். 'தளம்–மேற்கட்டுமானம்' என்ற கருத்திற் புதிய பரிமாணங்களை எடுத்துக் கூறி, தளம், மேற்கட்டுமானம் என்பவை ஒன்றுடன் ஒன்று ஊடாட்டங்கள் நிறைந்தவை என்றும், மேற்கட்டுமானத்துக்கு உரியதாகக் கொள்ளப்படும் பண்பாடு (கலை, இலக்கியம்) 'பௌதிக' நிலைப்பட்டது என்றும், அரசியலுக்கும், அழகியலுக்கும் உள்ள தொடர்பைக் கலை வடிவங்களின் சமூகவியல் ஆய்வு கொண்டு அறியலாமென்றும் வற்புறுத்துவார்.

பண்பாட்டின் தளத்தைப் புரிந்து கொள்ளாமல், பண்பாடு எவ்வாறு இயங்குகிறது என்பது பற்றிய சமூகவியல் நிலைப்பட்ட பூரண விளக்கம் இல்லாமல், புதிய கலை இலக்கியங்களை, புதிய கலை இலக்கிய நியமங்களை உட்புகுத்திவிட முடியாது என்பதும், நாம் எடுத்துக் கூறப் போவனவற்றை ஏற்றுக் கொள்வதற்கான ஒரு புலமைத்துவ, கருத்துநிலைத் தயார் நிலையை முதலில் பண்பாட்டுத் தளத்தில் ஏற்

படுத்திக் கொள்ளவேண்டும் என்பதும் மிக முக்கியமான அறிவுக் கையளிப்பாகும்.

இவ்வாறு நோக்கும்பொழுதுதான், தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படைச் சமத்துவம் பற்றியும், சனநாயகம் பற்றியும் வற்புறுத்திய ஜீவானந்தம் முக்கியமாகிறார்.

தமிழரிடையே பொதுவுடைமை வேர்விட வேண்டும் என்றால், அது தமிழ்ப் பண்பாட்டினுள் வேர்விட வேண்டும். தமிழ்ப் பண்பாட்டை நிராகரித்துவிட்டு, தமிழிற் கலை, இலக்கியத்தைத் தோற்றுவித்துவிட முடியாது. அந்தப் பண்பாட்டைத் தனது மேலாண்மைக்குள் வைத்திருக்கும் சக்திகளை இனங்கண்டு அவற்றைக் களைந்து தமிழ்ப் பண்பாட்டைச் சனநாயக மயப்படுத்துவது முதலாவது முக்கியமான கடமையாகும். அந்தப் பண்பாட்டுக்குள் உள்ள சனநாயக விரோத சக்திகளைக் கண்டறிந்து, அசமத்துவத்துக்கு ஊட்டம் கொடுக்கும் பெறுமானங்களைக் கிள்ளியெறிந்து சனநாயகப்பட்ட தமிழ் மூலம், மானுட முக்கியத்துவம் வலியுறுத்தப்படும் பொழுதுதான் தேசியத்தில் சர்வ தேசியத்தில் சர்வ தேசியத்தைக் காணலாம். சர்வ தேசியத்துக்கான உந்துதல் தேசியத்துக்குள்ளிருந்து வரும் வகையில் தேசியம் அமைதல் விளக்கப்படல் வேண்டும்.

மார்க்ஸீயத்தின் இந்த வற்புறுத்தல்களை எடுத்துக் கூறிய இலக்கிய விமர்சனச் சிந்தனைகளை எடுத்து மார்க்ஸீயத்தின் முக்கியத்துவத்தை மறுதலிக்க முனையும் கருத்து நிலைகளிலே கவனம் செலுத்தப்படலாயிற்று.

நமது சூழலில் மார்க்ஸீய விமர்சனம் என்பது முற்போக்கு/ பிற்போக்கு என்ற இருமை நிலைக்குள்ளே தள்ளப்பட்டு வாய்ப்பாட்டு நிலைப்பட்டதாக ஆக்கப்பட்டிருந்தது. புலமை ஊடாட்டங்களிலும் பார்க்க நிறுவன ரீதியான விதிப்புக்களே அதிகமாக விழுந்தது.

இத்தகைய ஒரு பின்புலத்திலேதான் நாம் இன்று 'பின் நவீனத்துவம்' (post- modernism) எனும் கருத்து நிலையை எதிர்கொள்ளுகிறோம்.

உலகின் இன்றைய வளர்ச்சி நிலையில் தென்னாசியப் பின்புலத்தில், இந்தியாவின் சமூக, பொருளாதாரப் பின்னணியில், தமிழ்நாட்டின் சமூக, பண்பாட்டுப் பின்புலத்தில் இது, எத்தகைய முக்கியத்துவம் பெற வேண்டுமென்பது பற்றிச் சிந்திப்பது அவசியமாகிறது.

இன்றைய நமது கலை, இலக்கியத் தொழிற்பாடுகளின் பொழுது, இது பற்றிய ஒரு தெளிவு இருத்தல் அவசியமாகிறது.

தமிழில் பின்– நவீனத்துவம் எனும் பொழுது 'நவீனத்துவம்' என்ற சொல் பற்றிய ஒரு கருத்து மயக்கம் நிலவுவதை முதலிற் குறிப்பிடல் வேண்டும். நாம் modernityக்கும் modernismக்குமுள்ள வேறுபாட்டை வெளிக்கொணரவில்லை. modernity என்பது நவீனமாம்– தன்மை, நிலையான modernism என்பது, இந்த நவீனமாம் தன்மை/ நிலை காரணமாகக் கலை, இலக்கியத்தில் ஏற்பட்ட வெளிப்பாடுகள், செல்நெறிகள் ஆகும். நவீனத்துவம் என்ற சொல் இன்று 'modernism'த்துக்குப் பயன்பட்டால் 'modernity'

யைக் குறிக்கத் திட்டவட்டமான ஒரு சொல் வேண்டும். 'modernity' தான் நவீனத்தின் சமூக நிலைமைகளைக் குறிப்பது.

post- modernity/ post- modernism என்பனவற்றில் முதலாவது சமூக நிலையைக் குறிப்பது, இரண்டாவது கலை, இலக்கிய நிலையைக் குறிப்பது.

பின்நவீனத்துவம் தன்னை நவீனத்துவத்தில் இருந்து பிரித்துக் காட்டுகிறது. 'பின்நவீனநிலைமை' ஏற்பட்டமை குறித்து லியோதார்க் என்பவர் முதலில் வற்புறுத்தினார். பின்னர் பின் அமைப்பியல் வாதக் கருத்துக்கள் சிலவும், குறிப்பாக ஃபூக்கோவின் கருத்துக்கள் (சமூக அதிகாரத்தின் தொழிற்பாடு பற்றி இவர் விளக்கியுள்ளார்.) அத்துடன் டெறிடாவின் கருத்துக்களும் (கட்டவிழ்ப்பு வாதம் இதன்படிக்கு அர்த்தம் என்பது நிச்சயமானதல்ல. அது பாடத்துக்குள் (text) பின்தள்ளப்பட்டுக் கொண்டே செல்லும் என்பது), பின்நவீனத்துவத்தின் இன்றைய கட்டமைப்புக்கு உதவியுள்ளன.

பின்நவீனத்துவ வாதம், அறிவொளிக் காலத்து (Enlightenment 18ஆம் நூற்றாண்டின் மெய்யியல் வலியுறுத்தல்கள்) நியமங்களான, பகுத்தறிவாண்மை (rationality), விடயநோக்கு (புறநிலைப் பார்வை– objectivity), உண்மை (truth) என்பவை சமூக சம்பிரதாயங்களாக மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படத்தக்கவை என்றும், இவற்றுக்கு உலகப் பொதுமையான பிரயோகம் இருக்க முடியாது என்றும் கூறும் அறிவு (Knowledge) என்பதிலும் பார்க்க 'அறிவு' ஏற்படுவது போன்ற ஓர் உணர்நிலை (Knowledge- effect)யே தோற்றுவிக்கப்படுகிறது என்றும், அது மொழி, வரலாறு, நினைவிலி நிலை போன்றவற்றால் ஏற்படுத்தப்படுகிறது என்றும் கூறும்.

இந்தச் சிந்தனை முறைமை உலகை மாறுபட்டதாக, வேறுபட்டதாக, நிலையற்றதாக, நிச்சயமற்றதாகக் காணுகின்றது. இது தொகுநிலைப் பொதுமைக் கூற்றுக்களை நிராகரிக்கிறது. (பெருங்கதையாடல்– Grand narrative மறுப்பு என்பது இதுதான். அதாவது எந்தவிதமான தொகுநிலை எடுத்துரைப்பும் இருக்க முடியாது என்பது இதன் வாதமாகும்.) நியாயங்கள் பன்முகப்பட்டவை என்பதையும், உண்மை என்பது ஓரிடத்திலேதான் இருக்க முடியும் என்பதையும் இது மறுதலிக்கிறது.

'Post- modernism' என்பது கலை வரலாற்றில் இடம்பெறும் முக்கிய கருதுகோளாகும். 1970களில் தோன்றிய சில கலைத்துறை வளர்ச்சிகள் இதன்கீழ் பேசப்படும். இதன் பிரதான பண்பு, பல்வேறு பாணிகளின் கலப்பு, உயர்வு, தாழ்வு, வடிவங்கள் என்ற பேதமற்ற இணைப்பு (செவ்வியல் இசையையும் சனரஞ்சக இசையையும் சரிநிகராக நோக்கல்) என்பவை முக்கியமான பண்புகளாகும். இது முதன்முதலில் கட்டடக் கலையிலேயே முக்கியத்துவம் பெற்றது. பின்னர் இசைத்துறையில் மிகுந்த பிரபல்யம் பெற்றது (MTV). இதில் ஆற்றுகைப்பாடு (performativeness) எப்பொழுதும் வற்புறுத்தப்படும்.

பின்நவீனத்தின் கருத்துப் பன்முகப்பாடு வற்புறுத்தப்பட்ட அளவுக்கு

அதன் வரலாற்றுப் பின்புலம் தமிழில் வற்புறுத்தப்படாது போனமை வருத் தத்துக்குரியதே.

இப்பொழுது படிப்படியாக, அந்த வரலாற்றுண்மை அறிஞர்களால் பதி வு செய்யப்படத் தொடங்கப் பெற்றுள் ளது.

பிரடெரிக் ஜேம்ஸன், பின்நவீனத் துவத்தை 'பிந்திய முதலாளித்து வத்தின்' (Late Capitalism– இது ஏணெஸ்ற் மென்டல் என்பாருடைய மதிப்பீடு. இப்பெயரில் அவர் ஒரு நூல் எழுதியுள்ளார் (London- 1975)) தர்க்க ரீதியிலான வெளிப்பாடு என் பார். இக்கால கட்டத்தை ரெறி ஈகிள்ற்றன் 'மேல் வளர்ச்சி பெற்று விட்ட முதலாளித்துவம்' (Advanced Capitalism) என்பார்.

உரையின் ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட சமகால முதலாளித்துவப் பண்புபற்றி இப்பொழுது நாம் மீண் டும் சிந்திக்க வேண்டும். பன்னாட்டு முதலாளித்துவத்தில் புவியியல் 'மை யம்' என ஒன்று இன்று இல்லை. 'ஒருமைய' நிலைப்பாட்டை அது எதிர்க்கிறது. நுகர்வுவாதம் (consumerism) பொதுப்படை நிலையை நோக் குவதில்லை. தனிநிலைத் திருப்தி யையே தளமாகக் கொண்டது. ஆனால் அது தனி நிலையைத் திருப்திப்படுத்தும் அதேவேளையில், ஆழமான பொதுமைப்பாட்டைக் கொண்டது பண்பாடு என்பது (கலை, இலக்கியம் நடவடிக்கைகள் உட்பட) இன்று பெருங் கைத் தொழில்கள் ஆகியுள்ளன. திரைப் படம், தொலைக்காட்சி, கேசட் விற் பனை என்பவை ஒரு புதிய கைத் தொழிலின் வீசுகரங்கள். இந்த பன் முகப்பாடு பொதுமையிலும் பார்க்க, தனித்துவத்தையே வற்புறுத்துவது. வர்க்கத்திலும் பார்க்க இனத்துவம் முக்கியமாகி விடுகிறது.

முதலாளித்துவத்தின் இன்றைய வளர்ச்சி நிலைதான், பின்நவீனச் சிந் தனை மரபை உண்டாக்கியுள்ளது. அது எதையும் நிலையானது என்று ஏற்க மறுக்கிறது.

இப்பொழுது இக்கட்டத்தில் நாம் செய்ய வேண்டியது யாது?

மார்க்ஸீயம் தரும் வரலாற்று, இயங்கியல் அணுகுமுறையைப் பயன் படுத்தி இந்த வாதத்தினை அதன் பின்புலத்தில், அதன் சூழமைவுக் களத்தில் (context) வைத்தல் வேண் டும். பிரதானமாகப் பார்க்க வேண்டு வது இது தோன்றுவதற்கான அடிப் படைக் காரணங்களையே அது தெளிவாகப் பல விடயங்கள் தெளி வாகும்.

இந்த அலசலை மேற்கொண்ட பொழுது நாம், இந்தக் கருத்துக்கள் தோன்றி வளர்ந்து வந்த மேனாட்டு நிலைமைகளையே மையப்படுத்தி னோம். மேனாடுகளிலுள்ள மார்க்ஸிஸ் டுகள் தங்கள் நாடுகளில் இப் பிரச்சினைகள் தலைதூக்கத் தொடங் கிய பொழுது தந்த விளக்கங்க ளையும், ஆய்வுகளையும் இதுவரை பார்த்தோம்.

இவை நமக்குப் பொருந்தாது என்று கை கழுவிவிட முடியாது. நாமும் இந்த 'பிந்திய' அல்லது 'மேல் வளர்ச்சி'யுற்ற முதலாளித்துவத் துக்குள்ளேதான் வாழ்கின்றோம்.

இந்த முதலாளித்துவம் எங்கள் பின்புலத்தில் எவ்வாறு தொழிற்படு கின்றது என்பது பற்றிய தெளிவு வேண்டும். அதற்குப் பண்பாடு பற் றிய அலசல் வேண்டும். அதனிலும்

பார்க்க முக்கியமானது நம்மிடம் இருக்க வேண்டிய 'நோக்குச் செம் மை'யாகும்.

நமது பண்பாட்டை ஏற்கவேண் டும் எனும் பொழுது நமது பண் பாடு என்பது எவ்வாறு கட்டுரு வாக்கம் பெற்று வந்துள்ளது என் பது பற்றிய தெளிவு வேண்டும். இங்கு ஏன் மதமும் மத நிறுவ னங்களும் முக்கியப்பட்டன. மதங் களை வெறுமனே வேண்டாம் என் று நிராகரிப்பதன் மூலம் உண்மை யை அறிய முடியாது. மதத்தின் பயன்பாடு எவ்வாறு அவசியமா யிற்று? அது எப்படி நிகழ்ந்தது? என்பன பற்றிய தெளிவு வேண்டும்.

அதற்கு நமது சமூகத்தின் கட்டு ருவாக்கம் பற்றிய தெளிவு மிக அவசியம்.

சமூகக் குழுமங்களைச் சட்ட ரீதியான அமைப்புக்களாக ஏற்றுக் கொண்டபின், சனநாயக வளர்ச்சி சாதிநிலைப்படுவதில் ஆச்சரியப்பட முடியுமா?

'நமது நாட்டின் பண்பு இதுதான்' என்ற முந்திய பொதுமைப்பாடுகளை நாம் நம்மீது திணித்துக் கொள்ளா மல், நமது சமூகம் பற்றிய மார்க் ஸீய ரீதியிலான ஒரு விவரிப்பை நாம் தொடங்க வேண்டும். நமது 'சமூக உருவாக்கம்' (Social Formation) எவ்வாறு நிகழ்ந்தேறியது என்பதை வகுத்தும் தொகுத்தும் பார்த்தல் வேண்டும்.

நமது சமூகத்தில் வறுமை நிஜ மாக இருக்கும் வரையில், அதிகா ரப் படிநிலை உண்மையாக இருக் கும் வரையில், அதிகாரப் படிநிலை உண்மையாக இருக்கும்வரையில், சனநாயக மயப்பாடு என்பது புரியப்

---

அன்பு இதயங்கள் அழகுத் தோட்டம். அன்பு இதயங்கள் அடி வேர்கள். அன்பு மொழிகள் மொட்டு கள். அன்புச் செயல்கள் கனிகள்.

– ஜான் ரஷ்யன்

முழுமையாக அறியப்பட்டு, முழு மையாய் மன்னிக்கப்பட்ட இதயத் தின் அழியாத தாகமே அன்பு.

– ஹென்றி வேன்டைக்

உண்மையே கடவுள். எல்லா அறங்களும் உண்மையைப் பின் தொடர்கின்றன.

– வால்மீகி

உயிர் அறிவு மயமானது: தூயது. உடல் மாமிச மயமானது: அழுக்கடைந்தது.

அப்படியிருந்தும் மனிதர்கள் இ ரண்டையும் ஒன்றாகக் காண்கிறார் கள். இதைவிட வேறு எதை அறியாமை என்று சொல்வது?

எந்த உயர்ந்த பொருளும் திடீர் என்று உண்டாக்கப்படுவதில்லை.

– எபிக் டெடஸ்

அறிவு இல்லாத கண்ணியம் பலவீனமானது: பயனற்றது.

கண்ணியம் இல்லாத அறிவு ஆபத்தானது: அஞ்சத்தக்கது.

– ஸேம்யல் ஜான்ஸன்

☞ அமெரிக்காவைச் சேர்ந்த ஓவின்ஸ் கோர்மிங் என்பவர் முதன் முதல் 1938ல் கண்ணாடி இழை நாரினைக் கண்டுபிடித்தார்.

❋❋❋

☞ 1628ல் இங்கிலாந்து விஞ்ஞானி யான வில்லியம் ஹார்வே என்பவர் முதன்முதல் மனிதனின் குருதிச் சுற்றோட்டத்தைக் கண்டறிந்தார்.

❋❋❋

☞ கண்டங்களின் நகர்வானது வருடத்திற்கு 2.5 செமீ. அளவில் இடம் பெறுகின்றது. இது எமது கைவிரல் நகத்தின் வளர்ச்சி வீதத் திற்கு சமனானதாகும்.

❋❋❋

☞ 1750ம் ஆண்டு அமெரிக்க விஞ்ஞானியான பென்ஜமின் விராங் லின் மின்னலில் மின்சக்தி இருப் பதை கண்டு பிடித்தார். அத்துடன் முதன்முதல் மின்சக்தி பற்றிய விளக் கத்தை வழங்கியவரும் இவரே.

❋❋❋

☞ 1939ம் ஆண்டு புரட்டாதி மாதம் 1ம் திகதி ஆரம்பித்து 1946ம் ஆண்டு புரட்டாதி மாதம் 2ம் திகதி அதிகாரபூர்வமாக முடிவுற்ற இரண்டாம் உலகப் போரின்போது 3 கோடி படைவீரர்கள் இறந்தனர்.

❋❋❋

படாத வரையில் இந்த வினாக்களை நாம் தவிர்க்க முடியாது.

மேல் வளர்ச்சியுற்ற முதலாளித்து வத்தின் விஸ்தரிப்புப் பற்றியும் அது நமது சமூகத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கம்பற்றியும் சிந்திக்கும் பொழுது தான் நாம் ஒரு முக்கிய விடயத்தை மறந்துவிடுகிறோம் என்பது புரிகி றது.

நமக்கு ஏறத்தாழ ஒன்றரை நூற் றாண்டு கால காலனித்துவ வரலாறு உண்டு. அந்தக் காலனித்துவம் நம்மை, நமது சமூக அமைப்பை மாற்றியுள்ளது. நமக்குப் புதிய விட யங்களை அறிமுகம் செய்துள்ளது. (சட்டத்தின் முன் அனைவரும் சமம்.) அதேவேளையில் சில ஒவ்வா மைகளைச் சட்ட நிலைப்படுத்தியது. அது ஏற்படுத்திய தாக்கங்களை நேர் கோட்டிற் சொல்ல முடியாது. அவை சிக்கலானவை. உண்மையான கயிற் றரவுகள், கயிறைப் போன்ற பாம்புகள், பாம்பைப் போன்ற கயிறுகள்.

உலகின் 'மேல் வளர்ச்சி முதலா ளித்துவம்' நம்மை இந்தக் கால னித்துவ நிறுவக அமைப்புக்களின் ஊடாகவே வந்து சேருகிறது.

இது ஒரு சிக்கற்பாடான நிலை: சிக்கற்பாடான காலகட்டம். வரலாற் றுப் பொருள் முதல்வாதம் இந்தத் தெளிவுக்கான தேவையை நம்மீது திணிக்கிறது.

கலை, இலக்கியம் சமூக யதார்த்தம் பற்றிய தெளிவா ன அறிக்கையைத் தர வேண்டும். எது யதார்த்தம் என்ற தெளிவில் லாது, யதார்த்தத்தைச் சித்தரிக்கக் கூடாது: சித்தரிக்க முடியாது. யதார்த்தம் என்பது வெறுமனே 'உள்

எது' அல்ல. உள்ளதன் உண்மையைக் குறிப்பது யதா— அர்த்தம்— எது பொருளோ/ உண்மையோ அது. அதுபற்றிய தெளிவு இருத்தல் வேண்டும். (புரட்சியே நடக்காத நாட்டில் புரட்சிகர மாற்றங்களைக் கொண்டு வர முடியாது.)

பின்நவீனத்துவத்தைப் புறங்காண்பதற்கான வழி அதன் இயல்புக்கான காரணத்தை அறிவதுதான்.

மார்க்ஸீயம் என்பது மேலே, மேலே பாயும் நதி: அது பின் நோக்கிப் பாய்வதில்லை.

பின்நவீனத்துவத்தின் இயல்பைக் கண்டதன் பின்னர், நாம் எங்கே நிற்கிறோமோ அங்கிருந்து மேலே செல்லல் வேண்டும். அதுதான் progress— முற்போக்கு.

வரலாற்றின் தேவையில்லாது எதுவும் தோன்றாது. அவற்றின் உண்மைத் தன்மையைக் கண்டு, அவற்றுக்கு முகங்கொடுத்து மேலே செல்வதிலேயே முற்போக்குவாதம் தங்கி நிற்கிறது.

முற்போக்கு இலக்கியத்தின் பாதை மார்க்ஸீயத்தின் பாதை: அந்த வழிதான் நமது வழியாக வேண்டும்.

வேறுவழி இல்லையா என்றால் எங்கே சுரண்டல் இருக்கிறதோ, எங்கே சமவீனம் இருக்கிறதோ, எங்கே சம பகிர்வு இல்லையோ அவற்றை நீக்குவதற்கு மார்க்ஸீயத்தை விட மேலான ஒரு பாதையை மனிதன் இன்னும் கண்டுபிடிக்கவில்லை.

பாதையைத் தேவைகளுக்கமைய ஒழுங்கு செய்வதும், அது பாதையாக அமைவதும் முக்கியம்.

**(நன்றி: கணையாழி.)**

☞ பிரான்சை ஜேர்மனியிடம் இருந்து மீட்க அமெரிக்க, பிரித்தானிய, பிரஞ்சு படைவீரர்கள் இணைந்து நடத்திய D-Day தரையிறக்கம் ஆனி 1944இல் நிகழ்ந்தது.

***

☞ வியாபார நிலையங்களில் விற்பனைகளையும் பண வருமதிகளையும் பதிவு செய்யும் கருவியான Cash Register ஆனது 1879ல் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ரிட்டி என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

***

☞ இசைக் கருவியான பியானோ (Piano) 1709இல் இத்தாலியரான கிரிஸ்டோவொரி என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

***

☞ கி.மு. 3200 ஆண்டுக்கு முன் எகிப்தியரே முதன்முதல் நீரில் மிதந்து பயணம் செய்யலாம் என்பதை அறிந்தனர். 6000ம் ஆண்டுகளுக்கு முன் தடிகளாலும் விலங்குகளின் தோலாலும் கடகம் போன்ற அமைப்பில் செய்ததே மனித இனம் கட்டிய முதல் கப்பலாகும்.

***

☞ குமுழ் முனைப் பேனா 1938ம் ஆண்டு கங்கேரி நாட்டைச் சேர்ந்த பிரோ என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

# நாயன்மார் பதில்கள்

**?** தாங்கள்தான் வானொலிக் குடும்பங்கள் என்று சிலர் கூறுகிறார்கள். வானொலிக் குடும்பங்கள் என்றால் என்ன?

✍ தமிழர்கள் யாவருமே ஒரே குடும்பம்போல ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதுதான் ஐரோப்பிய வானொலிகளின் அடிநாதமாக ஒலிக்கிறது. தமிழ் வானொலிகளைப் பொறுத்தவரையில் இந்த நாதமானது வெறும் உதட்டளவிலான கோசம்மட்டுமோ என்று எண்ணத்தோன்றுகிறது.

தமிழர்கள் எல்லோரும் ஒற்றுமையாக இயங்கவேண்டும் என்பது தமிழ் வானொலிகளின் நோக்கமாகவோ அல்லது விருப்பமாகவோ இருந்தால், முதலில் இதை தமிழ் வானொலிகள் தங்களுக்கு இடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் வளர்த்தெடுப்பதன்மூலமாகவே செயலுருவாக்க முடியும்.

ஐரோப்பிய வானலைகளில் IBC, TRT, TBC என்ற மூன்று தமிழ் வானொலிகள் ஒலிக்கின்றன. இதைவிட கிழமையில் மூன்று தினங்கள் சன்றைஸ் என்ற தமிழ் வானொலி முதன்முதலாக ஐரோப்பிய வானலைகளில் ஆரம்பமாகியது. ஆனால் இவை தங்களுக்கிடையே எவ்வளவுதூரம் ஒத்துப்போகின்றன என்பது கேள்விக்குறியே.

நாட்டுப்பற்று, விடுதலை விருப்பு ஆகியவற்றில் ஒத்தப்போகின்றனவே என்று பலர் கூறலாம். ஆனால் இவைகளும் உண்மையான நோக்கத்தில் எழுந்தவையா அல்லது இவைகளைத் தொட்டால்தான் வானொலியை வெற்றிகரமாக நடாத்தலாம் என்ற நோக்கமோ யார் அறிவார்?

தமிழர்கள் யாவருமே ஒரே குடும்பம் என்றால் தமிழ் வானொலிகள் அந்தக் குடும்பத்தின் அணிகலன்கள் எனலாம். அணிகலன்களை பயன்படுத்துப வர்களைப் பொறுத்துத்தான் அதன் பயன்பாடுகளும் அமைகின்றன. ஒரு வானொலியைப் பொறுத்தளவில் அதன் ஊழியர்கள் அதனுடைய குடும்பம் எனலாம். அல்லது அதற்குமேலே என்றால் அதன் இரசிகர்களையும் அதன்

இரசிகர்களையும் அதன் குடும்பம் எனலாம். இதைத் தவிர, அந்த வானொலியில் பணியாற்றாமல், சில நிகழ்ச்சிகளில் தொலைபேசி மூலமாகவோ அல்லது 'ஃபக்ஸ்' மூலமாகவோ தமது பெயரை அவ்வப்போது புகுத்திவிட்டு, தாங்களே சம்பந்தப்பட்ட வானொலிக் குடும்பம் என்பவர்களை என்னென்பது? நல்ல விசா வைத்திருப்பது, கழுத்துக் கனக்கத் தாலி அணிவது, புத்தம்புதிய வாகனம் வாங்குவது, புதுவீடு வாங்குவது, ஸ்ரீலங்காவுக்குச் சுற்றுலாப் போவது போன்றனவெல்லாம் ஒரு சிலருக்கு 'பெருமை'யான செயல்களாகும்போது, அந்த வரிசையில் வானொலிக் குடும்பம் என்று சொல்லிக்கொள்வதும் 'பெருமை'யாக அமைந்தால்... அமைந்துவிட்டுப் போகட்டுமே!

◈ சிலரது பேச்சிற்கும் செயலுக்கும் சம்பந்தமில்லாமல் உள்ளது. இப்படிப்பட்ட அனுபவம் ஏதாவது உங்களுக்கு ஏற்பட்டதுண்டா?

✍ ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல... இப்படிச் சொன்னாலும் பூமிக்குத் தண்ணொளி பாய்ச்சும் நிலவுக்குக்கூட களங்கம் இருக்கிறதுதானே என்று கதைவிட கனக்கப்பேர் தயாராக உள்ளனர்.

பேசுவதற்கும் எழுதுவதற்கும் நிறைய வித்தியாசம் இல்லை. இரண்டிலும் கருத்துப் பரிமாற்றங்கள்தான் நிகழ்கின்றன. அந்தவகையில் எழுத்துக்கும் செயலுக்கும் சம்பந்தமில்லாத ஒரு விடயத்தை இங்கே பகிர்ந்துகொள்ளலாம் என்று நினைக்கிறோம்.

ஒரு எழுத்தாளர்... எழுத்தாளர் என்றவுடன் கதை எழுதுபவர் என்று நினைத்துவிடாதீர்கள். அதைத் தவிர மற்ற எல்லாவற்றையும் எழுதோ எழுதென்று எழுதித் தள்ளுபவர். மூச்சுக்கு முன்னூறு தடவை தாயகம், ஈழம், விடுதலை என்று முழங்கி, தானே முக்கிய சேவையாளர் என்று படம் காட்டிக்கொள்பவர் அவர். அவரைப் பலருக்குத் தெரிகிறதோ இல்லையோ, அவரது குரலைப் பலரும் அறிந்திருப்பார்கள்.

ஒருமுறை அவருடன் சேர்ந்து நாமும் ஒரு சிற்றுண்டிச்சாலைக்குச் சென்றிருந்தோம். சுயமாகத் தேவையானவற்றை எடுத்துவிட்டு காசாளரிடம் பணம் செலுத்தவேண்டும். அவரும் எம்முடன் சேர்ந்து 'சூப்' ஒன்று எடுத்தார். எங்கள் சார்பில் நண்பரொருவர் பணம் செலுத்த, அவர் 'சூப்'புக்கான பணத்தைச் செலுத்தாமல் எங்களின் கும்பலோடு கும்பலாகக் கலந்துவிட்டார்.

பேச்சும் எழுத்தும் செயல் என்று வரும்போது புலம்பெயர்ந்து வாழும் நாட்டுக்கு அல்ல என்று நினைத்துவிட்டார் போலும்.

அந்தச் 'சூப்'பின் பெறுமதி ஆகக்கூடியது ஐந்து மார்க் இருக்கும். அந்தக் கணத்தில் அந்த எழுத்தாளரின் எழுத்துக்களின் பெறுமதி அந்த ஐந்து மார்க்கிலும் தாழ்ந்துபோனதுதான் உண்மை. ஆகவே, அவரது எழுத்துக்கும் குரலுக்கும் செயலுக்கும் என்ன சம்பந்தம் உண்டு. நிலவுக்கும் களங்கம் உண்டென்று பூசி மழுப்பலாமா?

◈ சற்றலைட் தமிழ் வானொலிகளின் தோற்றத்தினால், புலம்பெயர்ந்து வாழும் தமிழினம் தமது தனித்தன்மைகளைப் பாதுகாத்துக் கொள்ளும் சாத்தியம் உண்டு என்கிறார்களே. உண்மையா?

✍ உண்மைதான். தமிழினம் தனக்கே உரித்தான தனித்துவத்தையும் விழுமியங்

களையும் மறக்காமலிருக்க தமிழ் வானொலிகளின் பங்கு மிக முக்கியமாக உள்ளது உண்மைதான்.

அதுமட்டுமல்ல....

தமிழினத்துக்கே உரித்தான குழுக்களாகப் பிரிந்து நிற்கும் போக்குக்கும் இந்த வானொலிகள் தெரிந்தோ தெரியாமலோ உடந்தையாவதும் உண்மை தான்.

ஒரு குழந்தை பிறந்த உடன் அப்பா பிள்ளை, அம்மா பிள்ளை என பாசம் காரணமாக பெற்றோரால் அந்தப் பிள்ளைக்கு பிரிவினை கற்பிக்கப்படுகிறது. அதனால் எந்தவிசயத்திலும் அந்தப் பிள்ளை வளர்ந்து பெரியவனானாலும் ஒருபக்கம் சார்ந்தே நிற்கப் பழகிக் கொள்கிறான். இது தொட்டில்பழக்கம்தான். சினிமாவைப் பொறுத்தவரையில் ஒரு நடிகனின் சார்பு, சமூகத்தைப் பொறுத் தவரையில் ஒரு மனிதனின் சார்பு, அரசியலைப் பொறுத்தவரையில் ஒரு கட்சியின் சார்பு என்று கண்மூடித்தனமாக ஆராய்ந்து பார்க்காமல் சரி பிழை யாவற்றையுமே ஆதரித்துக் கூட்டமாகப் பிரிந்துநிற்கும் போக்கும் தமிழனின் தனித்துவமாகத்தான் உள்ளது. இது சாதிப் பிரிவினை, நல்ல விசாக்காரன் என்ற பிரிவினை என்று தொடர்ந்து தற்போது நாங்கள் இந்த வானொலி இரசிகர் என்ற பிரிவினையில் வந்து நிற்கிறது. ஒரு வானொலி தவறு விட்டாலும் அதைப் போற்றி, அதன் இயக்குனரை மனம்போன போக்கில் உச்சத்தில் வைத்துக் கொண்டாடும் கூட்டங்கள் புலத்தில் பிரிந்துநிற்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இதற்கு சில வானொலி அறிவிப்பாளர்களும் தூண்டுகோலாகி தமது பணியே இது என்பதுபோல நடந்து கொள்கிறார்கள்.

ஒரு வானொலியில் தொலைபேசி போட்டி நிகழ்ச்சியொன்று இடம் பெற்றது. அறிவிப்பாளர் நேயரிடம் போட்டி விதிகள் தெரியுமா எனக் கேட்டார். அவரும் தெரியும் என்று விதிகளைக் கூறத் தொடங்கினார். எல்லாவிதிகளையும் கூறிவிட்டு, புதிதாக ஒன்றை சேர்த்தும் கூறினார். 'வேறு வானொலிகளில் பங்குபற்றுபவர்கள் இதில் பங்குகொள்ளக்கூடாது' என்பதே அது. அதற்கு அந்த அறிவிப்பாளர் சிரிப்பின்மூலம் தனது சந்தோசத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

தமிழினம், எல்லோரும் ஒரே குடும்பம் என்றெல்லாம் ஓயாமல் கூறும் அந்த வானொலி, ஏனைய வானொலி இரசிகர்களைப் பொறுத்தவரையில் தமிழ், தமிழினம், குடும்பம் என்பதெல்லாம் வெறும் சொல் அலங்காரம் என்கிறதா? பிரிந்து கூட்டமாக நிற்கும் தமிழனுக்கே சொந்தமான இயல்புக்கு தானும் விதிவிலக்கல்ல என்கிறதா?

இதிலிருந்து என்ன தெரிகிறது? வானொலிகள் நல்லதைச் செய்வதாகக் கூறிக்கொண்டாலும், தமக்குச் சார்பான கூட்டத்தைப் பிரித்தெடுப்பதிலும் முன்னிற்கின்றன என்பதுதான் தெரிகிறது. வாழ்க தமிழனின் தனித்தன்மைகள்!

☺😐☹ ☺😐☹ ☺😐☹ ☺😐☹ ☺😐☹

# ஹாட்ஸ் தமிழர் ஒன்றியம்
நடாத்தும்
## ஏழாவது ஆண்டு நிறைவையொட்டிய போட்டிகள்

❋ சிறுவர்களுக்கான சித்திரம், கட்டுரைப் போட்டிகள்
இவை வயதுக்கு ஏற்ப பிரிவுகளாக வகைப்படுத்தப்படும்.

❋ பெரியோர்களுக்கான சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகள்
கட்டுரை: A4 இன் 4 பக்கத்திற்குள் இருக்கவேண்டும்.
கவிதை: 20 வரிகளுக்குள் இருக்கவேண்டும்.
சிறுகதை: A4 இன் 6 பக்கத்திற்குள் அமையவேண்டும்.
இவை தாளின் ஒரு பக்கத்தில்மட்டுமே எழுதப்படல் வேண்டும்.

**விண்ணப்பக் கட்டணம்! போட்டிக்கு ஒருவருக்கு 2.50 DM**
**விண்ணப்ப முடிவு திகதி: *18.08.2000***

**ஆண்டுமலர் தமிழ்ச்சுடருக்கு உங்கள் ஆக்கங்களையும் (வாழ்த்துச்செய்தி, கவிதை, கட்டுரை, சிறுகதை, ...) 18.08.2000இற்கு முன் அனுப்பவும்.**

**ஆண்டுவிழாவிற்கு நிகழ்ச்சிகள் தரவிரும்புவோர் (நடனம், இசை, ...) 18.08.2000இற்கு முன் அறியத் தரவும்.**

**மேலதிக தொடர்புகளும் விண்ணப்பங்களுக்கான முகவரியும்:**
Harzer Tamilen-Verein e.V.,
Postfach 1766, 38607 Goslar.

## ஏழாவது ஆண்டுவிழா
15.10.2000ல் Goslar நகரில்



## ORIENT.TEXTILIEN UND SCHMUCK

- தரமான தங்க வைர நகைகள்
(916-22K உத்தரவாதத்துடன) தாராளமான
தெரிவில் சிங்கப்பூர் விலையில் SD130 வரி கூலி
உட்பட 176DM லிருந்து

- உயர்ரகபட்டுப்புடவைகள், பட்டுவேட்டிகள்,
சகலருக்குமான ரெடிமேற் ஆடைகள்

- புத்தம்புது டிசைன்களில் அலங்கார
ஆபரணங்கள்
பரதநாட்டிய உடைகள்

- கனம் தரமிக்க எவர்சில்வர் பாத்திரங்கள்
அன்பளிப்புப் பொருட்கள்

- பழைய பவுணிற்கு புதிய நகைகள்
உடனே மாற்றிப் பெற்றுக்கொள்ள

## Orient Textilien &Schmuck

**Am HBF Dortmund Königswall 16**
**44137 Dortmund**

☎ *0231-162377* தொலைநகல் *0231-147835*

உரிமையாளர்: எஸ்.ஜெகதீஸ்



மலிவுக்கு மறுபெயர் ரஜீதன் டிரேடர்ஸ்
❖ நினைக்க முடியாத மலிவு விலையில், புதிய டிசைன்களில் தாராள தெரிவுடன் 22 கரட் தங்க நகைகள்
❖ இந்தியா, சிங்கப்பூர், இலண்டன், அமெரிக்க றெடிமேற், ஆடைகைள்
❖ ஆசிய உணவுப் பொருட்கள்
❖ இலங்கை, இந்தியா கொலன்ட் மீன்வகைகள்.
❖ ஓடியோ, வீடியோ, சி.டிகள்
❖ பத்திரிகைகள், சஞ்சிகைகள்.
❖ அல்பா, ஞானம், ஈழம் தொலைபேசி அட்டைகள்.
Rajeethan Traders
Waller Heer str 7-28217 Bremen
Tel:0421/383650
Sielwal 3-28203 Bremen
0421/7942981